பொருளடக்கம்

இளமையும் கடமையும்

PDF ISLAM

009-240

உ. 188

அப்துற் - றஹீம்

யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ்
2, வடக்கு உஸ்மான் சாலை, முதல் மாடி,
(கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்),
தி. நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 2834 3385
E-mail : universal_pub2002@yahoo.co.in

பொருளடக்கம்

© நூல் உரிமை : யுனிவர்சல் பப்ளிஷர்ஸ், சென்னை - 17.

முதற் பதிப்பு : ஜூலை, 1961
இரண்டாம் பதிப்பு : ஜூலை, 1962
ஏழாம் பதிப்பு : ஜனவரி, 2001
எட்டாம் பதிப்பு : டிசம்பர், 2003

விலை : ரூ. 32.00

ஒளி அச்சு:

ஏகம் கம்ப்யூட்டர்ஸ்,
சென்னை - 600 005.
தொலைபேசி : 2852 9194

அச்சிட்டோர் :

மணி ஆப்செட்
112, **பெல்ஸ் ரோடு,**
சென்னை - 600 005.
தொலைபேசி : 2855 5249

பொருளடக்கம்

முன்னுரை

மாணவர்களுக்கென ஒரு தனி நூல் எழுத வேண்டும், அதன் மூலம் அவர்கள் வாழ்வாங்கு வாழ வழி வகுக்க வேண்டும் என்று எனக்கு நீண்ட நாட்களாக ஓர் எண்ணம் இருந்து வந்தது. எனினும் பல்வேறு அலுவல்களின் காரணமாக அதனை அப்பொழுது செய்ய இயலவில்லை. இறுதியாக அதற்கு ஓர் 'ஆகு நாளும்' வந்து சேர்ந்தது. ஒரு நாள் என்னைக் காண வந்த கல்லூரி மாணவர் ஒருவர், ''நீங்கள் எங்களுக்கென ஒரு நூல் எழுதுங்களேன்'' என்று கூறினார். அவர் அவ்வாறு கூறியது என் உள்ளத்தில் நீண்ட நாட்களாகச் சாம்பர் படர்ந்த கங்காக இருந்த அந்த எண்ணத்தைக் கொழுந்து விட்டு எரியுமாறு செய்தது. அதன் பலன்தான் இந்நூல்.

இதில் இளமையின் பெருமையையும் இளமையில் கல்வி கற்க வேண்டியதன் இன்றியமையாத் தன்மையையும் விரிவாக எடுத்துரைத்துள்ளேன். கல்வியை கல்விப் பயிற்சி, ஒழுக்கப் பயிற்சி, உடற் பயிற்சி என்று மூன்று பிரிவுகளாகப் பிரித்து அவை பற்றிய ஆதாரப் பூர்வமான செய்திகள் பலவற்றைக் கூறியுள்ளேன். முக்காலிக்கு எவ்வாறு மூன்று கால்களும் முக்கியமோ அது போன்றே இளைஞர்களுக்கு அம்மூன்றும் முக்கியம் என்பது என் கருத்து. ஆதலின் இளைஞர்கள் அம்மூன்றையும் ஒரே கண்கொண்டு நோக்கி அம்மூன்றிலும்

சிறந்து விளங்க வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன். ஏனெனில், ஒன்றில்லா விட்டாலும் மற்ற இரண்டும் சிறக்கா.

இந்நூல் இளைஞர்களுக்கு ஒரு வழி காட்டும் ஒளி விளக்காக விளங்க வேண்டும் என்ற வேணவாவுடன்தான் நான் இதனை எழுதினேன். அந்த வேணவாவை இறைவன் நிறைவேற்றித் தரவேண்டும். இதனை அவர்கள் படித்ததன் பின், இதனை அவர்கள் படிப்பதற்கு முன்பிருந்ததைவிடக் கல்வி, ஒழுக்கம், உடல் நலன் பேணல் ஆகியவற்றில் அதிகமான ஊக்கமும் உற்சாகமும் காட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

நாஜிகளின் வேத நூலாக இருந்த, 'மெய்ன் காம்பை'ப் பற்றி ஒருவர் குறிப்பிடும்பொழுது, ''அதிலுள்ள ஒவ்வோர் எழுத்தின் காரணமாகவும் 125 பேர்கள் உயிர் நீத்துள்ளார்கள். ஒவ்வொரு பக்கத்தின் காரணமாகவும் 4700 பேர்கள் உயிர் நீத்துள்ளார்கள். ஒவ்வோர் அத்தியாயத்தின் காரணமாகவும் 12,00,000 பேர்கள் உயிர் நீத்துள்ளார்கள்'' என்று கூறினார். அவ்வித நூலாக நான் இதனைக் கூற மாட்டேன். இது திட்டமாக இளைஞர்களுக்கு ஒரு போதும் தீமை இழைக்காது. நன்மை விளைவிக்கும். இதிலுள்ள ஒவ்வோர் எழுத்தாலும், பக்கத்தாலும், அத்தியாயத்தாலும் இளைஞர்கள் நன்மை பெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

கம்யூனிஸ்டுகளின் வேத நூலாகிய 'மூலதனம்' என்பதனை எழுதிய கார்ல் மார்க்ஸே, 'நான் ஒரு மார்க்ஸிய

பொருளடக்கம்

வாதியல்ல' என்று கூறினார். அவர் அவ்வாறு கூறியதன் காரணம் தாம் கூறியுள்ள கொள்கைகளில் பல தம்மால்கூடப் பின்பற்றப்பட இயலாது என்பதினாலேயன்றி வேறில்லை. அவ்விதப் பெரு நூலுடன் நான் இதனை ஒப்பிட்டுக் கூறவில்லை என்றாலும் நான் மீண்டும் இளமை பெறுவேனாயின் இதில் கூறப்பட்டிருக்கும் அறிவுரைகளை முழுக்க முழுக்கப் பின்பற்றுபவனாக இருப்பேன் என்பதில் ஐயமில்லை.

நல்லது. மாணவர்களே! ஏதேதோ கூறி நான் உங்களின் பொன்னான நேரத்தை வீணாக்கிவிட்டேன். இப்பொழுது நூலைப் படியுங்கள்! படித்துப் பயன் பெறுங்கள்!!

- அப்துர்-றஹீம்

பொருளடக்கம்

பொருளடக்கம்

1. இளமையின் சிறப்பு 7

2. கல்வியே கருந்தனம் 20

3. பயனளிக்கும் கல்வி 42

4. கல்வியில் கருத்து 65

5. ஒழுக்கப் பயிற்சி 79

6. தேர்வும் தயாரிப்பும் 96

7. உடல் நலன் பேணல் 120

இளமையும் கடமையும்

இளமையின் சிறப்பு

தலைவர் அவர்களே! இளைஞர்களே!!

தலைவர் அவர்கள், சில நாட்களுக்கு முன் என்னிடம் வந்து இப்பள்ளியில் பயிலும் மாணவர்களாகிய உங்களுக்கு சில வெள்ளி மாலைகள் வந்து அறிவுரை பகர்ந்துவிட்டுச் செல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். ''என்னை ஏன் அதற்கு அழைக்கிறீர்கள்? அதற்குத் தகுதிபடைத்தோர் எத்தனையோ பேர் இருக்கிறார்களே. பேராசிரியர்களை, அறிஞர்களை அழைத்துப் பேசச் செய்யுங்கள். அவர்கள் தாம் அறிவு முதிர்ச்சியும் அனுபவ முயற்சியும் பெற்றவர்கள். அவர்கள் கூறும் அறிவுரைகள் மாணவர்களின் உள்ளத்தைத் தொடும் பான்மையைப் பெற்றிருக்கும்'' என்று கூறினேன்.

அதற்கு அவர்கள், ''தாங்கள் கூறுவதெல்லாம் சரிதான். ஆனால் தாங்கள் வந்து பேசுவதை எங்கள் பள்ளியின் ஆசிரியர் குழாமும், மாணவர் குழாமும் விரும்புகின்றன. ஆதலின் தாங்கள் எங்களின் வேண்டுகோளைத் தட்டிக் கழிக்காது வரத்தான் வேண்டும், வந்து அறிவுரை வழங்கத்தான் வேண்டும்'' என்று அன்பு ஆணையிட்டார்கள். அந்த அன்பு ஆணையை ஏற்றுக் கொள்வதைத் தவிர்க்க இயலாத நிலையில் அன்புப் பிணைப்பால் கட்டுண்டு இதோ உங்கள் முன் வந்து நிற்கிறேன்.

''மனிதர்கள் பிறருக்குத் தாராளமாக வழங்கக் கூடிய பொருள் உலகில் ஒன்று உளதென்றால் அது அறிவுரைதான்'' என்று அறிவிற் சிறந்த பிரெஞ்சு அறிஞன் ஒருவன் கூறிச் சென்றான். அவன் கூறிச் சென்றது அவன் காலத்துக்கு மட்டுமல்ல, எக்காலத்திற்கும் பொருத்தமான பொய்யா மொழியேயாகும். இவ்வாறு அது தாராளமாக வழங்கப் பெறுவதற்குக் காரணம், வழங்குவோருக்கு அது எளிதாக அமைந்திருப்பதுதான். அறிவுரை வழங்குவது எளிது, ஆனால் அதனைப் பின்பற்றுவது கடினம்.

எனவேதான் ஆங்கில மாகவி ஷேக்ஸ்பியரும், ''நான் இருபது பேர்களுக்கு எதைச் செய்தால் நல்லது என்பது பற்றி இலகுவாக அறிவுரை பகர்ந்து விடுவேன். ஆனால் நான் அந்த இருபது பேர்களுக்கு அளித்த அறிவுரைகளைப் பின்பற்று வதில் அந்த இருபது பேர்களில் ஒருவனாக இருப்பதுகூட எனக்குக் கடினமான செயலாகும்'' என்று கூறிகிறார்.

ஆதலின் நான் இப்போது உங்களுக்குக் கூறப் போகும் அறிவுரைகளை நான் என்னுடைய பள்ளி வாழ்வில் முழுக்க முழுக்கப் பின்பற்றியதாகவோ, அதன் காரணமாக நான் உங்களுக்கு அறிவுரை பகர முன்வந்திருப்பதாகவோ நீங்கள் தவறாக எண்ணிக் கொள்ள வேண்டாம். நான் பெற்ற பட்டறிவுகளை உங்களுக்கு எடுத்துரைத்து, நீங்கள் தவறு செய்து உங்களின் முன்னேற்றத்தைத் தடை செய்து கொள்ளக் கூடாது என்றுதான் நான் கூற ஆசைப்படுகிறேன். எனவே நான் பட்ட அறிவையும், படித்த அறிவையும் சிந்தித்துத் தெளிந்த அறிவையும் உங்களுக்கு அளித்து ஏதோ என்னால் இயன்ற அளவு உங்களுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளேன்.

''அறிவுரைகள் வரவேற்கப் பெறுவதில்லை, அவை எவர்களுக்கு அதிகமாகத் தேவைப்படுகின்றனவோ அவர்கள் தாம் அவற்றை அதிகமாக வெறுக்கிறார்கள்'' என்று ஆங்கில

இலக்கிய மேதை ஜான்ஸன் கூறிச் சென்றார். ஆனால் நீங்களோ நேர்மாறாக அறிவுரைகளை வேண்டி என்னை இங்கு அழைத்துள்ளீர்கள். இது முன்னேற வேண்டுமென்ற உங்களுடைய பேரவாவையே எனக்கு எடுத்துக் காட்டுகிறது.

ஏனெனில் ஜெர்மானியக் கவிஞன் கதே கூறுவதுபோல, ''ஒருவன் நல்ல அறிவுரைகளை ஏற்றுக் கொள்வது அவன் தன்னுடைய திறமையை அபிவிருத்தி செய்து கொள்வதற்கான வழியே'' யன்றி வேறில்லை.

''நீ உன்னுடைய நண்பனுக்கு அவனுக்குத் தோதான ஆலோசனைகளை வழங்காதே! அவனுக்கு மிகவும் பயனளிக்கத் தக்க அறிவுரைகளை வழங்கு!'' என்று கூறினான் ஓர் அறிஞன். அவன் கூறிய வரைமுறையின்படி நின்று நான் உங்களுக்கு அறிவுரை வழங்கப் போகிறேன். அதற்காக நான் கடினமான முறையில் அறிவுரை வழங்கப் போவதில்லை. அவ்விதம் செய்வது கொல்லனின் பட்டறையால் பின்னுக்குத் தள்ளப்பட்ட சம்மட்டிபோன்று ஆகிவிடும் என்பதில் ஐயமில்லை.

எனவே மண்ணில் பெய்யும் பனிபோன்று என்னுடைய அறிவுரைகள் அமைய வேண்டும். அவ்விதம் அமையப் பெற்றால்தான் அவை உங்களின் உள்ளத்தில் ஆழமாகப் பதியும் என்பதை நான் நன்கு உணர்வேன்.

குளத்தில் செந்தாமரை மலர்ந்திருப்பது போன்று இங்கு உங்களின் இளமுகங்களைக் காணும்பொழுது என் உள்ளத்தில் ஒருவித இன்ப உணர்வு ஏற்படுகிறது. நானும் ஒரு காலத்தில் உங்களைப் போன்று இளமை எழிலுடனும் இளமை இன்பத்துடனும்தான் காணப்பட்டேன். ஆனால் அந்த இளமை எழில், இளமை இன்பம் என் பற்றிய வரையில் கானல் நீர்போன்று காணாமற் போய்விட்டனவே, இனிமேல் அவற்றை எப்பொழுதும் என்னால் எய்தப் பெற இயலாதே என்பதை எண்ணும்

பொழுது எனக்கென்னவோ ஒருவிதத் துன்ப உணர்வு தோன்றாமலில்லை.

இளமையைப் பற்றி அறிஞர்க்கறிஞன் அரிஸ்டாட்டில் குறிப்பிடும்பொழுது, ''அது மகிழ்ச்சி நிரம்பியது. துன்பத்தோடு யாதொரு தொடர்பும் கொள்ளாதது'' என்று கூறிகிறான். ஆம் இளமை, எழிலுடனும் இன்பத்துடனும் உலக வானில் சிறகடித்துப் பறக்கிறது. ஆகா! அப்பொழுதுதான் அது எவ்வளவு ஒய்யாரமாக, சுதந்திரமாக, இன்பகரமாகத் தன் பொழுதைப் போக்குகிறது! இதற்குக் காரணம் என்ன? இளமைக்கு யாதொரு பொறுப்புமில்லாத் தன்மை தான்.

ஆனால் அதற்காக இளமை, யாதொரு துன்பத்தையும் நுகர்வதில்லை என்று நான் கூறவில்லை. மாறாக இளமை, துன்பத்தை நுகர்கின்றதுதான். எனினும் இளமைத் துன்பம் கோடை மழை போலத் தற்காலிகமானதுதான் என்று எடுத்துரைக்க ஆசைப்படுகிறேன்.

இளமையைத் துள்ளித் திரிகின்ற காளைப் பருவம் என்று கூறலாம். இந்தக் காலைப் பருவமே வாழ்வின் காலைப் பருவமாகும் என்பது என் கருத்து. இந்த காலைப் பொழுதை நீங்கள் களிப்புடன் மட்டுமல்ல, பொறுப்புடனும் கழித்தால் தான் நீங்கள் உங்களுடைய நண்பகலை நன்றாகவும், மாலைப் பொழுதை வசதியோடும் கழிக்க இயலும். அதுவே வாழ்வின் விதைக்கும் காலமாகும்.

அக்காலத்தில் நீங்கள் உங்களுடைய வெற்றி வாழ்விற்கான விதையை விதைக்காது இருந்துவிடுவீர்களானால் பின்னர் உங்களால் எவ்வித அறுவடையும் செய்ய இயலாது போய்விடும். அதுவே உங்களுடைய வருங்கால வாழ்விற்கான கடைக் காலிடும் காலமாகும்.

அதிலே நீங்கள் நல்வாழ்வுக்குக் கடைக்காலிடத் தவறிவிடுவீர்களானால் பின்னர் உங்களால் ஒழுங்கான,

உயரிய வாழ்க்கைக் கட்டடத்தை எழுப்ப இயலாது போய்விடும். அதுவே உங்களுடைய வருங்காலப் போராட்டத்திற்கு உங்களையே நீங்கள் தயார்ப்படுத்தும் காலமாகும். அதிலே, உங்களையே நீங்கள் தயார்ப்படுத்திக் கொள்ளத் தவறி விடுவீர்களானால் உங்களால் வாழ்க்கையில் யாதொரு பெரும் போராட்டமும் நிகழ்த்த இயலாததோடு மட்டுமன்று பெரு வெற்றியையும் பெற இயலாது போய்விடும்.

உலகிலே அரும்பெரும் செயல்களை ஆற்றிய பெரியார்களெல்லாம் தங்களின் இளமைப் பருவத்தைப் பொன்னெனப் பேணி, கண்ணெனக் கருதி அதனை ஒழுங்கான முறையில் பயன் படுத்தியவர்கள்தாம்.அவர்கள் வருங்காலத்தில் பெருவாழ்வு வாழ வேண்டுமென்று விரும்பினார்கள். அந்த ஆர்வமே அவர்களை இளமையிலிருந்தே தங்களைத் தங்களின் வருங்காலப் பெருவாழ்விற்கு ஆயத்தம் செய்யுமாறு செய்தது.

அந்த ஆர்வமே பேரறிஞர் பெர்னார்ட்ஷாவை ஏழு வயதுச் சிறுவராக இருக்கும் பொழுதே ஷேக்ஸ்பியரின் நாடகங்களை மட்டுமல்ல, அரபிக் கதைகளையும் பைபிளையும் படிக்குமாறு செய்தது.

அந்த ஆர்வமே அறிவுலக மேதை பெர்ட்ரண்ட்ரஸ்ஸலை ஆறு வயதுச் சிறுவராக இருக்கும் பொழுதே இங்கிலாந்தின் சட்ட நிர்ணய வரலாற்றைப் படிக்குமாறும் 'இரவில் அதிகமாகப் படிக்கக் கூடாது' என்று அவரை வளர்த்தவர்கள் அவருக்கு இட்ட கட்டுப்பாடுகளையும் மீறி மெழுகு வர்த்தியை ஏற்றிப் படுக்கையருகில் வைத்துக் கொண்டு படிக்குமாறும் ஏதாவது ஆள் அரவம் கேட்டதும் அதனை அணைத்துவிடுமாறும் செய்தது.

அந்த ஆர்வமே அமெரிக்க அதிபராக இருந்த ஜெப்பர்ஸனை இளமையிலேயே பிளோட்டோவின் நூல்களை அவற்றின்

மூலத்திலேயே படிப்பதற்காகக் கிரேக்க மொழியையும், சிஸரோவின் சொற்பொழிவுகளை அவற்றின் மூலத்திலேயே படிப்பதற்காக லத்தீன் மொழியையும், மாண்டெஸ்க்யூவின் எழுத்தோவியங்களை அவற்றின் மூலத்திலேயே படிப்பதற்காகப் பிரெஞ்சு மொழியையும், ஆங்கிலப் பொதுச் சட்டங்களை அவற்றின் மூலத்திலேயே படிப்பதற்காக ஆங்கிலோ-சாக்ஸன் மொழியையும், ஆஸ்ஸியனுடைய கவிதைகளை அவற்றின் மூலத்திலேயே படிப்பதற்காகக் காலிக் மொழியையும் பயிலுமாறு செய்தது.

அந்த ஆர்வமே அமெரிக்க அதிபராயிருந்த கென்னடியை இளமையில் பள்ளியில் பயின்று கொண்டிருக்கும் பொழுதே ஓயாமல் நூல்களைப் படித்துக் கொண்டிருக்குமாறும் நடப்பு விவகாரங்களைவிட நாட்டு வரலாறு, புகழ்பெற்ற பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகள் ஆகியவற்றைப் படித்துக் குவிக்குமாறும் செய்ததோடு, ''அசட்டுத் தனமாகச் சுற்றித் திரிவதை அடியோடு நிறுத்திவிடுவதென்று நிச்சயமாக முடிவு செய்துவிட்டேன்'' என்று தம் தந்தைக்கு மடல் தீட்டுமாறும் செய்தது.

அந்த ஆர்வமே சலவைத் தொழிலாளரிடம் சலவைத் தொழிலைக் கற்றுக் கொள்ளுமாறு தம்முடைய அன்னையால் விடப்பட்ட அபூயூசுப் (ரஹ்) அவர்களைத் தம்முடைய அன்னைக்குத் தெரியாமல் அபூ ஹனீபா (ரஹ்) அவர்கள் வைத்திருந்த பள்ளி சென்று படிக்குமாறு செய்து பிற்காலத்தில் அறிஞர்க்கறிஞராக ஆக்கியது.

இவ்வாறு உலகில் பெருவாழ்வு வாழ்ந்த, வாழ்ந்து வரும் பெரியார்கள் எல்லாம் இளமையின் பெருமையை நன்கு உணர்ந்து செயலாற்றியவர்களே ஆவர்.

அமெரிக்கக் கவிஞர் லாங் பெல்லோ கூறுவது போல, ''இளமை வாழ்வில் ஒரே ஒரு தடவைதான் வருகிறது.''

அதுவும் நீடித்து நிலைத்து நிற்கிறதா என்றால் இல்லை. மின்னல் வெட்டி மறைவதுபோன்று ஒரு நொடியில் மறைந்து விடுகிறது. அவ்விதம் அது மறைந்துவிடுவது கண்டு நாம் வியப்புறுவதற்கில்லை. ஏனெனில் அவ்விதம் மறைந்து விடுவது தான் அத்னுடைய இயல்பு.

எனவேதான் பாரஸீக ஞானி உமர்கய்யாமும், ''இளமையின் இன்பம் கமழ் பக்கங்கள் மூடித்தான் தீர வேண்டும்'' என்று கூறுகிறார். ஆனால் அது மூடுவதற்குள் அதனை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்பவனே நற்பேறு பெற்றவனாவான். ஏனெனில் நாம் இப்போது எவ்விதம் இருக்கிறோமோ அதைவிட இளமையுடன் நம்மால் ஒரு போதும் இருக்க இயலாது.

எனவே தான் மத்திய காலத்தில் தோன்றிய பழமொழி ஒன்றும், ''இளைஞனே! நீ அறிவோடு பிழைத்துக் கொள்வாயாக! காலைப் பொழுது ஒளிர்ந்து கொண்டிருக்கும் பொழுதே நீ சிந்திக் கிடக்கும் மலர்களைப் பொறுக்கிக் கொள்வாயாக!'' என்று கூறுகிறது.

''வாழ்க்கையின் மிகவும் முக்கியமான பகுதி இளமைப் பருவம்தான்'' என்று மற்றோர் ஆங்கிலக் கவிஞரான கௌப்பர் என்பவர் கூறுகிறார். ''இளமைப் பருவம்தான் நாம் ஏதாவது செய்வதற்கும் நாம் எவரோ ஒருவராக உருவாவதற்கும் ஏற்ற காலம்'' என்று ஓர் அறிஞன் எடுத்துரைக்கிறான்.

''உங்களுடைய இளைஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்துள்ள எண்ணம் எதுவென்று கூறுங்கள்! அடுத்த தலைமுறையினரின் ஒழுக்கம் எதுவாக இருக்கும் என்று நான் கூறிவிடுகிறேன்.'' என்று சொல்லின் செல்வர் பர்க் முழங்குகிறார்.

இவையெல்லாம் எதனை உணர்த்துகின்றன? இளமையின் முக்கியத்தவத்தைத்தான். ஆனால் இக்கால இளைஞர்

களில் பெரும்பாலோர் இதனை உணர்வதாகவோ, உணர்ந்து செயலாற்றுவதாகவோ தெரியவில்லை. தங்களின் வாழ்க்கை யின் முதற் பகுதியாகிய இளமைப் பருவத்தை, தங்களின் வாழ்க்கையின் நடுப்பகுதியையும் கடைப் பகுதியையும் இழிவுடையதாக ஆக்கும் வகையில் வீணான களியாட்டங் களில் செலவழித்து வருகிறார்கள்.

இளமைப்பருவத்தின் தவறுகள் மனிதப் பருவத்தில் தீய ஒழுங்கங்களாகவும் முதுமையில் அவமானமாகவும் ஆகிவிடு கின்றன என்பதனையும் உணராது, தங்களின் பழக்க வழக்கங் களிலும் நடையுடை பாவனைகளிலும் யாதோர் ஒழுங்கோ, கட்டுப்பாடோ இன்றி வாழ்க்கையில் யாதொரு திட்டமோ, குறிக்கோளோ அற்றவர்களாகத் தங்களின் வாழ்க்கையை வீணே கழித்து வருகிறார்கள்.

இவர்களைப் பார்த்துத் தான் ஓர் அறிஞனும், ''தன்னுடைய வாழ்வின் வசந்த காலத்தை வீணே கழிக்கும் இளைஞனைப் பார்ப்பதே துன்பக் காட்சியாகும். வசந்த காலத்தின் இனிய நலன்களை அவன் இழப்பதோடு வானவர்களின் முழுத் தன்மையால் தன்னை அணி செய்து கொள்ளும் தன்னுடைய நேரத்தைத் தீய பண்புகளை மேற்கொள்வதன் மூலம் வீணாக்குகிறான்'' என்று வருத்தத் துடன் கூறுகிறான்.

ஆனால் இளமையோ எதனையும் ஆழ்ந்து சிந்திப்பது மில்லை, எவருடைய அறிவுரைக்கும் செவி சாய்ப்பது மில்லை, அது கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று திரிகிறது. முதியோர்கள் தங்களின் பட்டறிவுகளை எடுத்துரைப்பின், ''என்னவோ கிழடு கிடந்து தத்துப் பித்தென்று உளறிக் கொண்டுள்ளது. இந்தக் கர்நாடகங் களுக்கு என்ன தெரியும்?'' என்று அவர்களை இழிவாகக் கருதுகிறது. தான் எண்ணுவதும், சொல்வதுமே சரி என்று அப்பொழுது இளமை இறுமாப்புடன் எண்ணிக் கொள்கிறது.

எனவே தான் பிரெஞ்சுப் பேரறிஞன் ஒருவனும், ''இளமை என்பது தொடர்ச்சியான போதையாகும். அது அறிவின் காய்ச்சலாகும்'' என்று எடுத்துரைத்தான். எனவேதான் ரோமானியச் சண்டமாருதன் சிஸரோவும், ''அடக்கமும் அறிவு டைமையும் முதுமையைத் தழுவி நிற்பதுபோல முரட்டுத் தனம் இளமையைச் சார்ந்து நிற்கிறது'' என்று இயம்பினான்.

இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்தே ஆங்கிலச் சொற்செல்வன் பர்க்கும், ''இளமையும் அனுபவமின்மையும் உள்ளவர்கள் எப்பொழுதுதான் எச்சரிக்கையுடனும், தங்க ளுடைய கருத்துக்களுக்கு அதிக மதிப்புக் கொடாமலும் நடந்து கொள்வார்களோ அறியேனே'' என்று அலறுகிறான்.

இளைஞர்களின் தற்பெருமையும், தான் தோன்றித் தனமும் அவர்களுடைய வாழ்வையே பாழ்படுத்தி அவர்களை வருங்காலத்தில் துன்பப் படுகுழியில் தள்ளிவிடுகின்றன. ஆனால் இதனை அவர்கள் உணர்வதில்லை.

செஸ்டர் பீல்ட் பிரபு கூறுவது போல, ''குடிகாரர்கள் எவ்வாறு தங்களை நிதானத்தோடு நடந்து கொள்பவர்களாக எண்ணிக் கொள்கிறார்களோ அவ்வாறே இளைஞர்களும் தங்களை அறிவாளிகள் என்று கருதிக் கொள்கிறார்கள்.''

இவர்களை நோக்கித்தான் ஓர் அறிஞனும், ''ஓர் இளைஞன் தனக்கே தான் விதித்துக் கொள்ள வேண்டிய மேலான வரைமுறைகள் குறைவாகப் பேசுவதும் அதிகமாகச் செவியுறுவதும் செவியுற்றவற்றைப் பற்றிச் சிந்திப்பதும் தன்னுடைய சொந்தக் கருத்துக்களுக்கு அதிக மதிப்பளிக் காதிருப்பதும் தகுதி வாய்ந்த பிறருடைய கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதுமாகும்'' என்று அறிவுரை பகர்ந்தான்.

''சொந்தக் கருத்துக்களுக்கு அதிகம் மதிப்பளிக் காதிருப்பதும் தகுதி வாய்ந்த பிறருடைய கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதும்'' என்று அவன் கூறிய மொழிகளை நீங்கள்

ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் அதற்காக நாம் சுயமே சிந்திக்கக் கூடாது, நம் சுய சிந்தனைக்கே முற்றுப் புள்ளி வைத்து விடவேண்டுமென்று பொருளல்ல. நாமும் சிந்திக்க வேண்டும், தகுதி வாய்ந்த பிறருடைய ஆலோசனைகளையும் கேட்க வேண்டும் என்று தான் பொருள்.

ஏனெனில் அறிவிற் சிறந்த பேகன் கூறுவதுபோன்று, ''நண்பன் ஒருவன் கொடுக்கும் ஆலோசனைக்கும் ஒரு மனிதன் தனக்கேதான் கொடுத்துக் கொள்ளும் ஆலோசனைக் கும் இடையேயுள்ள வேற்றுமை நண்பன் ஒருவனுடைய ஆலோசனைக்கும் முகஸ் துதிக்காரனுடைய ஆலோசனைக் கும் இடையேயுள்ள வேற்றுமை போன்றதே'' யன்றி வேறில்லை.

இளமை, சில மாய ஆற்றல்களைப் பெற்றிருக்கிறது. அந்த மாய ஆற்றல்களின் கொடும் பிடியிலிருந்து எவன் தப்பிப் பிழைத்துத் தன்னுடைய ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றை உருவாக்குவதிலும் தன்னுடைய கல்வியின் தரத்தை உயர்த்து வதிலும் தன்னுடைய ஆற்றலை அதிகப்படுத்துவதிலும் செலவழிக்கின்றானோ அவனே தன்னுடைய வருங்காலத்தில் உயர்ந்து நின்று பெருவாழ்வு வாழ்வான்.

அதற்கு மாறாக, கேளிக்கை விளையாட்டுக்களே பெரிதெனக் கொண்டு ஒழுங்காகப் பள்ளி செல்லாமலும் கல்வியில் கவனம் செலுத்தாமலும் பெற்றோர், பெரியோர் களின் அறிவுரைகளுக்குச் செவிசாய்க்காமலும் ஊர் சுற்றித்திரிகின்றவர்கள் பின்னர் வருந்தித் தவிப்பர். அவர்களுக்குப் பின் இருந்தவர்களெல்லாம் அவர்களைக் கடந்து வெகு தொலை முன் சென்று விட்டபொழுது அவர்கள் தாங்கள் பெரிதும் பின் தங்கிவிட்டதைக் காண்பார்கள்.

கல்வி பெறுவதற்கும் ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றை உருவாக்குவதற்கும் இளமையைப் போன்ற ஏற்ற காலம்

யாதொன்றுமில்லை. ''இளமையிலும் வெள்ளைக் காகிதத்திலும் எதுவும் விரைவில் பதிந்துவிடுகிறது'' என்று ஒரு பழமொழி உண்டு.

நம் தாய் மொழியை இளமையில் நாம் எவ்வளவு எளிதாகப் பேசக் கற்றுக் கொள்கிறோம். அதிலுள்ள எத்தனை சொற்கள் நம்முடைய உள்ளத்தில் நீங்காது பதிந்து விடுகின்றன. பின்னர் அவை எப்பொழுதாவது நம்முடைய உள்ளத்தை விட்டும் அகல்கின்றனவா? இல்லை. அப்பொழுது நமக்கு வேறு மொழி ஏதேனும் கற்றுத் தரப்பட்டால்கூட அதனை நம்மால் விரைவில் கற்றுக் கொள்ள இயலுகிறது.

பல்வேறு மொழிகள் பேசக் கூடியவர்களின் மத்தியில் ஒரு குழந்தை வளர்ந்தால் அது விரைவில் அத்தனை மொழிகளையும் பேசக் கற்றுக் கொள்வதைப் பார்த்திருக்கிறோம். அனால் வயதான பொழுது பிற மொழி ஒன்றைக் கற்றுக் கொள்வது என்பதே பெரும் சிரமமான செயலாக இருக்கிறது.

இந்தியாவின் நிதி அமைச்சராக இருந்த ஆர். கே. ஷண்முகம் செட்டியார் ஒரு தடவை காந்தி அடிகளைச் சந்தித்த பொழுது காந்தி அடிகள் அவரை நோக்கி, ''நீங்கள் ஹிந்துஸ்தானியை நன்கு கற்றுக் கொள்ளுங்கள்!'' என்று கூறிய நேரத்தில், ''அது இப்பொழுது என்னால் எவ்விதம் இயலும்? தங்களுடன் பத்தாண்டுக் கணக்காகப் பழகி வரும் இராஜாஜியால் கூடச் சரியாக ஹிந்துஸ்தானியைப் பயின்று கொள்ள இயலவில்லையே'' என்று கூறினார் அவர்.

காந்தியடிகளும் தம் அரசியல் அலுவல்களினூடே தமிழைக் கற்றுக் கொள்ளவும் சிறிது நேரத்தைச் செலவிட்டார். தென்னாப்பிரிக்காவில் வைத்துத் தாம் பெற்ற தமிழ் அறிவைப் பின்னர் வளர்ச்சியுறச் செய்ய முயன்றார். எனினும் பயன் என்ன? அவரால் சில தமிழ்ச் சொற்களைத் தவிர்த்து அதிகம் பயின்று கொள்ள இயலவில்லை.

ஒரு தடவை காந்தியடிகள் காரைக்குடிக்கு வந்திருந்த சமயம் அவர் தமிழில் ஏதாவது எழுதி தமிழிலேயே கையெழுத்துப் போட்டுத் தந்தால் அவர் சேர்க்கும் நிதிக்குப் பணம் தருவதாக ஒருவர் கூறியபொழுது, ''நீர்மேல் எழுத்துக்கு நிகர் யாக்கை'' என்று எழுதி தமிழில் கையெழுத்திட்டார் அவர். இவ்வாறு அவர் தமிழில் எழுதிக் கொடுத்த போதினும் அவருடைய தமிழறிவு சிறிதாகவே இருந்தது.

சிலர் இளமையில் நல்ல பண்பாடுகளைத் தங்களின் பெற்றோர்களினால் கற்றுக் கொடுக்கப்படுகிறார்கள். அவற்றை அவர்கள் தங்களின் வாணாள் முழுவதும் பின்பற்றி வருகிறார்கள். அவற்றை அவர்கள் விடுவதுமில்லை; அவை அவர்களை விடுவதுமில்லை. சுருங்கக் கூறின், அந்த உயரிய பண்பாடுகளின் உருவமாக அவர்கள் விளங்குகிறார்கள்.

அமெரிக்க அதிபராய் இருந்த ஐஸன்ஹோவர் எச்செயலை ஆற்றுமுன்பும் இறைவனை இறைஞ்சும் வழக்கத்தை மேற்கொண்டிருக்கவும் பேசும்பொழுது, ''இறைவன் நாடினால்'' என்ற சொற்களைப் பயன்படுத்தவும் செய்தார் என்றால் அதற்குக் காரணம் அவர் சிறு வயதிலிருந்தே தம்முடைய அன்னையால் வளர்க்கப்பட்ட வளர்ப்பேயன்றி வேறில்லை.

சிலர் இளமையில் சில கூடா நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு தீய பழக்க வழக்கங்களை மேற்கொண்டு விடுகின்றனர். பின்னர் அவர்கள்பெரியவர்களான பொழுது அந்தத் தீய பழக்க வழக்கங்களின் தீய தன்மையை அறிந்து அவற்றை விட்டொழிக்க முயன்ற போதினும் அது அவர்களால் இயலாத செயலாகி விடுகிறது.

ஆதலின் எவர் தங்களுக்கு இறைவன் வழங்கிய இளமைப் பருவத்தின் பெருமையினை உணர்ந்து அதனை நல்ல முறையில் செலவழிக்கின்றார்களோ அவர்களே தங்களின்

வருங்காலத்தை நல்ல வருங்காலமாகக் காண்பார்கள். இல்லையெனில் இல்லை.

ஆதலினாலே இளமை என்பது நீங்கள் விரும்பியபோது அணிந்துகொள்ளும் புத்தாடை என்று கருதிக் கொள்ளாது சில ஆண்டுகளுக்கு மட்டுமே உடுத்தக் கூடியதும், விரைவில் கிழிந்துவிடும் தன்மையுடையதும் என்று உணர்ந்து அதனை எவ்வளவு நல்ல முறையில் பயன்படுத்த முடியுமோ அவ்வளவு நல்ல முறையில் நீங்கள் பயன்படுத்த வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.

வளவாழ்வுப் பெரு மரத்திற்கான வித்தை இப்பொழுதே விதைத்து அதற்கு நாள்தோறும் நீர் விட்டு வளர்த்து வர வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவ்விதம் செய்பவனே ஆங்கில அறிஞன் பேகன் கூறுவது போல, ''வயதால் இளைஞனாக இருந்த போதிலும் நேரத்தில் முதியவனாக இருப்பான்.'' அவ்விதம் செய்பவனுக்கே இளமை ஓர் அருட்கொடையாக இருக்கும். மற்றவனுக்கோ யூரிப்பிடிஸ் கூறுவதுபோல, ''இளமை ஒரு சாபக் கேடாகவே இருக்கும்'' என்பதில் ஐயமில்லை.

❖ ❖ ❖

2. கல்வியே கருந்தனம்

தலைவர்கள் அவர்களே! இளைஞர்களே!

சற்று நேரத்திற்கு முன் மாணவ நண்பர் ஒருவர் என்னைச் சந்தித்து, ''இளமையில் பள்ளி செல்லாமலும் பள்ளி சென்றாலும் ஒழுங்காக அங்கு கல்வி பயிலாமலும், பள்ளி செல்ல வசதியில்லாமலும் இருந்த பலர் பிற்காலத்தில் பெருவாழ்வு வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறதே. அதைப் பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?'' என்று வினவினார். அவர் கேட்டது நியாயமான கேள்வியேயாகும்.

இவ்வாறு எச்சொல்லை யார் யார் வாய் கேட்பினும் அச்சொல்லின் மெய்ப்பொருளைக் காணும் வேட்கையை நான் பெரிதும் வரவேற்கிறேன். இத்தன்மை பாமர மக்களிடம் அமைந்திராது. அவர்கள் பெரும்பாலும் உணர்ச்சிக்கு வேலை கொடுப்பவர்களே அன்றி அறிவுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் அல்லர்.

எனவே தான் ஹிட்லர் தன்னுடைய 'மெய்ன் காம்பில்' அவர்களை, ''தலை காலியாகவுள்ள செம்மறியாட்டு மந்தை'' என்று குறிப்பிட்டு, ''பொய்யின் பெருமையே அதனை நம்பச் செய்வதிலேதான் இருக்கிறது. தந்திரமான, தொடர்ச்சியான பிரச்சாரத்தின் மூலம் சுவர்க்கம்தான் நரகமென்றும் நரகம் தான் சுவர்க்கம் என்றும் பாமர மக்களை நம்பச் செய்ய இயலும். பாமர மக்களின் எளிய தன்மையின் காரணமாக அவர்களிடையே சிறிய பொய்யைவிடப் பெரிய பொய் மிகவும் வன்மை வாய்ந்ததாக உள்ளது.

ஏனெனில் அவர்கள் சிறிய விஷயங்களில் அடிக்கடிப் பொய் சொல்கிறார்கள். ஆனால் பெரிய பொய்யைக் கூறப் பெரிதும் நாணுகிறார்கள். எனவே பெரிய அபாண்டத்தைக் கண்டு ஐயுறும் எண்ணமே அவர்களுக்கு ஏற்படுவதில்லை. உண்மையை இவ்வளவுதூரம் திரித்துக் கூறும் இழிந்த இயல்பினனாக ஒருவன் இருப்பான் என்று அவர்கள் எண்ணவே மாட்டார்கள். எனவே ஒரு பொய் எவ்வளவுக்கெவ்வளவு பெரிதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது மக்களால் நம்பப்படும்'' என்று கூறுகிறான்.

ஹட்லர் கூறியதுபோன்ற பாமரக் கும்பல் நீங்கள் அல்ல என்பதை நான் நன்கு உணர்வேன். எனவே நான் அன்றும் வரலாற்று உண்மையைத் தான் கூறினேன். இன்றும் வரலாற்று உண்மையைத் தான் கூறப் போகிறேன். என் பேச்சை நீங்கள் ஆழ்ந்து கவனிப்பதோடு அதிலுள்ள நிறை குறைகளை நன்கு சிந்தித்துப் பகுத்தறியும் பான்மையினராகவும் இருக்க வேண்டும்என்று நான் ஆசைப்படுகிறேன். இந்தப் பகுத்தறியும் பான்மை வேண்டுமென்றுதான் போதி மாதவரும் தம்முடைய மாணவர்களிடம் கூறினார். ''என்னுடைய கட்டளைகளை மரியாதைக்காக ஏற்றுக் கொள்ளாதீர்கள்! பொன்னை நெருப்பிலிட்டுச் சோதிப்பது போன்று அவற்றைச் சோதித்துப் பாருங்கள்!'' என்று அவர் கூறினார். அவ்விதமே நானும் உங்களிடம் கூறுகிறேன்.

அவ்விதமே பிளேட்டடோவின் மாணவராகிய அரிஸ்டாட்டில் செய்தார். தம்முடைய ஆசிரியரின் கருத்துக்கள் பல அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே பிளேட்டோவின் இறப்புக்குப்பின் அவருடைய அகாடமி போன்று தாமும் 'லைஸியம்' என்ற பெயருடன் ஒரு பள்ளி நிறுவி, தம்முடைய கருத்துக்களை மக்களுக்கு எடுத்துரைத்தார். அவ்விதமே உங்களுடைய கருத்துக்களைத் துணிச்சலுடன் எடுத்துரைக்கும் மனப்பான்மை உங்களிடம் வளர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

மக்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். ஒரு வகையினர், முன்னேற வேண்டுமென்ற ஆசையுடன் இளமையிலேயே தங்களை அதற்காகத் தயார்ப்படுத்திக் கொள்பவர்கள். அவர்களைப் பற்றியே நான் அன்றைய தினம் பேசினேன்.

மற்றொரு பிரிவினரோ இளமையில் எவ்வித வேணவா வுமின்றித் தங்களுடைய வாழ்க்கையைக் கழித்து விட்டுப் பின்னர் வயதேறப் பெற்றதும் அறிவு விளக்கம் பெற்று, தங்களின் பொறுப்பை உணர்ந்து செயலாற்றி வாழ்க்கையில் வெற்றி கண்டவர்கள்.

மூன்றாவது பிரிவினரோ, இளமையிலும் சரி, நடு வயதிலும் சரி, முதுமையிலும் சரி, யாதொரு வேணவாவு மின்றித் தங்களின் வாழ்க்கையை வீணே கழித்துவிட்டு, மாய்ந்தொழிபவர்கள். பெரும்பாலான பாமர மக்கள் இந்த மூன்றாவது பிரிவையே சேர்வார்கள்.

நண்பர் கூறியதுபோன்று, இளமையில் பள்ளிக்கு ஒழுங்காகச் செல்லாமல் போக்கிரிப் பையன்களுடன் சேர்ந்து ஊர் சுற்றித் திரிந்த ராபர்ட் க்ளைவ் பிற்காலத்தில் இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசின் கொடியை ஏற்றினான் என்பதை நாம் நன்கு அறிவோம்.

அமெரிக்காவின் தலை சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராகிய மார்க் ட்வைனைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டி ருக்கலாம். உலகத்திலே பிறந்த எந்த எழுத்தாளனும் ஈட்டாத அவ்வளவு பெரும் செல்வத்தைத் தம்முடைய பேனாவின் மூலம் ஈட்டிய எழுத்தாளர் அவர்.

அவர் இறந்து இன்று அரை நூற்றாண்டாகிய போதிலும் அவருடைய நூல்களின் வாயிலாகவும், திரைப்பட உரிமை மூலமாகவும் வானொலி உரிமை மூலமாகவும் அவருடைய வழித் தோன்றல்களின் கருவூலகத்தில் வெள்ளி வெள்ள மல்ல, தங்க வெள்ளம் பாய்ந்தோடிய வண்ணமுள்ளது.

அவர் இளமையில் ஓர் அடங்காப் பிடாரியான பையனாகவே இருந்தார். அவரைப் பற்றி அவர் அன்னை குறிப்பிடும்பொழுது, "எங்கள் குடும்பத்திலுள்ள அனைவரும் எனக்குத் தந்த துன்பத்தைவிட என் மகன் எனக்கு அதிகத் துன்பத்தைத் தந்தான்." என்று கூறிகிறார். பள்ளிக்குச்செல்லுமாறு அவருடைய தந்தை அவனைக் கட்டாயப்படுத்தியதன் காரணமாக அவன் எவருக்கும் சொல்லாமல் வீட்டை விட்டு வெருண்டோடியதும் உண்டு.

அவனுடைய தந்தை அவனுடைய பன்னிரண்டாவது வயதில் இறந்ததும் அவன், தான் தன்னுடைய தந்தையார் உயிரோடிருக்கும் பொழுது அவருக்கு அடங்கி நடக்க வில்லையே என்று தன்னையே தான் நொந்து கொண்டு தேம்பித் தேம்பி அழுதான். அப்பொழுது அவனுடைய அன்னை அவனை அணுகி, 'மகனே! அழாதே! நடந்தது நடந்துவிட்டது. உன்னுடைய தந்தையோ தம்முடைய காலத்தை முடித்துக் கொண்டு சென்றுவிட்டார். நீ செய்த தவறுகளுக்கு அழுதபோதினும், அழாதிருந்தபோதினும் அவருக்கு இனி உன்னால் எவ்விதப் பயனும் ஏற்படப் போவதில்லை. இப்பொழுது நான் உன்னிடமிருந்துஓர் உறுதி மொழி வேண்டுகிறேன்.'' என்று கூறினாள்.

அதற்கு அவன், ''நான் உங்களுக்கு எதைப் பற்றியும் எப்பொழுதும் உறுதி மொழி அளிக்கத் தயார். ஆனால் பள்ளிக்கு மீண்டும் செல்லுமாறு மட்டும் உறுதி மொழி என்னிடம் கேட்காதீர்கள்! என்று கூறினான்.

இவ்வாறு கூறிய அவன் பின்னர் பள்ளி செல்ல வில்லை. ஓர் அச்சு நிலையத்தில் வேலைக்கு அமர்ந்தான். இரண்டாண்டுகள் அங்கு வேலை செய்தான். ஒரு நாள் அவன் அச்சு நிலையத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு தாள், காற்றிலே பறந்து வந்து அவனுடைய காலிலே சுழன்றது. அதனை எடுத்தான் அவன்; படித்தான் அதனை.

அதிலிருந்த செய்திகள் அவனுடைய உணர்ச்சியைக் கிளறி விட்டன.

அவ்விதமானால் அத்தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று நீங்கள் வினவலாம். ரூவான் சிறையில் பிரெஞ்சு நாட்டு வீரவனிதை ஜோன் ஆப் ஆர்க் சிறை வைக்கப்பட்ட செய்தி தான் அது. ஆம், அது ஜோன் ஆப் ஆர்க் வரலாற்றிலுள்ள ஓர் ஏடு. அந்தஏடு அவனுடைய விதி எழுதப் பெற்றிருந்த ஏட்டையே மாற்றியமைத்துவிட்டது.

வேண்டுமானால், வேறொரு சான்றும் உங்களுக்குத் தருகிறேன். இளமையில் பள்ளிக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஜோஸிப் ப்ராஸ"க்குப் பள்ளிப் படிப்பென்பதே வேப்பங்காய் போன்றிருந்தது. எனவே பள்ளிப் படிப்புக்கே ஒரு முழுக்குப் போட்டுவிட்டுத் தம்முடைய தந்தை வைத்திருந்த பட்டறை யில் பணியாற்றினார். சில ஆண்டுகள் கழித்து அவர் பெல்கி ரேடுக்குச் சென்று மற்றொரு பட்டறையில் பணி புரிந்தார். அப்பொழுதுதான் அவர் அரசியல் இயக்கங்களுடன் தொடர்பு கொண்டார். பின்னர் போரணியில் சேர்ந்து படிப்படியாக முன்னேறி ஒரு நாட்டின் சர்வாதிகாரியாகவே ஆகிவிட்டார்.

அவர் யார் என்று அறிய நீங்கள் ஆவலுறலாம். அவர் தாம் யுகோஸ்லாவியாவின் சர்வாதிகாரியாகிய மார்ஷல் டிட்டோ. 1916-ஆம் ஆண்டில் ரஷ்யர்களால் கைது செய்யப்பட்டு போல்ஷ்விக் புரட்சிக்குப் பின் விடுதலை செய்யப்பட்ட அவர் போலீஸாரை ஏமாற்றித் தாயகம் மீள்வதற்காகப் புனைந்து கொண்ட புனை பெயர்தான் டிட்டோ என்பது. அப்புனை பெயரே அவருக்கு நிலைத்து விட்டது.

இவ்வாறு பள்ளிப் படிப்பையே வெறுத்து பள்ளியை விட்டு வெருண்டோடியவர்கள் மட்டுமல்ல, பள்ளிப்படிப் பைப் பெற வசதி பெறாத பலரும் வாழ்க்கையில் பெரிதும் முன்னேறியுள்ளனர்.

ஜெர்மனியின் சர்வாதிகாரியாகி உலகை நடு நடுங்க வைத்த ஹிட்லர் படித்ததெல்லாம் அற்ப சொற்பப் படிப்புத்தான். அவனுடைய தாய் தந்தையர் இருவரும் அவனுடைய பதின்மூன்றாவது வயதிலேயே இறந்து விட்டதன் காரணமாக அவனால் மேற்கொண்டும் படிக்க இயலாது போய்விட்டது. ஓவியனாக வாழ்வைத் தொடங்கிய அவன் அதில் தோல்வியுற்றுச் சிற்பக் கல்லூரியில் சேர்ந்து படிக்க முயன்றபொழுது அதற்கான பூர்வாங்கக் கல்வித் தகுதியை அவன் பெற்றிராத தன் காரணமாக அவனுடைய விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப் படவில்லை.

அற்ப சொற்பப் படிப்புப் படித்தவர்களை விடுங்கள்! அறவே படிப்பில்லாத பலர் கோடி கோடியாய்ப் பொருளீட்டிப் பெருவாழ்வு வாழ்வதையும் கேள்விப்பட்டுள்ளோம்; பேரரசராய் விளங்கியதையும் கேள்விப்பட்டுள்ளோம்.

பெற்றோர்களால் பள்ளிக்கு அனுப்பி வைக்கப்பட்ட பலர் அங்கு தங்களுடைய இயல்புக்கு ஏற்ற பாடங்கள் போதிக்கப் படாததன் காரணமாகப் பள்ளிப் படிப்பையே வெறுத்துத் தங்களுடைய கவனத்தைத் தங்களுக்குப் பிடித்தமான வேறு துறைகளில் திருப்பிப் பிற்காலத்தில் பெருவாழ்வு வாழந்துள்ளார்கள் என்று நாம் படித்துள்ளோம்.

இலக்கணப் பள்ளிக்கு அனுப்பி வைக்கப்பட்ட இளம் டார்வினுக்கு இறந்த மொழிகளைப் பயில்வதும் இலக்கணம் படிப்பதும் விளக்கெண்ணெய் குடிப்பது போன்றிருந்தது. எனவே அவர் கல்வியில் சிறந்து விளங்கவில்லை. அவர் முன்னுக்கு வருவாரா என்பது பற்றி அவருடைய தந்தைக்கே பெரும் ஐயம் ஏற்பட்டுவிட்டது.

அவர் இளமையில் பூச்சிகளையும், உலோகங்களையும் சேகரித்துக் கொண்டிருப்பதைக் கண்டு, "ஏன் இவ்வாறு உன்னுடைய நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறாய்?"

என்றுஅவருடைய தலைமை ஆசிரியர் அவரைக் கடிந்து கொள்ளவும் செய்தார். ஆனால் அவர் பிற்காலத்தில் ஆய்ந்து கண்ட பரிணாம தத்துவக் கொள்கை உலகையே திடுக்கிடச் செய்துவிட்டது என்பதை நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள்.

இளம் வயதில் பள்ளிக்கு அனுப்பி வைக்கப்பட்ட க்ளாவியஸை அவருடைய ஆசிரியர்கள் ஒன்றுக்கும் உதவாத மடையன் என்றுதான் கருதினர். பின்னர் ஓர் ஆசிரியர் அவருடைய கவனத்தை க்ஷேத்திரக் கணிதத்தில் திருப்பி விட்டார். என்ன வியப்பு! விரைவில் அவர் தம் காலத்திய கணித மேதைகளில் ஒருவராகி, கணிதம் பற்றி மட்டும் ஐந்து தொகுதிகள் எழுதினார்.

இவ்வாறு பள்ளியில் மண்டு என்று கருதப்பட்டவர்கள் பின்னர் மேதைகளாக விளங்குவதைக் கண்டுதான் அமெரிக்க அறிஞர் எமர்ஸனும், ''மடாலயங்கள் மகான்களை வெறுப்பது போலக் கல்லூரிகள் மேதைகளை வெறுக்கின்றன'' என்று கூறினார்.

அமெரிக்கா தந்த மற்றோர் அறிஞரான இங்கர்ஸாலும் ''கல்லூரி என்றால் என்ன? கூழாங்கற்களை ஒளிரச் செய்யவும் வைரங்களை ஒளி மங்கச் செய்யவும்கூடிய இடம்தானே'' என்று இழித்துரைத்தார்.

இளம் வயதில் மந்தமாக இருந்த பலர் வயதேறப் பெற்றதும் அறிவு கிளர்ந்தெழப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்ததையும் நாம் பார்த்துமுள்ளோம், படித்துமுள்ளோம்.

ஆங்கிலக் கதை மன்னராய் விளங்கிய ஸர் வால்டர் ஸ்காட் பள்ளியில் பயிலும்பொழுது படிப்பில் முதல்வராக விளங்க வில்லை, கடைசிப் பையனாகவே விளங்கினார். படிப்பில் எல்லோருக்கும் கடைசிப் பையன் அவராகவே இருந்தார். எனவே, அவரை அவருடைய ஆசிரியர்கள் 'முட்டாள் மூலை'

என்னும் இடத்தில் எப்பொழுதும் அமரச் செய்தார்கள். பிற்காலத்தில் அவர் தலைசிறந்த கதாசிரியராக விளங்கி இலட்சோப இலட்சமாகப் பொருளீட்டிய நேரத்தில் அவர் ஒரு தடவை தாம் படித்த அப்பள்ளிக்குச் சென்றார்.

அப்பொழுது, தாம் முன்னர் அமர்ந்திருந்த முட்டாள் மூலையில் ஒரு சிறுவன் அமர்ந்திருப்பதைக் கண்டு அவன்மீது பரிவு கொண்டு அவன் கையில் ஒரு பவுன் நாணயத்தை அன்பளிப்பாக வைத்து, ''நானும் ஒரு காலத்தில் இதே மூலையில் தான் அமர்ந்திருந்தேன், நீ இனிமேல் உரோஷத்துடன் படி! என்போல் நீயும் ஆவாய்'' என்று வாழ்த்தி விட்டுச் சென்றார்.

அமெரிக்காவின் தலை சிறந்த வழக்கறிஞராக இருந்த டேனியல் வெப்ஸ்டர், தொடக்கப் பள்ளியில் பயிலும் பொழுது எல்லாருக்கும் கடைசிப் பையனாகவே இருந்தார். அதன் காரணமாக, மற்ற மாணவர்களெல்லாம் அவரைப் பார்த்து நகையாடவும் செய்தார்கள். பள்ளியிலிருந்து திரும்பும் பொழுது அவர் அழுதுகொண்டே வீடு வந்து சேர்வார். தம்மால் படித்து முன்னேற இயலுமா என்று அவர் இளம் வயதில் அஞ்சினார். அவர் ஒரு நாள் அழுதுகொண்டு வீடு வருவதைப் பார்த்த அண்டை வீட்டுக்காரர் ஒருவர் அவர்மீது காட்டிய அனுதாபமும், அவருக்கு அளித்த உற்சாகமும் தான் அவரைப் பிற்காலத்தில் பெருவாழ்வு வாழுமாறு செய்தது.

இந்தச் சான்றுகளினால் நாம் அறியும் உண்மை என்ன? இளம் வயதில் பள்ளிக்குச் செல்லாது வெருண்டோடியவர்களும் சரி, பள்ளிப் படிப்பை வெறுத்தவர்களும் சரி, பள்ளியில் பயிலும் பொழுது வசதியற்று அற்ப சொற்பப் படிப்புப் படித்தவர்களும் சரி, படிப்பு வாசனையற்றவர்களும் சரி-பிற்காலத்தில் பொறுப்புணர்ச்சி பெற்றதும் தங்களுடைய அறிவு கிளர்ந்தெழப் பெற்றோ தங்களுடைய அறிவை

நூல்களைப் படிப்பதன் மூலம் அபிவிருத்தி செய்தோ பெருவாழ்வு வாழ்ந்தார்கள் என்பதுதான்.

உண்மை இவ்விதமிருக்க, அவறிவற்ற முட்டாள்கள் பெருவாழ்வு வாழ்ந்ததை, பெரும் செயலைச் சாதித்ததை நாம் கண்டும் அறியோம். கேட்டும் அறியோம். ஆனால் அறிவற்ற சிலர் குருட்டு அதிர்ஷ்டத்தின் காரணமாகவோ, தவறான வாணிபம்செய்ததன் காரணமாகவோ, வாரிசு இல்லாத தனவந்த உறவினர் திடீரென இறந்து விட்டதன் காரண மாகவோ, தனவந்தர் வீட்டில்மண முடித்துக் கொண்டதன் காரணமாகவோ பெரும் பொருள் பெற்றிருக்கலாம். ஆனால் அவர்களையெல்லாம் நான் வாழ்வில் வெற்றி பெற்றவர்கள் என்றோ பெருவாழ்வு வாழ்ந்தவர்கள் என்றோ கருத மாட்டேன்.

உலகத்திலே படியாத மேதைகள் இலட்சத்தில் ஒருவர் தாம் இருப்பர். அவர்களைப் பார்த்து, ''அவர்கள் எல்லாம் படிக்காமல் தானே வாழ்க்கையில் முன்னேறி இருக்கிறார்கள். அவ்விதமானால் நாம் ஏன் படிக்க வேண்டும்? நாமும் படிக்காது முன்னுக்கு வந்துவிடலாம்'' என்று நீங்கள் ஒரு போதும் தவறாக எண்ணிக்கொள்ளக் கூடாது.

அந்தப் படியாத மேதைகளிடம் சென்று, ''நான் படிக்கவா அல்லது படிப்பை நிறுத்திவிடவா?'' என்று நீங்கள் வினவுவீர்களானால், ''படி!படி!படி!'' என்று உங்களுக்கு அவர்கள் அறிவுறுத்துவார்கள் என்பதில் ஐயமில்லை. ஏனெனில் அந்த மேதைகள், தாங்கள் படியாததனால் தங்களுக்கு ஏற்பட்டுள்ள தடைகளை நன்கு விளங்கியுள் ளனர். அது மட்டுமன்று, அவர்கள் எவ்வளவுதான் மேதையாக இருந்தபோதினும் அவர்களைப் படித்த இனம் இழிவாக நோக்குவதையும் அவர்கள் உணராமலில்லை.

எனவேதான் படிக்காத பேரரசர்களான சார்லிமேனும், அக்பரும் அறிஞர்களைத் தங்களுடைய அத்தாணி மண்டபத்

திற்கு வரவழைத்து அவர்களுடன் உரையாடியும், அவர்களை நூலகளைப் படிக்குமாறு செய்து கேட்டுக்கொண்டிருந்தும் தங்களுடைய அறிவை அபிவிருத்தி செய்து கொண்டார்கள்.

இளமையில் வறுமையின் காரணமாக கல்வி பயில வசதியற்றிருந்த ஆண்ட்ரூ கார்னீஜி பின்னர் பேராசிரியர் களைத் தம்முடைய இல்லத்திற்கு வரவழைத்து அவர்களிடம் பெரு நூல்களைப் பயின்றார்.

ஆகையினாலே இளமையிலே ஒழுங்காகப் பள்ளி சென்று பயின்று தன்னுடைய அறிவை அபிவிருத்தி செய்து கொள்வது போல ஒருவன் தனக்கே தான் செய்து கொள்ளக் கூடிய நன்மை வேறொன்றுமில்லை. எனவேதான் அறிஞர்க்கறிஞர் களெல்லாம் கல்வியைக் கண்ணுக்கு நிகராகவும் கூறுகிறார் கள், கல்வியறிவற்றவனைப் பிணத்திற்கு நிகராகவும் கூறுகிறார்கள்.

ஓர் அறிஞன் கூறுவதுபோல், ''இருபதாண்டுகளில் பெறக்கூடிய அனுபவத்தைவிட ஓராண்டு படிப்பதனால் ஒருவன் அதிகமான அறிவைப் பெற்றுவிடுகிறான்.'' இல்லை யெனில் அவன் குருடன் போல, இருளிலே நடப்பவன் போல வாழ்க்கைப் பாதையில் தட்டுத் தடுமாறவேண்டி ஏற்படுகிறது. அதன் காரணமாக, அவன் பெரும் செயலாற்றிப் பெருவாழ்வு வாழ இயலாது போய்விடுகிறது. உலக அறிவு பற்றிய வரையில் அவன் குழந்தையாகவே இருக்கிறான். அவனால் முழு மனிதத் தன்மையை எய்தப் பெற இயலுவதில்லை.

இந்த உண்மையை நன்கு உணர்ந்துதான் சிந்தனை யாளன் செனேகாவும், ''இது காறும் மனித இனம் ஆற்றிய செயல்கள், பட்ட அனுபவங்கள் ஆகியவை அனைத்தும் நூல் உருவிலே திகழ்கின்றன. அவற்றை ஒருவன் அறியாதிருப்பது என்றென்றும் அவன் குழந்தையாக இருப்பதேயாகும்'' என்று எடுத்துரைக்கிறான்.

உலகிலே ஒருவன் மிக மிக வெறுக்கத் தக்க ஒன்று இருக்குமானால் அது அறியாமையேயாகும். எனவேதான், ''அறியாமையைத் தவிர வேறோர் இருள் இவ்வுலகிலே இல்லை'' என்று ஆங்கிலப் பெரும் கவிஞர் ஷேக்ஸ்பியர் கூறுகிறார். ''அறியாமையைத் தவிர வேறோர் அடிமைத்தனம் இவ்வுலகில் இல்லை'' என்று அமெரிக்க அறிஞர் இங்கர்ஸால் முழங்குகிறார். கல்வி அறிவைப் பெற்றிராததைவிடப் பிறக்காமலேயே இருந்து விடுவது மேலானதாகும்.

ஏனெனில், ''அறியாமையே துன்பத்தின் ஆணிவேராகும்'' என்று அறிஞர்க்கறிஞர் பிளேட்டோ எடுத்துரைக்கிறார். ஆம் அறியாமை துன்பத்தின் ஆணி வேராக மட்டுமன்று மூட நம்பிக்கைகள், மூடக் கொள்கைகள் ஆகியவற்றின் நச்சு வித்தாகவும் உள்ளது. அது சீனப் பேரறிஞர் கன்ப்யூஷியஸ் கூறுவதுபோல், ''மூளையின் இரவாக, திங்களோ விண் மீன்களோ அற்ற இரவாக இருக்கிறது.

ஆகையினால் இருள்மண்டிக் கிடக்கும் மூளையை ஒளிமயமாக ஆக்கி அவ்விதம் செய்வதன் மூலம் அதனைப் பலருக்கும் பயன்படுமாறு செய்வதற்கு ஒரே வழி கல்விக் கண்ணாடியை ஒருவனுக்கு அணிவிப்பதுதான். அதன் மூலம் அவன் உலகைப் பார்க்கிறான். தன்னுடைய அன்றாட வாழ்க்கையில் தனக்கு முன் என்ன நடக்கிறது என்பதைக் கவனிக்கிறான். எது பொய் என்பதைப் பிரித்தறிவதோடு எது மெய் என்பதையும் நன்கு விளங்குகிறான்.

உண்மையான ஓர் எண்ணம் அவனுடைய மூளையில் புகுந்ததன் காரணமாக அது வெளிச்சம் பெற்று அதற்கு முன் அவன் பார்க்காத பல்வேறு காட்சிகளையும் அவனால் பார்க்க இயலுகிறது. இவை மட்டுமல்ல. அவன் இறைவனுக்கு அஞ்சி நேர்மையாகவும், ஒழுங்காகவும் தன்னுடைய வாழ்க்கையை நடத்துகிறான். தன்னுடைய குறைகளை நன்கு உணர்ந்து

அவற்றை நிறைவு செய்ய அல்லும் பகலும் பாடுபடுகிறான். கற்றுக் கொள்ளத் தகுந்தவற்றைக் கற்றுக் கொள்வதோடு செயலாற்றத் தகுந்தவற்றைச் செயலாற்றவும் செய்கிறான்.

கல்வி விளக்கேந்தியவன் இது மட்டும் செய்வதில்லை. ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் கூறுவது போல, ''அவன் விண்ணை நோக்கிச் சிறகடித்தல்லவா பறக்கிறான்.'' அவ்வாறு செய்யாதவன் அறியாமைச் சிறையில் கிடந்து அவதியுறுகிறான். அவனுடைய வாழ்வே துன்பமயமாக ஆகிவிடுகிறது. அவனால் அவனுக்கு யாதொரு நன்மையும் இல்லை, பிறருக்கும் யாதொரு நன்மையும் இல்லாது போய்விடுகிறது.

எனவே கல்வியானது ஒருவனுக்கு அறிவை வழங்குவதோடு மட்டுமல்ல, அவனைப் பயனுள்ளவனாகவும், ஆற்றல் மிக்கவனாகவும் ஆக்குகிறது. எனவே தான் பேகன் என்ற அறிஞனும், ''அறிவே ஆற்றல்'' என்று கூறினான். அவன் என்ன? அவன் தோன்றுவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சுலைமான் என்ற தீர்க்கதரிசியும், ''அறிவுள்ளவன் வலுவுள்ளவன். அவன் வலுவை அதிகரிக்கச் செய்கிறான்'' என்று கூறிப் போந்தார்கள்.

ஆம். அறிவுள்ளவன் வலுவுள்ளவன்தான். அறிவற்றவன் எவ்வளவுதான் உடல் வலுப் பெற்றிருந்த போதினும் விரைவில் வீழ்ச்சியடைவான் என்பதில் ஐயமில்லை. ஆனால் அறிவுள்ளவனோ எவ்வளவுதான் மெலிந்தவனாக இருந்த போதினும் அவனே எல்லோரையும் மிகைத்து நிற்கிறான். சிறு முயல் ஒன்று கிழச் சிங்கம் ஒன்றை அழைத்துச் சென்று கிணற்றில் தள்ளிய கதையும் இதனையே வலியுறுத்துகிறது.

லெனினைப் பற்றி ஒருவர் குறிப்பிடும் பொழுது, ''அவர் எந்தக் கூட்டத்திற்குச் சென்றபோதினும் சரி, அந்தக் கூட்டத்திலுள்ளோர் அவருக்கு முற்றிலும் புதியவராக இருந்த போதினும்

சரி, அவர் அங்குச் சென்ற சில நிமிடங்களில் அவரே அவர்களின் தலைவராகிவிடுவார். அவர் கூறுவதற்கு மற்றவர்கள் செவி சாய்ப்பது மட்டுமல்லாது தலை சாய்த்து இணங்கிப் போய் விடும்படியாகவும் ஆகிவிடும். அவர் கூறுவதற்கெல்லாம் அவர்கள், 'தாங்கள் கூறுவது தான் சரி' என்று கூறி அவர்களே அறியாமல் அவரைத் தங்களின் தலைவராக ஏற்றுக் கொள்வார்கள்'' என்று கூறுகிறார்.

இவ்வாறு அவர் லெனினைப் பற்றிப் புகழ்ந்துரைப்பதற்குக் காரணம் என்ன? லெனினுடைய தனிப்பெரும் அறிவின் மூலம் மற்றவர்களின் அறிவெல்லாம் மண்டியிட வேண்டி ஏற்பட்டுவிடுகிறது. எனவே அறிஞன் எங்கிருந்தபோதினும் கண்டுபிடிக்கப்படுகிறான், மதிக்கப் பெறுகிறான். மற்றவர்களைவிட வலுவுள்ளவனாகக் கருதப்படுகிறான்.

சிலர், இயற்கையிலேயே அறிவுள்ளவர்களாக இருந்த போதினும் அவர்களுடைய அறிவை ஒளிரச் செய்வதற்குக் கல்வி இன்றியமையாதது என்பதில் ஐயமில்லை. உயர உயரப் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாவதில்லை. எவ்வளவுதான் மதிப்பு வாய்ந்த மாணிக்கக் கல்லாக இருந்த போதினும் அது சாணையில் கொடுக்கப் பட்டாலொழிய அது ஒளிர்வதில்லை.

நம்முடைய சிற்றூர்களில் எத்தனையோ பேர் இயற்கை அறிவு பெற்றவர்களாக இருப்பதைக் காண்கிறோம். பெரிய படிப்பாளிகள் கூட அவர்களுடன் பேசுவதற்குத் திணற வேண்டியுள்ளது. அவர்கள் விவகாரங்களை எடுத்துரைக்கும் பாங்கையும் பஞ்சாயங்கள் செய்து நீதி பகரும் பான்மையையும் பார்க்கும் பொழுது நமக்கே பெரும் வியப்பேற்படுகிறது, இவர்களுக்கு இவ்வளவு அறிவு எங்கிருந்து கிடைத்தது என்று.

எனக்குத் தெரிந்த ஒருவர் அற்ப சொற்பம் படித்தவர் தாம். எனினும் அவருக்கு அளவற்ற இயற்கை அறிவு இருந்தது. அவர் வாணிபம் செய்து வந்தார். அவரிடம் ஒரு பொருளை

வாங்க ஒருவன் வந்தால் அவன் அவர் கூறும் விலையைக் கொடுத்து அப்பொருளை வாங்காமல்போக மாட்டான். இவ்வளவுக்கும் அவர் அதிகமாகப் பேசுவதும் இல்லை. ஒரு சில சொற்களிலேயே அவர், தம் முன் பேசிக் கொண்டிருப்ப வரை மடக்கித் தம் வழிக்குக் கொண்டு வந்துவிடுவார். அவ்வளவு நாநயம் அவரிடம் அமைந்திருந்தது.

ஆனால் இவ்வாறு இயற்கையிலேயே பேரறிவு பெற்றி ருந்தவர்களெல்லாம் குடத்திலிட்ட விளைக்கேபோல் தங்களின் ஊரிலும் அதன் சூழலிலும் மட்டும் ஒளிர்ந்து விட்டுச் செல்லக் காரணம் என்ன அவர்களுடைய கல்வியில்லாக் குறைதான். உயர்தரக் கல்வி மட்டும் அவர்களுக்கு அளிக்கப் பெற்றிருந்தால் அவர்கள் குன்றின் மேலிட்ட சுடர்போல விளங்கிக் குவலயத்தையே அணி செய்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இப்பொழுது ஒரு கதை எனக்கு நினைவு வருகிறது. இரு செம்படவர்கள் வைகறையிலே எழுந்து தங்களின் தோணியைத் தண்டு வலித்துக் கொண்டு சென்றார்கள், மீன் பிடிப்புதற்காக. ஆனால் அவர்கள் எவ்வளவுதான் வேகமாகத் தண்டு வலித்தபோதினும் தோணி முன்னே செல்லவில்லை. எதிர்க்காற்றுத்தான் இதற்குக் காரணமோ என்று சிறிது நேரம் அவர்கள் ஐயுற்றார்கள். எனினும் எதிர்க் காற்றும் இப்பொழுது வலுவாக அடிக்கவில்லையே என்று அவர்கள் தெளிந்தார்கள்.

அதன்பின் அவர்கள் சிந்தித்துப் பார்க்கும் பொழுது சென்ற இரவு தாங்கள் தங்களின் தோணியைக் கரையிலே முளையடித் துக் கட்டி வைத்தது நினைவுக்கு வந்தது. உடனே தண்ணீரில் குதித்து, தோணியை முளையோடு பிணைத்திருந்த கயிற்றை அவிழ்த்து விட்டார்கள். அதன்பின் எளிதாகத் தண்டு வலித்துத் தோணியை நடுக் கடலுக்குச் செலுத்தினார்கள். அதே போன்றுதான் இயற்கை அறிவு பெற்றும் உயர்தரக் கல்வி பெறாதவர்களுடைய நிலை இருக்கிறது. அவர்களால்

தங்களின் வாழ்வில் பெரும் முன்னேற்றம் காண இயல்வ தில்லை.

ஒருவன் எவ்வளவு தான் அறிவுள்ளவனாக இருந்த போதினும் அவனும் தன்னுடைய அறிவை வளமுறச் செய்ய விரும்புவானாயின், வளர்ந்து வரும் அறிவுலகில் பின்னுக்குத் தள்ளப் படாமலிருக்க விரும்புவானாயின் அவன் பழம் பெரும் நூல்களை மட்டுமல்ல, புதுப் பெரும் நூல்களையும் படிக்க வேண்டும்.

எனவேதான் உரோமானியச் சண்ட மாருதன் சிஸரோவும் ''ஒரு நிலம் எவ்வளவுதான் வளமுடையதாக இருந்த போதினும் அதனை உழுது பயிரிடாது தரிசாக விட்டுவிடின் அதனால் எவ்வாறு எவ்விதப் பலனும் ஏற்படாது போய் விடுமோ அது போன்று படிப்பில்லாவிடின் மூளையும் பயனற்றதாக ஆகிவிடும்'' என்று குறிப்பிடுகிறான்.

எனவேதான் அறிஞர்களாக இருந்த பலர் தங்களின் இறுதி நாள்வரை படிப்பவர்களாகவே இருந்தார்கள். அவர்கள் அவ்வாறு செய்ததற்குக் காரணம் தங்களின் அறிவை அபிவிருத்தி செய்து கொண்டிருக்க வேண்டும், தங்களின் மூளையைத் துருப்பிடித்துவிட அனுமதித்து விடக் கூடாது என்று கருதியதேயாகும்.

தள்ளாத வயதில் லாஸைட்ஸ் என்பவர் க்ஷேத்திரக் கணிதத்தைப் பயின்று கொண்டிருப்பதைக் கண்ட ஒருவர், அவரை நோக்கி, ''ஏன் இப்பொழுது இதனைப் பயின்று கொண்டிருக்கிறீர்கள்?'' என்று வினவிய நேரத்தில், ''நான் இப்பொழுது இதனைப் பயிலாவிடின் பின் எப்பொழுது இதனைப் பயில்வது?'' என்று வினா விடுத்தவரிடம் வினா எழுப்பினாராம் அந்த முது பெரும் கிழவர்.

சிற்பத் தொழிலின் பேரரசராக விளங்கிய மைக்கேல் ஏஞ்சலோ தம் வாழ் நாள் முழுவதும் கூறிவந்த பொன்மொழி

என்னவெனில், "நான் இன்னும் பயின்றுகொண்டுள்ளேன்" என்பதேயாகும். இவ்வாறு முதுபெரும் கிழவர்களெல்லாம் செய்தபொழுது, செய்து வரும் பொழுது இளைஞர்கள் தங்களின் இளமைப் பருவத்தில் படிப்பில் கவனம் செலுத்துவது எவ்வளவு இன்றியமையாத கடமையாகும் என்று நான் கூறத் தேவை இல்லை.

"சலவைக் கல்லுக்கும் ஒரு சிற்பத்திற்கும் என்ன தொடர்புள்ளதோ அதே தொடர்புதான் கல்விக்கும் ஆன்மாவுக்கும் இருக்கிறது. சாதாரணமாக மனிதனிலே பெரும்பாலும் ஒளிந்துகிடக்கும் தத்தவ ஞானியையும், மகானையும், வீரனையும், அறிஞனையும், நல்ல மனிதனையும், பெரிய மனிதனையும் சரியான கல்வி வெளியே இழுத்து வெளிச்சத்திற்குக் கொணர்கிறது." என்று அடிஸன் கூறினார்.

அவரின் இப்பொன் மொழிக்கு மூலமாக அமைந்தது, "ஒவ்வொரு சலவைக் கல்லிலும் ஒரு சிலை பொதிந்துள்ளது. தேவையற்ற பகுதிகளைச் செதுக்கித் தள்ளிவிடின் அது தோற்றமளிக்கும்" என்று அரிஸ்டாட்டில் கூறிய இறவாவரம் பெற்ற பொன் மொழியேயாகும்.

ஆம். கல்வி என்ற சிற்றுளியால் தேவையற்ற பகுதிகளைச் செதுக்கித் தள்ளிவிடின் உண்மையில் மனிதன் தான் தோன்றுகிறான். இதனையே, "ஒரு மனிதன் கல்வியைப் பெறும் வரையில் மனிதனாக மாட்டான்." என்னும் ஓர் அறிஞனின் பொன்மொழியும் உறுதிப்படுத்துகிறது.

உலகிலேயே கல்வியைப் போற்றாத அறிஞர் பெருமக்கள் ஒருவரும் இல்லை. "சீனா சென்றேனும் சீர் கல்வியைப் பெறுக! என்று நபிகள் நாயகம் அவர்களும் கூறினர்.

"உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே."

என்று வடவாரியர் படை கடந்து நெடிய புகழ் பெற்ற நெடுஞ்செழியப் பாண்டியரும் கூறினார். "கற்கை நன்றே,

கற்கை நன்றே பிச்சைப் புகினும் கற்கை நன்றே'' என்று பிற்காலத்தில் தோன்றிய தமிழ்ப் பெருமகன் ஒருவரும் பாடிச் சென்றார்.

''இறைவன் நமக்கு அளித்தது இயற்கை வழியாகும். அவ்வழி செல்வதே கடமை வழி செல்வது என்று கருதப்படு கிறது. அவ்வழியை நமக்கு அளிப்பதே கல்வியாகும்'' என்று சீன ஞானி கன்ப்யூஷியஸ் கல்வி பற்றி நமக்கு விளக்கம் தருகிறார்.

''மனிதனுக்கு அவனுடைய ஆற்றல்கள்மீது அதிகமான ஆதிக்கம் வழங்குவதே கல்வியாகும்'' என்று அமெரிக்கப் பேராசிரியர் ஜான்டூவி எடுத்துரைக்கிறார்.

''மனிதனுக்கு அவனுடைய உடல், சமூக சூழ்நிலை களுக்கு ஏற்றவண்ணம் அவனுடைய செயல்களை அமைப்பதுதான் கல்வி'' எனப் பேராசிரியர் ஜேம்ஸ் கூறுகிறார்.

எனவே தான் உலகின் பல பகுதிகளிலும் பல பல்கலைக் கழகங்கள் தோன்றி மக்களுக்குக் கல்வியை அளிப்பதைத் தம் தலையாய கடமையாகக் கொண்டுள்ளன. பண்டு தொட்டு சீனாவில் மக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைக்கு ஏற்ற கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. அதன் காரணமாக அந்நாட்டு மக்கள் பல நூற்றாண்டுகளாகச் சிறந்த நாகரிகம் பெற்று விளங்கி வருகின்றனர்.

நம் நாட்டிலும் முற்காலத்தில் தக்ஷ சீலம், நாளந்தா, விக்கிரமசீலா, வல்லபி, நவதீபா, உஜ்ஜயினி, அமராவதி ஆகிய இடங்களில் சிறந்த பல்கலைக் கழகங்கள் இருந்து பணியாற்றி வந்தன என்று வரலாறு கூறுகிறது.

தக்ஷசீலத்திலிருந்த பல்கலைக் கழகத்தில் விஞ்ஞான மும், மருத்துவமும், கலைகளும் சிறப்பாகப் போதிக்கப்பட்டு வந்தனவென்றும் அங்குப் பாரத நாட்டின் பல்வேறு பகுதிகளி லிருந்து மட்டுமல்ல, மத்திய ஆசியாவிலிருந்தும் ஆப்கனிஸ்

தானிலிருந்தும் மாணவர்கள் கல்வி பயில்வதற்காக வந்து குழுமினார்கள் என்றும் அறிய வருகிறோம். பிரபுக்களுடைய மக்களும் பிராமணர்களுடைய மக்களும் ஆயுதமின்றியும் வழித்துணை இன்றியும் அங்கு வந்து கல்வி பயின்று வந்தார்கள் என்று ஜாதகக் கதைகள் கூறுகின்றன.

தக்ஷசீலத்திலிருந்த பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று பட்டம் பெறுவது மதிப்புடன் கருதப்பட்டு வந்தது, அங்கிருந்த மருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்ற மருத்துவர்கள் பெரிதும் மதிக்கப் பெற்றனர். கௌதம புத்தருக்கு உடல் நலம் குன்றிய போதெல்லாம் அவருடைய மாணவர்கள் தக்ஷசீலத்தில் படித்துப் பட்டம் பெற்ற சிறந்த மருத்துவர் ஒருவரையே அழைத்து வந்து மருத்துவம் செய்து வந்தனராம். இலக்கணப் பேராசிரியரான பாணினி அங்கேதான் கல்வி பயின்றார்.

நாளந்தா பல்கலைக் கழகத்தில் பதினாயிரம் மாணவர்கள் தங்கியிருந்து கல்வி பயின்று வந்தார்கள் என்றும் அங்கு தான் சீனப் பிரயாணி ஹ்யூவன் ஸாங் உயரிய சட்டக் கல்வி பயின்று பட்டம் பெற்றாரென்றும் பின்னர் அப்பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக ஆனாரென்றும் அறிய வருகிறோம். அதில் சேர்வது இலகுவாகவும் இருக்கவில்லை. குறிப்பிட்ட ஓர் அளவு படித்தவர்களுக்குத்தான் அங்கு இடம் கொடுக்கப்பட்டு வந்தது. அங்கு சீனாவிலிருந்தும், ஜப்பானிலிருந்தும், திபெத்திலிருந்தும், கொரியாவிலிருந்தும், மங்கோலியாவி லிருந்தும், புகாராவிலிருந்தும் மாணவர்கள் வந்து படித்து வந்தார்கள்.

அங்கு தத்துவ ஞானம் பற்றியும் மதம் பற்றியும் மட்டுமல்ல, சமூகக் கல்வியும் வாழ்க்கைக்குப் பயன்படத் தக்க மற்றக் கல்விகளும் போதிக்கப்பட்டு வந்தன. அங்கு ஒரு கலைக் கல்லூரியும் இருந்தது. விவசாயப் பிரிவும் இருந்தது. கால் நடைகள் பற்றிய கல்வியும் அங்குப் போதிக்கப்பட்டது.

அங்குப் பயின்று வந்த மாணவர்கள் பல்வேறு தலைப்புகள் பற்றியும் சொற்போர் நிகழ்த்தித் தங்களின் அறிவைப் பெருக்கி வந்தார்களென்றும் அறிய வருகிறோம்.

இந்தப் பல்கலைக்கழகங்களையன்றி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பல மடங்கள், குருகுலங்கள் இருந்து கல்விச் சுடர் கொளுத்தி வந்தன. காஞ்சியில் மகேந்திர பல்லவர் காலத்தில் தமிழ்க் கடிகையும் வடமொழிக் கல்லூரியும் இருந்து அறிவு பரப்பி வந்தன. தமிழ் மருத்துவக் கலையைப் பயில்வதற்காகப் போகரும் புலிப்பாணியும் சீனாவிலிருந்து நம் நாடு போந்தனர் என்றும், பின்னர் போகர் சீனா திரும்பிவிட்டார் என்றும் புலிப்பாணி இங்கேயே தங்கிவிட்டார் என்றும் கூறுவர்.

கிரேக்க நாட்டில் பிளேட்டோ ஏற்படுத்திய அகாடமி மக்களுக்கு அறிவு விருந்து வழங்கி வந்தது என்று நாம் அறிகிறோம்.

எகிப்து நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நிறுவப் பட்ட அல் அஸ்ஹர் பல்கலைக் கழகம் இன்றும் கல்வியின் இருப்பிடமாக அமைந்து பணியாற்றி வருகிறது. அல் அஸ்ஹரில் பயின்று வெளிவருவதே இப்போது ஒரு மதிப்பாகக் கருதப்படுகிறது. அங்குள்ள மார்க்க அறிஞர்களால் கொடுக்கப்படும் மார்க்கத் தீர்ப்புகள் இன்றைய தினம் முஸ்லிம் உலகத்தில் பெரிதும் மதிக்கப்படுகின்றன.

பக்தாதிலும் ஸ்பெயினிலும் பெரிய கல்லூரிகள் இருந்து கல்விப் பணியாற்றின. ஸ்பெயினிலிருந்த முஸ்லிம் கல்லூரி களில் பாடம் போதிப்பதற்காக அங்குச் சுழலும் பூமி உருண்டையும் வைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்தே கொலம்பஸ், பூமி உருண்டை வடிவமாக இருக்கிறது என்று அறிந்து கொண்டான் என்றும் அதை ஆதாரமாக வைத்துக் கொண்டே அவன் புது உலகத்தைக் கண்டுபிடித்தான் என்றும் நாம் அறிய வருகிறோம்.

ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தைப் பற்றி நீங்கள் நன்கு அறிந்திருக்கலாம். இங்கிலாந்தை ஆண்ட மகா ஆல்பிரட் மன்னரால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சிறு பள்ளியாகத் தொடங்கப்பட்ட அது கல்வியின் ஊற்றாக விளங்கி மக்களுக்கு அறிவுத் தாகம் தணித்து வருகிறது.

பிற்காலத்தில் அதே போன்று அமெரிக்காவிலும் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவிய ஒருவர் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்திற்கு வந்து அங்குள்ள புல்வெளி போன்று அருமையான புல்வெளி ஒன்றைத் தம்முடைய பல்கலைக் கழகத்தைச் சுற்றியும் உண்டு பண்ணவிரும்பினார்.

இதைப் பற்றி அவர் அந்தப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரிடம் வினவிய பொழுது, ''அதுவென்ன மிகவும் எளிதான செயல்தானே'' என்றாராம் அவர். ''எப்படி?'' என்றாராம் அந்த அமெரிக்கர், மிகவும் ஆவலுடன்.

அதற்கு ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் கூறினாராம், ''நிலத்தை நன்கு உழுது அதன்பின் புல்லின் விதையை அதில் தூவி நீர்விட்டு வாருங்கள்! புல் முளைத்து வளர்ந்ததும் வாரம் ஒரு முறை புல் வெட்டும் கத்தியால் அதனை ஒரே சமமாகக் கத்தரித்து வாருங்கள்! இவ்வாறு ஆயிரம் ஆண்டுகள் செய்து வாருங்கள்! இதேபோன்று புல்வெளியை நீங்களும் பெற்றுவிடுவீர்கள்'' என்று. இவ்வாறு ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தினர் தங்களின் பாரம்பரியத்தைப் பற்றிப் பெருமித முறுகிறார்கள்.

முற்காலத்தில் கல்வியின் பெருமையை உணர்ந்து உலகத்தின் பல்வேறு பகுதிகளில் பல கல்விக் கூடங்கள், பல்கலைக் கழகங்கள் இருந்து பணியாற்றிய போதினும் எல்லா மக்களும் கல்வி பயில வசதியளிக்கப் பெற வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது சில காலத்திற்கு முன்புதான். பொது மக்களின் நன்மைக்காக உழைக்கும் அரசாங்கக் கொள்கை

ஏற்பட்டு அதிகமான மக்களுக்கு அதிகமான மகிழ்ச்சியளிக்கும் தத்துவம் பின்பற்றப்படும் இக்காலத்தில்தான் ஏழை முதல் தனவந்தர்வரை எல்லாரும் இலகுவாகக் கல்வி பயில வாய்ப்பு களும் வசதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. அவ்விதம் வழங்குவது ஓர் அரசாங்கத்தின் தலையாய கடமை என்றும் கருதப்படுகிறது.

இதைப் பற்றி அமெரிக்க அதிபராக இருந்த தாமஸ் ஜெபர்ஸன் குறிப்பிடும் பொழுது, ''நம்முடைய சுதந்திரம் மக்களின் கைகளில்-அதுவும் ஒரு குறிப்பிட்ட அளவு கல்வி அறிவுள்ள மக்களின் கைகளில் இருக்கும் வரையில் பத்திரமாக இருக்க இயலாது. அந்தக் கல்வியை மக்களுக்குப் பரந்த அளவில் அளிப்பது அரசாங்கத்தின் கடமையாகும்'' என்று கூறுகிறார்.

இவ்வாறு கல்வியை மக்களுக்கு அளிப்பதுதான் தலையாய கடமையாக ஒவ்வோர் அரசாங்கமும் கருதிய போதினும் எத்தகைய கல்வியை அளிப்பது என்பதிலேயே அவை வேறுபடுகின்றன. கல்வியை அறிவுப் பயிற்சி, உடற் பயிற்சி, இயந்திரப் பயிற்சி என்று கார்ல் மார்க்ஸ் பிரித்ததற் கிணங்க சோவியத் அரசாங்கம் மக்களுக்கு இந்த மூன்று வகைப் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது.

அதிகமான புத்தகக் கல்வியை மக்களுக்கு வழங்குவது தவறு என்றும் அவர்களுக்கு உடற் பயிற்சி வழங்குவதற்கும் அவர்களின் உடல் நலத்தைக் கவனிப்பதற்கும் அரசாங்கம் முதல் இடம் கொடுக்க வேண்டும் என்றும் பெரும்பாலான மக்கள் அறியாமை இன்பத்தைத் தான் நுகர்ந்து கொண்டிருக்க வேண்டும் என்றும் அப்பொழுதுதான் அவர்கள் ஆள்வோருக்கு அடங்கி ஒடுங்கியிருப்பார்கள் என்றும் ஹிட்லர் கருதினான்.

எனவே அதற்கேற்றபடியே அவன் மக்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கினான. மக்களை கல்வியற்றவர்களாகவே

வைத்துக் கொண்டிருந்தான். இந்த அடிப்படையின்மீதே இன்றும் சில அரசர்களும் சர்வாதிகாரிகளும் தங்களின் கீழிருக்கும் மக்களுக்குச் சரியான கல்வி அளிக்காதிருக்கிறார்கள். முடியாட்சி நிலவும் சில நாடுகளில் ஒழுங்கான பல்கலைக் கழகம்கூட இல்லாதிருக்கிறது.

ஆனால் நம் நாட்டிலோ ஏராளமான பல்கலைக் கழகங்களும் கல்லூரிகளும் இருக்கின்றன. இன்னும் தோன்றிக் கொண்டும் இருக்கின்றன. அவற்றை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்தி உங்களுக்கும் நாட்டுக்கும் உகந்த பயனுள்ள பெருவாழ்வு வாழ வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

3. பயனளிக்கும் கல்வி

தலைவர் அவர்களே! இளைஞர்களே!!

சென்ற வெள்ளியன்று, எவ்வாறு அதிகமான மக்களுக்கு அதிகமான மகிழ்ச்சியை அளிப்பது என்னும் அடிப்படையில் அரசாங்கம் மக்களுடைய கல்வி பற்றிக் கவனம் செலுத்தி வருகிறது என்பதையும் அதன்படி எவ்வாறு அதிகமதிகமான பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் தோன்றிக் கொண்டிருக்கின்றன என்பதையும் எடுத்துரைத்தேன். நாகரிக அரசாங்கத்தின் முழு முதல் நோக்கமே இதுவாகத்தான் இருக்க வேண்டும்.

எனவேதான், ''ஓர் அரசாங்கத்தின் கடைக்கால் அதன் இளைஞர்களுக்குக் கல்வி பயிற்றுவதுதான்'' என்று டயோஜனிஸுஂம் கூறினான்.

''ஓர் அரசாங்கத்தின் முதல் நோக்கம் எல்லா மக்களுக்கும் கல்வி பயிற்றுவது தான்'' என்று நெப்போலியனும் எடுத்துரைத்தான்.

''இளைஞர்களுக்குக் கல்வி அளிக்கப்படவில்லை யானால் பேரரசுகள் கூட நீடித்து நிலைத்து நிற்க இயலாது என்று அரிஸ்டாட்டிலும் கூறிச் சென்றான்.

ஜேம்ஸ் கார்பீல்ட் தம்மை அமெரிக்க அதிபர் தேர்தலுக் கான வேட்பாளராகத் தேர்தெடுத்ததை ஏற்றுக்கொண்டு எழுதிய மடலில், ''சுதந்திரத்திற்கும் நீதிக்கும் அடுத்தபடியான முக்கியத்துவம் பொது மக்களுக்குக் கல்வி அளிப்பதற்கு

அளிக்கப் பெற வேண்டும். அது இன்றேல் சுதந்திரமோ நீதியோ நீடித்து நிலைத்திருக்க இயலாது." என்று எழுதினார்.

"மனிதர்களுக்குச் சிறைக் கூடங்களைக் கட்டுவதை விட பையன்களுக்குப் பள்ளிக் கூடங்களைக் கட்டுவது எவ்வளவோ மேலானது" என்று ஓர் அறிஞர் எடுத்துரைத்த இறவாவரம் பெற்ற பொன்மொழியும் எனக்கு இப்பொழுது நினைவுக்கு வருகிறது.

உலகத்திலே இதுவரை மக்கள் எத்தனையோ புதுப்புது விஷயங்களையெல்லாம் கண்டுபிடித்துள்ளார்கள், கண்டு பிடித்துக் கொண்டும் வருகிறார்கள். "ஆனால் மனிதன் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளிலெல்லாம் மிகவும் பெரியது எதுவெனில் எல்லோருக்கும் கல்வி போதிக்கக் கூடிய பள்ளிகளை ஏற்படுத்தியது தான்." என்று தாமஸ்மேன் என்ற அறிஞன் கூறினான். புகழ் மன்றத்தில் உள்ள அவனுடைய சிலையின் அடியில் அவனுடைய அழியா வரம் பெற்ற இந்தப் பெருமொழிதான் பொறிக்கப் பட்டுள்ளது.

ஆம், அவன் கூறியது முற்றிலும் உண்மை என்பதில் ஐயமில்லை. ஏனெனில் இந்தப் பொதுப் பள்ளிகளை அரசாங்கம் ஏற்படுத்திப் பொது மக்களுக்குக் கல்வி போதிக்க முன்வரவில்லையானால் உலகம் இவ்வளவு தூரம் முன்னேறி இருக்குமென்று நாம் கூற இயலாது.

முற்காலத்திலெல்லாம் செல்வர் மக்களும் உயர்குல மக்களும் தாம் படிக்க வசதி பெற்றிருந்தனர், படித்தும் வந்தனர். எனவே ஒரு சில இனத்தார் தாம் படித்து முன்னேறி னார்களேயொழிய மற்றவர்களெல்லாம் தாழ்ந்த நிலையிலே தான் இருந்தார்கள். அவர்களைக் கைத்தூக்கி விடுவதற்கு எவரும் முன்வரவில்லை. அவர்களும் தாங்களாகவே படித்து முன்னுக்கு வரவும் முடியவில்லை.

இப்பொழுது நம் நாட்டில் பொதுப் பள்ளிகள் ஏராளமாகத் தோன்றிக் கொண்டிருந்தபோதினும் அவற்றில் ஏராளமான

மாணவர்கள் பயின்று கொண்டிருந்தபோதினும் ஏழை மாணவர்கள் இலவசமாகக் கல்லூரிக் கல்வி பெறக்கூடிய நாளை நான் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டுள்ளேன். அவ்வித நாள் வரும் பொழுது நம் நாடு எல்லாத் துறைகளிலும் மிகவும் முன்னேறி இருக்கும் என்பது என்னுடைய திடமான நம்பிக்கை.

இன்று பார்த்தோமானால் எத்தனையோ ஏழைப் பையன்கள்-அறிவும் திறனும் வாய்க்கப் பெற்றவர்கள்- அந்த அறிவையும் திறனையும் அவர்களுக்கேற்ற உரிய துறையில் செலுத்தினால் உலகத்திற்கே ஓர் அணிபோன்று விளங்கக் கூடியவர்கள்- அவ்வித வாய்ப்பைத் தங்களின் ஏழ்மையின் காரணமாகப் பெற இயலாது முடமாக்கப்பட்டிருக்கிறார்கள். அது கண்டு என் உள்ளம் குருதி கொட்டுகிறது. பணம் படைத்தவர்களாகவது அவர்களின் படிப்புக்கு வசதி செய்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. இந்த நிலையில் அரசாங்கமும் அவர்களின் உயர் படிப்புக்கு வசதி செய்து கொடுக்கவில்லையானால் அவர்களுடைய நிலை என்னவாகும் என்று சிந்தித்துப் பாருங்கள்!

பொதுப் பள்ளிகளிலும் அங்கு பின்பற்றப்படும் போதனா முறைகளிலும் சில குறைகள் இருக்கத் தான் செய்கின்றன. அவற்றை ஷேக்ஸ்பியர் முதல் பெர்னார்ட்ஷா வரை எடுத்துரைத்துத்தான் சென்றுள்ளார்கள். ஷேக்ஸ்பியர் ஓரிடத்தில் பேசும் பொழுது, ''நீங்கள் இலக்கணப் பள்ளிகளை நிறுவியதன் மூலமாக நாட்டின் இளைஞர்களை நாசமாக்கி விட்டீர்கள்'' என்று கூறினார்.

''பொதுப் பள்ளிகள் துன்பம் தருபவையாக, தொற்று நோயாக, வெறுக்கத் தக்கவையாக ஆகிக் கொண்டுள்ளன. மனித இனத்தின் கண்களும் மூக்குகளும் இதனை நன்கு கண்டு, முகர்ந்து உணர வேண்டும்'' என்று ஆங்கில இலக்கிய மேதை கௌப்பர் எச்சரிக்கை விடுக்கிறார்.

"கல்வியானது அறிவுக்கும் எண்ண சுதந்திரத்துக்கும் பெரும் தடைக் கல்லாக இருக்கிறது." என்று பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் எடுத்துரைக்கிறார்.

"பள்ளிக் கூடங்களிலிருந்து எழும் இந்தக் கூச்சல்க ளெல்லாம் என்ன? அறிவைத் துன்புறுத்தும் சட்டங்களால் விலங்கிடக் கூடிய முட்டாள்களின் சோம்பேறித்தனமான செயல்" என்று மற்றோர் அறிஞன் இழித்துரைக்கிறான்.

வேறோர் அறிஞனோ, "என்னுடைய முட்டாள் தாய் தந்தையர் எனக்கு ஏன் தான் எழுதவும் படிக்கவும் கற்றுத் தந்தார்களோ அறிகிலேனே" என்று அலறுகிறான்.

பெர்னார்ட் ஷாவோ வெனில் பள்ளிகளில் பின்பற்றப் படும் பாடத் திட்டங்களையே சாடுகிறார். "பழி பாவ மற்ற பாமர மக்களுக்கென ஏற்படுத்தப்பட்டத்தில் பள்ளிகளைப் போன்று பயங்கரமானதொன்று வேறில்லை. முதலில் பாத்தோமானால், அது ஒரு சிறையாக இருக்கிறது. ஆனால் சில வகையில் பார்த்தோமானால் அச் சிறையைவிட மிகவும் கொடியதாக இருக்கிறது. ஒரு சிறையில் அந்தச் சிறையின் பாதுகாவலர்களால் எழுதப்பட்ட நூல்களைப் படிக்குமாறு நீங்கள் கட்டாயப் படுத்தப்படுவதில்லை. சிறையில் உங்களு டைய உடலைத்தான் துன்புறுத்துவா.:களேயொழிய உங்க ளின் மூளையைத் துன்புறுத்துவதில்லை" என்று கூறுகிறார்.

எனவே எந்தக் கல்வியும் வலுக் கட்டாயமாகப் போதிக்கப் படக் கூடாது. அவ்விதம் போதிக்கப்படின் அது இன்பம் பயப்பதற்குப் பதிலாகத் துன்பம் பயப்பதாக ஆகிவிடும் என்று அவர் எண்ணினார். அதன் காரணமாகவே அவர் தம்முடைய நாடகங்களைக் கூடக் கல்லூரிகளில் பாடமாக வைக்கக் கூடாதென்று கண்டிப்பான விதியும் விதித்தார்.

அமெரிக்க அறிஞர் எமர்ஸனும் இப்போதைய கல்வித் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது, "அது ஏக்கம் அளிக்கும் திட்டமாக இருக்கிறது" என்று கூறினார். அவ்விதம் கூறியதோடு அவர் நிறகவில்லை. மேலும் அவர் கூறினார்,

''நாம் வார்த்தைகளின் மாணவர்களாக உள்ளோம். நாம் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பாடம் ஒப்புவிக்கும் அறைகளிலும் பதினைந்து ஆண்டுகள் அடைப்பட்டுள்ளோம். அதிலிருந்து நாம் வார்த்தைகளை மனனம் செய்த நிலையோடு வெளி வருகிறோமேயன்றி ஒரு விஷயத்தையும் அறிந்த நிலையில் நாம் வெளிவருகிறோமில்லை.''

இவ்வாறு அறிஞர் பெருமக்கள் பலரும் பொதுப் பள்ளிகளில் போதிக்கப் பெறும் பாடத்திட்டங்களின் காரணமாகவும், அவை கண்டிப்புடன் கற்றுக் கொடுக்கப்படுவதன் காரணமாகவும் இளைஞர்களின் இயற்கையான அறிவு வளர்ச்சி தடைப்படுகிறது என்று கருதியபோதினும் சாதாரண மக்களுக்கு அறிவு பெற, வாழ்வில் பெருவாழ்வு காண அப்பள்ளிகளில் படிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

ஒரு ஷேக்ஸ்பியர் பள்ளியில் படிக்க வேண்யடிதில்லை தான்; ஒரு பெர்னார்ட் ஷா பள்ளியில் படிக்க வேண்டிய தேவையில்லைதான். ஓர் எடிஸனுக்கு அவருடைய உள்ளமே அவருக்கு அறிவு வழங்கும் ஆசானாக இருக்கும் தான். அவர்களெல்லாம் அதிமேதைகள். ஆனால் எல்லாரும் அதி மேதைகளாக இருக்கவும் இயலாது. இருப்பார்கள் என்று எதிர்பார்க்கவும் இயலாது. இருப்பதாக எண்ணிக் கொள்ளவும் கூடாது.

உலகம் பலவிதம், அதிலே நாம் அதிமேதைகளையும் காண்கிறோம், நடுத்தர அறிவு படைத்தவர்களையும் காண்கிறோம். அதிமேதைகள், தாம் கானகத்தின் நடுவே விடப்பட்ட போதினும் தாங்களாகவே முன்னேறிக் கொள்வார்கள். அவர்கள் மட்டுமல்ல, ஸிஸரோ கூறுவது போல, 'இயற்கைத் திறனில்லாத படிப்பாளிகளைவிடப் படிப்பில்லாத இயற்கைத் திறனுள்ளவர்கள் பெரும் புகழையும் பண்புகளையும் பெற்றுவிடுவார்கள்.' ஆனால் மற்றவர்களைப் பற்றி என்ன கூறுவது? பள்ளிப் படிப்பு என்ற அடிப்படையின்றி அவர்கள் எவ்வாறு அறிவு பெறுவது.

இப்போது பள்ளிகளில்போதிக்கப்படும் பாடத்திட்டங்களில் பல வாழ்க்கைக்குப் பயன்படவில்லைதான். நான் கல்லூரியில் படித்த பாடங்களில் பலவற்றை மறந்து எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டன.

நான் அவற்றை வேண்டுமென்றே மறந்து விடவில்லை. ''தேர்வு எழுதும் வரையில்தானே நாங்கள் உனக்குத் தேவை. இனிமேல் நாங்கள் உன்னுடைய மூளையில் புகுந்து முடங்கிக் கொண்டிருக்க வேண்டிய தேவை தான் எங்களுக்கு என்ன?'' என்று கூறிக் கொண்டு அவை தாம் பறந்து போய்விட்டன.

ஆனால் எல்லாம் அவ்விதம் செய்யவில்லை. என்னுடைய உள்ளத்திற்கு வந்த செய்திகள் பல என்னோடு தங்கியிருந்து என்னுடன் ஒன்றாகிவிட்டன. நான் வேறு அவை வேறு என்று பிரிக்க இயலா நிலை ஏற்பட்டு விட்டது. மேலும் என்னை விட்டுப் பிரிந்து சென்றவையும் தம் அடிச் சுவடுகளைத் தம் நினைவுச் சின்னமாக என்னுடைய உள்ளத்தில் பதிக்காமல் செல்லவில்லை. அவற்றின் காரணமாக அறிவின் கடைக்கால் என்னுடைய உள்ளத்திலே இடப்பட்டது. உலகிலுள்ள பல்வேறு கலைகள், அறிவியல்கள் பற்றிய ஒரு பொதுவான அடிப்படை அறிவு எனக்கு ஏற்பட்டது. அவ்வித அடிப்படையையே கல்லூரிப் படிப்பு ஒருவனுக்கு வழங்குகிறது. இதனைக் கல்லூரி செல்லாதவர்கள் பெரும்பாலும் பெற இயலுவதில்லை.

எனவேதான், ''கல்லூரிப் படிப்பு, மற்றவர்கள் எவ்வளவு குறைவாக அறிந்துள்ளார்கள் என்பதை நமக்கு அறிவிக்கிறது'' என்று ஓர் அறிஞனும் கூறிச் சென்றான்.

நடுத்தர அறிவு படைத்தவர்கள் இளமையில் பள்ளி செல்ல வசதியில்லாததன் காரணமாகப் பின்னர் வயதேறப் பெற்றதும் தாங்களாகவே படித்துத் தங்களுடைய கல்வி அறிவை அபிவிருத்தி செய்து கொள்வதைக் காண்கிறோம். ஆனால் அவர்கள் எவ்வளவுதான் தாங்கள் பெற்ற கல்வியைப்

பற்றிப் பெருமையாக எண்ணிக் கொண்டிருந்தபோதிலும் அவர்களுடைய கல்வி, குறைபாடு உடையதாகவே இருக்கிறது.

வழி காட்டி இல்லாது செல்பவன் எவ்வாறு வழியில் தட்டுத் தடுமாறுவானோ அது போன்றே அவர்களுடைய கல்வியும் தடுமாற்றமுடையதாகவே இருக்கிறது. மேலும் தம் வயதொத்த மாணவர்களுடன் சேர்ந்து படிப்பதனால் ஏற்படும் பல்வேறு நலன்களையும் அவர்கள் இழக்கிறார்கள்.

எனவேதான் கோல்ட் ஸ்மித்தும் , ''பள்ளி செல்லாது தனிப்பட்ட முறையில் ஐந்து ஆண்டுகள் படித்துப் பெற இயலாத அறிவைப் பள்ளி சென்றுஓராண்டு படிப்பதனால் ஒருவன் பெற்று விடுகிறான்'' என்று கூறுகிறான். எனவே சில பல்கலைக் கழகங்கள் பள்ளி வந்து பயிலாது வீட்டிலிருந்து தாமாகவே படித்தோ, அஞ்சல்களின் மூலம் பாடங்களை வரவழைத்துப் படித்தோ எவரும் தேர்வு எழுதுவதை அனுமதிப்பது இல்லை.

அதற்காக ஒருவன் கல்லூரிப் படிப்பை முடித்து வெளி வந்ததும் அவன் நிறை கல்வி பெற்று விட்டதாகவோ முழு அறிவு பெற்று விட்டதாகவோ நான் கூறவில்லை. அங்கு அவன் ஓர் அடிப்படைக் கல்வி அறிவைத் தான் பெறுகிறான். அதன் மீது அவன் பல நூல்களைப் படிப்பதன் காரணமாகவும் பல அனுபவங்களைப் பெறுவதன் காரணமாகவும் தன்னுடைய அறிவுக் கட்டடத்தை எழுப்ப இயலுகிறது என்றுதான் நான் கூறுகிறேன்.

ஆதலின் ஓர் இளைஞன் தன்னுடைய அறிவை அபிவிருத்தி செய்து கொள்வதற்குப் பள்ளியில் சேர்ந்து பயில்வதைப் போன்ற சிறந்த சாதனம் வேறொன்றுமில்லை. அங்கு அவனுக்குப் பிடித்தமில்லாத சில பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படலாம்தான். அதற்காக அவன் பள்ளிப் படிப்பையே வெறுத்துப் பள்ளி செல்லாது ஊர் சுற்றித் திரிவது என்பது ஒரு போதும் அறிவுடைமையாகாது. அங்குக் கற்றுத்

தரப்படும் பாடங்களைச் சில காலம் வரையில் கற்றுத் தான் தீரவேண்டும். அதன்பின்கல்லூரிசென்ற பொழுது தனக்குப் பிடித்தமான பாடங்களைத் தேர்ந்தெடுத்துப் பயின்று கொள்ளலாம். இதைத் தவிர வேறு வழியில்லை.

படிப்பைப் பற்றி பேகன் குறிப்பிடும் பொழுது, "படிப்பின் நோக்கம் தங்களின் அறிவுத் தாகத்தைத் தணிப்பதாகும் என்று சிலர் கருதுகிறார்கள். சிலர் புகழை விரும்பிப் படிக்கிறார்கள். சிலர் வாக்குவாதம் புரியும் இன்பத்தைப் பெறுவதற்காகப் படிக்கிறார்கள். சிலர் பிழைப்புக்காகப் படிக்கிறார்கள். ஆனால் படிப்பின் உண்மை நோக்கம் நாம் பெற்ற அறிவை மனித இனத்துக்கு நலன் நல்கும் வகையில் பயன்படுத்துவதற்காக இருக்க வேண்டும்'' என்று கூறுகிறான்.

ஆனால் இப்போது இளைஞர்கள் தங்களுக்கெனப் பாடங்களை; அப்பாடங்களைப் படித்துத் தேறினால் தங்களுக்கு விரைவில் பெரும் பதவி கிடைக்குமா அல்லது அப்படிப்பின் மூலம் பெரும் பொருள் ஈட்ட இயலுமா என்பதை அடிப்படையாகக் கொண்டு தான் தேர்ந்தெடுக்கின்றனர்.

இதைப் பற்றி ஓர் அமெரிக்க அறிஞன் குறிப்பிடும் பொழுது, ''பெரும்பாலான அமெரிக்கர்கள் கல்வியைத் தங்களுடைய வாணிபத்திற்கான ஒரு மூலதனமாகக் கருதுகிறார்களே ஒழிய அறிவின்பத்தைப் பெறுவதற்கான ஒரு வாயிலாகவோ, முற்காலத்தில் சொல்லப்பட்ட அல்லது செய்யப்பட்ட சொற்களுடனோ செயல்களுடனோ தொடர்பு கொள்வதற்கான வாய்ப்பாகவோ கருதவில்லை. அவர்கள் அதனை ஓர் அனுபவமாக மதிப்பதில்லை, ஒரு கருவி யாகவே மதிக்கிறார்கள்'' என்று கூறுகிறான். இவ்வித-மனநிலை பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் நிலவி வருகிறது. அதற்கு நம் நாடும் விதி விலக்கல்ல.

சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் நம் நாட்டில் வழக்கறிஞர்கள் பெரும்

பொருள் ஈட்டத் தொடங்கினார்கள், சட்டக் கல்வி பயின்ற பலர் நீதிபதிப் பதவியைப் பெற்றார்கள். அவ்வளவுதான். பெற்றோர்கள் தங்கள் மக்களும் அவ்வாறே ஆகவேண்டும் என்ற எண்ணத்துடன் அவர்களின் இயல்பு, தகுதி ஆகியவற்றைச் சிறிதேனும் மனத்திற் கொள்ளாது தங்கள்மக்கள் பொருளீட்டுவதையும் பதவி வகிப்பதையுமே நோக்கமாக் கொண்டு அவர்களைச் சட்டக் கல்லூரிக்கு அனுப்பி வைத்தார்கள்.

பின்னர் வழக்கறிஞர் தொழில் கும்பல் நிறைந்த தொழிலாக ஆகி அதற்குத் தகுதியற்ற பலர், அதிலே இன்பம் காணாத பலர் அதில்சேர்ந்து தோல்வியற்றதைக் கண்டதும் பெற்றோர்கள், ''வழக்கறிஞர் தொழிலா? அதில் பொருளீட்ட இயலாதே. இப்பொழுது மருத்துவர்களுக்கும் பொறி இயல் வல்லுனர்களுக்கும் தான் அதிகக் கிராக்கி உள்ளது. மருத்துவர்கள் பணத்தை வாருகிறார்கள்; பொறி இயல் வல்லுனர்களுக்கோ பள்ளியிலிருந்து வெளிவந்ததும் பதவி கிடைத்து விடுகிறது. எனவே இந்த இரண்டு துறைகளில் ஒன்றில் தாம் நம் மகனைச்சேர்த்துவிட வேண்டும்'' என்ற எண்ணத்துடன் அதற்காகப் படாத பாடுபடுகிறார்கள். இது கண்டு எனக்கு ஒரு பக்கத்தில் சிரிப்பும் மற்றொரு பக்கத்தில் வருத்தமும் தான் ஏற்படுகிறது.

அதற்காக நான் இளைஞர்கள் உதவாக்கரைப் படிப்பைப் படிக்க வேண்டும், படித்துவிட்டு வறுமையில் உழல வேண்டும் என்று கூறவில்லை. வாழ்க்கையை வசதியுடனும் அமைதியுடனும் கழிப்பதற்குப் பணம் தேவைதான். அதனை ஈட்ட வேண்டியது ஒவ்வொருவர் மீதும் கடமைதான். ஆனால் அதற்காகப் பணம் ஈட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு படிக்கவோ, செயலாற்றவோ கூடாது என்றுதான் கூறுகின்றேன். அவ்விதம் உலகில் தோன்றிய பெரியார்களெல்லாம் செய்திருப்பின் உலகம் இவ்வளவு முன்னுக்கு வந்திருக்க முடியுமா?

மருத்துவக் கல்வி மிகவும் மேலானதுதான். மனிதர்களின் துன்பம் துடைக்கும் உயரிய தொழிலுக்கு அழைத்துச் செல்லும் உன்னதக் கல்விதான். அதனைப் பயிலும் மாணவன் அதனை பயில்வதன் மூலம் மக்களுக்குப் பெரும் தொண்டு செய்யலாம் என்ற எண்ணத்துடன் பயில்வதே சாலச் சிறந்ததே ஒழிய மருத்தவக் கல்வி பயின்று வெளிவந்ததும் மருத்துவத் தொழில்புரிந்து பெரும் பொருளீட்டலாம் என்ற எண்ணத் துடன் பயில்வது ஒருபோதும் ஏற்புடையதாக ஆகாது.

எனவேதான் அறிஞன் செனேகாவும், 'பணம் சம்பாதிப் பதையே குறிக்கோளாகக் கொண்ட எந்தப் படிப்பையும் நான் நல்லது என்று கருதுவதுமில்லை, மதிப்பதுமில்லை'' என்று கூறிச்சென்றான்.

ஆனால் நம்மில் எத்தனை பேர் இதனை உணர்கிறார்கள்? பணம், பணம் என்பதே அவர்களுடைய ஒரே மூச்சாக உள்ளது. பணத்தை எவ்வாறாவது திரட்டிவிட வேண்டும் என்றுதான் அவர்கள் அல்லும் பகலும் முனைந்து நிற்கிறார்கள். எவ்வாறு தவறான தொழில் செய்து கொள்ளை இலாபம் அடிப்பது என்பது பற்றி ஒரு பள்ளி ஏற்படுத்தினால் அதில் இளைஞர் முதல் முதியோர் வரை திரள் திரளாக வந்து சேரும் அளவுக்கு மக்களின் மனம் மாசுண்டுள்ளது.

சில மருத்துவர்கள், அவர்கள் மருத்துவத் தொழிலில் இருப்பதே அப் புனிதத் தொழிலுக்கு இழுக்கு என்று கூறும் அளவுக்கு அவர்கள் பணத்தின் மீது ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள். ''ஐயோ! என் அருமை மகன் இறப்புப் படுக்கையில் கிடக்கிறான். அவனுடைய உயிர் மெது மெதுவாகப் போய்க் கொண்டிருக்கிறது. விரைவில் வாருங்கள் டாக்டர்!'' என்று ஒரு கிழவி தலைவிரி கோலமாக வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு ஓடி வந்து கூறிய போதினும், ''அப்படியா! சரி எனக்கு எவ்வளவு கூலி தருகிறாய்? என்னுடைய கூலி இவ்வளவு ரூபாய். அதனை முதலில்

கொண்டு வந்து வை! பின்னர் நான் வருகிறேன்'' என்று கூறும் மருத்துவர்களும் இல்லாமல் இல்லை. இவர்களை நாம் என்னவென்று கூறுவது?

நம் நாட்டில் எத்தனையோ பேர் மருத்துவக் கல்வி பயின்று மருத்துவத் தொழிலில் ஈடுபட்டும் இருந்தார்கள்; ஈடுபட்டும் இருக்கிறார்கள். ''இன்ன இன்ன நோய்களுக்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லையே. இவை மக்களின் உயிரைக் கொண்டு செல்கின்றனவே. நாம் இந்த நோய் பற்றி ஆய்வு நிகழ்த்தி அதற்கான மருந்தைக் கண்டுபிடிப்போம். அதனால் உலகமே வாழட்டும்'' என்று எண்ணி ஆய்வு நடத்தி மருந்து கண்டுபிடித்தார்களா? இல்லை.

ஆனால் முற்காலத்தில் நம் நாட்டில் பெயர் பெற்ற மருத்துவர்களும் சித்தர்களும் இருந்தார்கள். அவர்கள் எத்தனையோ நோய்களுக்கு எத்தனையோ விதமான மூலிகைகளைக் கண்டுபிடித்து மருந்து செய்தார்கள். சான்றாக, இரத்த அழுத்தத்தை எடுத்துக் கொள்வோம். அதற்கு அக்கால நம் நாட்டு மருத்துவர்கள் சர்ப்பகந்திச் செடியின் இலையைத் தின்னுமாறு கூறினார்கள். அவ்விதமே காந்தியடிகளும் தமக்கு இரத்த அழுத்தம் ஏற்படும் போதெல்லாம் செய்து வந்தார். பின்னர் அந்த இலையின் பெருமை மேனாட்டு மருத்துவர்களுக்குத் தெரிய வந்ததும் அவர்கள் இந்தியாவிலிருந்து அதனை ஏராளமாக இறக்குமதி செய்யத் தொடங்கினார்கள்.

இன்று மேல் நாடுகளில் பலர் மக்களின் உயிரைக் கொள்ளை கொண்டு செல்லும் நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். சிலர் அந்நோய்க்கே தங்களுடைய உயிரையும் தியாயகம் செய்துள்ளார்கள். அம்முயற்சியில் வெற்றி காணும் வரையில் தங்களுடைய நலன்களை எல்லாம் மறந்து செயலாற்றியும் வருகிறார்கள். நோயையும் இறப்பையும் எதிர்த்து மருத்துவத் துறை வல்லுனர்

கள் ஆற்றிய வீரப் போராட்டம் கோடானு கோடி மக்களுக்கு உயிர்ப் பிச்சை வழங்கி இருக்கிறது என்பதில் ஐயமில்லை.

1918-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் எடுக்கப்பட்ட கணக்குப்படி ஒரிலட்சம் பேர்களில் 286 பேர் நிமோனியா காய்ச்சலுக்குப் பலியாகிக் கொண்டிருந்தார்கள். ஆனால் 1949ஆம் ஆண்டிலோ ஒரிலட்சம் பேர்களில 18 பேர்கள் தாம் அதற்குப் பலியானார்கள்.

1918ஆம் ஆண்டில் ஈளை நோய்க்கு ஒரிலட்சம் பேர்களில் 128 பேர்கள் பலியாகிக் கொண்டிருந்தார்கள். ஆனால் 1949-ஆம் ஆண்டிலோ ஒரிலட்சம் பேர்களில் 22 பேர்கள் தாம் அதற்குப் பலியானார்கள்.

அங்கு மேக ரணம் மக்களுக்குச் செய்து வந்த கொடுமையோ சிறிதல்ல. முன்பெல்லாம் பத்தில் ஒருவர் வீதம் அந்நோய்க்குப் பலியாகிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுதோ ஒரிலட்சத்திற்கு எட்டுப் பேர்கள் வீதம் தான் அங்கு அதனால் இறப்பெய்துகினறனர். இன்னும் சிறிது காலத்தில் மேகரணத்தால் எவரும் இறக்காத நிலை ஏற்பட்டுவிடும் என்று கருதப்படுகிறது.

மற்ற நோய்களினால் இறப்பவர்கள் தொகையும் அருகிக் கொண்டு வருகிறது. எனவே 1920-ஆம் ஆண்டில் அமெரிக்காவில் பிறந்த குழந்தை ஒன்று 54 ஆண்டுகளும் 9 மாதங்களும் உயிர் வாழலாம் என்றிருந்தது. ஆனால் இப்பொழுது 68 ஆண்டுகள் உயிர் வாழலாம் என்னும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இப்பொழுது எல்லா நோய்களுக்கும் மருந்து கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. புற்று நோயைக் கூட ஆரம்பத்திலேயே மருத்துவம் செய்யின் குணப்படுத்திவிடலாம் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இறப்பிற்குத் தான் இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. அதனை எவராலும் கண்டுபிடிக்க இயலாவண்ணம் இறைவன் அந்த இரகசியத்தைத் தன்னுடைய கையிலேயே வைத்திருக்கிறான்.

இவ்வாறு நோயை எதிர்த்துப் போராடிய வீரர்களில் ஒருவர் பென்ஸிலினைக் கண்டுபிடித்த டாக்டர் அலெக்ஸாண்டர் பிளெமிங். உலகத்தை வெற்றிகொண்ட வீராதி வீரன் அலெக்ஸாண்டர் போன்று இவரும் ஒரு வீராதி வீரர் தாம். அவனோ தன்னுடைய சுயநல ஆசைக்காக எத்தனையோ இலட்சம் பேர்களைக் கொன்று குவித்தான். ஆனால் இவரோ எத்தனையோ இலட்சம் பேர்களுக்கு வாழ்வளிப்பதற்காகத் தம்மையே தாம் துன்புறுத்திக் கொண்டார்.

முதல் உலகப்போரில் காயமுற்ற வீரர்களுக்கு மருத்துவப் பணி செய்வதில் ஈடுபட்டிருந்த அலெக்ஸாண்டர் பிளெமிங், காயமுற்ற வீரர்கள் தொற்று நோயால் இறப்பதைக் கண்டு இதயம் துடித்தார். பிரான்ஸிலிருந்த பிரிட்டிஷ் மருத்துவ நிலையங்களிலிருந்து கிடைத்து வந்த மருந்தோ காயமுற்றோருக்கு நன்மை செய்வதற்குப் பதிலாகப் பெரிதும் தீமையே செய்து வந்தது. காயமுற்றோரின் உடலிலுள்ள விஷக் கிருமிகளைக் கொல்வதற்குப் பதிலாக அது இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களையும் சிவப்பு அணுக்களையுமே கொன்று வந்தது.

இது கண்டு பெரிதும் வருந்திய டாக்டர் பிளெமிங் இதற்கு மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார்; எத்தனையோ ஆய்வுகளெல்லாம் நிகழ்த்தினார்; முட்டையின் வெள்ளைக் கருவிலுள்ள ஒரு பொருள், உமிழ் நீர், மனிதனின் கண்ணீர் ஆகியவற்றை எல்லாம் சேர்த்து ஒரு மருந்து கண்டுபிடித்தார். ஆனால் அது மனிதனின் உடலிலுள்ள தீதற்ற கிருமிகளைக் கொல்வதில் தான் தீவிரமாக இருந்தது.

எனவே பெரிதும் மனம் உடைந்த அவர் தம்முடைய கவனத்தை இன்ப்ளுவென்ஸா சாய்ச்சலுக்கு மருந்து கண்டு பிடிப்பதில் திருப்பினார். ஆனால் என்ன வியப்பு! 1928-ஆம் ஆண்டு ஒரு காலையில் தொற்று நோய்கள் கிருமிகளைக் கொல்வதற்கான முறை அவருக்குத் தோற்றம் வழங்கியதும் அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை.

அவருடைய ஆராய்ச்சியின் அடிப்படையில் ஆக்ஸ் போர்ட் பல்கலைக் கழகத்திலுள்ள அமெரிக்க மருத்துவர் களும் பிரிட்டிஷ் மருத்துவர்களும் பணியாற்றிப் பென்ஸிலின் வில்லைகளை செய்தளித்தார்கள். அந்த மருந்து வில்லைகள் தாம் இரண்டாவது உலகப் பெரும்போரின்போது தொற்று நோயை எதிர்த்துப் போராடுவதற்காக நேச நாட்டினரிடம் கிடைத்த மாபெரும் ஆயுதமாக விளங்கியது. இன்று அது உலகம் முழுவதிலும் பரவி, கோடானுகோடி மக்களுக்கு உயிர்ப்பிச்சை வழங்கி வருகிறது.

எலும்புருக்கி ஈழை நோயைப் பற்றி நீங்கள் நன்கு அறிவீர்கள். அது இன்று, நேற்று உலகில் தோன்றவில்லை. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அது எகிப்தில் நிலவி வந்ததாக வரலாறு கூறுகின்றது. ஆனால் அதனை அழித்தொழிப்பதற்கான சரியான மருந்து சில ஆண்டுகள் வரை கண்டுபிடிக்கப்படவில்லை. ''மக்களின் உயிர்களைக் கொள்ளை கொண்டு செல்கின்றதே இந்நோய், இதற்கு ஒரு பரிகாரம் இல்லையா?'' என்று எவரும் வருந்தினார்களில்லை.

எனினும் ரஷ்யாவில் பிறந்து அமெரிக்காவில் வாழந்து வந்த செல்மான் வாக்ஸ்மேன் என்ற மருத்துவரின் உள்ளம் இது கண்டு நைந்துருகியது. எனவே இதனை அழித்தொழிப் பதற்கான மருந்தொன்றைக் கண்டுபிடிப்பதற்காக அவர் ஓராண்டல்ல, ஈராண்டல்ல, இருபத்து எட்டு ஆண்டுகள் ஓயாது உழைத்தார்.

இம்மருத்தினைக் கண்டுபிடிக்க அவர் கொண்ட தத்துவம் யாதெனில், மண்ணின் மேலே இருப்பதைவிட அதிகமான நுண்ணிய தாவரங்களும் உயிர்ப் பிராணிகளும் மண்ணிற்குள் இருக்கின்றன. எண்ண இயலாத இந்த உயிர்ப் பிராணி களிடையே எப்பொழுதும் இடைவிடாது வாழ்க்கைப் போராட் டம் நடந்து வருகிறது. ஒன்று மற்றொன்றைத் தன்னிடமுள்ள நச்சுப் பொருளினால் கொன்று வருகிறது. அந்த நச்சுப் பொருளைக் கொண்டு மனிதனுடைய உயிருக்கு ஊறு

விளைவிக்கும் நச்சுக் கிருமிகளைக் கொன்றொழித்துவிடலாம் என்பதுதான்.

அந்த நச்சுப் பொருளைக் கண்டுபிடிக்க அவர் பட்டபாடு சிறிதல்ல. மனிதனுக்கு எந்த விதமான தீங்கும் இழைக்காமல் மனிதனுக்குத் தீங்கிழைக்கும் கிருமிகளைக் கொல்லும் நச்சுப் பொருளை அவர் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. எனவே மண்ணிற்குள் இருந்த பல கிருமிகளை ஒன்றின்பின் ஒன்றாக எடுத்து அவர் ஆராய்ச்சி நிகழ்த்தினார். தாம் ஆராய்ச்சி நிகழ்த்தி வந்த ரட்ஜர்ஸ் கல்லூரியின் மண்ணில் தோண்டி எடுக்கப்பட்ட ஒருவிதக் கிருமி முதலில் வன்மை வாய்ந்தது போன்று தோன்றியபோதினும் பின்னர் மனிதனைக் கொல்லும் கிருமியைக் கொல்வதில் வன்மையற்றதாக ஆகிவிட்டதை அவர் கண்டார்.

அவருடைய முன்னால் மாணவர் ஒருவர் மண்ணினுள்ளிலிருந்து எடுத்து வந்த மற்றொரு கிருமி, மனிதனுடைய உயிருக்கு ஊறு விளைவிக்கும் கிருமிகளைக் கொல்லக் கூடிய வன்மை வாய்ந்ததாக இருந்தபோதினும் அதுவே மனிதனுடைய உயிருக்கும் ஊறு விளைவிப்பதாய் இருப்பதைக் கண்டு அவர் பெரிதும் ஏமாற்றமுற்றார். இவ்வாறு அவர் அடைந்தவை எத்தனையோ ஏமாற்றங்கள், தோல்விகள். இது கண்டு 'அவருக்கு ஆண்டோன்றிற்கு அளித்து வந்த 4620 டாலரும் வீண்தான். எனவே அவரை வேலையிலிருந்த நீக்கிவிடலாம்'' என்று அவர் அலுவலாற்றி வந்த பல்கலைக் கழகத்தின் அதிகாரி ஒருவர் கூறினார். எனினும் அதிபர் அவ்வாலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை.

1943ஆம் ஆண்டில் ஒரு நாள் கோழி வளர்ப்போன் ஒருவன் நோயுற்ற தன் கோழி ஒன்றைச் சோதித்துப் பார்க்கப் பல்கலைக் கழகத்தின் ஆய்வு நிலையத்திற்குக் கொண்டு வந்தான். கோழிகளை ஆயும் ஆய்வாளர் அதனுடைய குடலில் நூதனக் கிருமி ஒன்று இருப்பதைக் கண்டதும் அது பற்றி

ஆய்வு நடத்த அதிலிருந்த ஒரு கிருமியை எடுத்து வாக்ஸ் மேனிடம் அனுப்பினார். உடனே அது பற்றி ஆய்வு நடத்தினார் வாக்ஸ்மேன்.

அது அவர் சில நாட்களுக்கு முன் மிகவும் வளமான மண்ணிலிருந்து எடுத்த ஒரு கிருமிபோன்று மிகவும் வன்மை வாய்ந்ததாக இருந்தது. ஆய்வுக் குழாயில் அவ்விரண்டையும் மற்றோர் ஈழை நோய்க் கிருமியையும் வைத்து ஆய்வு நடத்தியதில் அவை இரண்டும் அந்த ஈழை நோய்க் கிருமியைக் கொன்று விட்டதைக் கண்டார். அந்தக் கிருமி களை ஈழை நோயால் வருந்தும் நோயாளர்களின் இரத்தத்தில் செலுத்தியபொழுது ஈழை நோய் குணமாவதையும் கண்டார். அந்தக் கிருமிகளுக்கு 'ஸ்ட்ரெப்டமைஸின்' என்றும் பெயரிட்டார்.

அந்தக் கிருமிகளிலுள்ள நச்சுப் பொருள்களை விஞ்ஞான முறையில் பிரித்து அற்றில் எந்தெந்தப் பொருள்கள் காணப் பட்டனவோ அந்தப் பொருள்களினால் செய்யப்பட்ட மருந்தே இன்று 'ஸ்ட்ரெப்டமைஸின்' என்ற பெயருடன் விளங்கி கோடானு கோடி ஈழை நோயாளருக்கு நலன் வழங்கி வருகிறது.

முன்பெல்லாம் ஈழை நோய் ஒரு கரும வியாதி என்றும் அதனால் பீடிக்கப்பட்டவன், அது அவனைப் பீடித்த அன்றே இறந்துவிட்டான் என்றும் எண்ணிக் கொள்ளும்படியான நிலை இருந்தது போக இப்பொழுது ஈழை நோயால் பீடிக்கப்பட்ட வன் அந்நோயால் சாக மாட்டான், முன்னைவிடக் கொழுத்துக் காணப்படுவான் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் அந்த இரக்கமிகு மருத்துவர் தாம். அவர் தாம் கண்டுபிடித்த அந்த மருந்திற்கு ராயல்ட்டி பெறுவதென்றால் இதுவரை கோடி கோடியாய்க் குவித்திருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை. அந்த ராயல்ட்டியை எல்லாம் அவர் தாம் பணியாற்றும் அந்தப் பல்கலைக் கழகத்திற்கே எழுதி வைத்து விட்டார்.

புற்று நோய்க்குச் சிறந்த மருந்தாகக் கருதப்படும் ரேடியம் என்ற உலோகத்தைக் கண்டுபிடிக்க மேடம் க்யூரியும் அவருடைய கணவரும் பட்டபாடு கொஞ்சமா? அவர்கள் பல்லாண்டுகளாகப் பாடுபட்டு நூற்றுக் கணக்கான உலோகங்களை சோதித்து அதன்பின் தாங்கள் ஒரு புதுவித உலோகம் இருப்பதைக் கண்டுபிடித்து விட்டதாகவும் அதனுடைய ஒளிக்கதிர்கள் பாயும் வேகம் உரேனியத்தின் ஒளிக்கதிர்கள் பாயும் வேகத்தை விட இருபது இலட்சம் தடவை அதிகமாக இருக்கிறதென்றும் அதனுடைய ஒளிக் கதிர்கள் மரம், கல், எஃகு, செம்பு ஆகியவற்றையெல்லாம் துளைத்துச் சென்றுவிடும் என்றும் அவற்றைக் கனமான ஈயத் தகட்டாலன்றி வேறு எதனாலும் நிறுத்த இயலாது என்றும் கூறியபொழுது விஞ்ஞான உலகமே திடுக்கிட்டு விட்டது.

அவர்களின் இக்கூற்று இதுகாறும் விஞ்ஞானிகள் உண்மையெனக் கருதி வந்த அடிப்படைத் தத்துவங்களை எல்லாம் துகள் துகளாக ஆக்கிவிடுவது போன்றிருந்தது. எனவே அவ்வித உலோகம் ஒன்று இருப்பதாக நம்பக் கூட விஞ்ஞானிகளால் இயலவில்லை. எனவே, ''அந்த உலோகத்தைச் செய்து காட்டுங்கள்! அதனை வைத்து ஆய்வு நிகழ்த்திய பின்னர்தான் நீங்கள் கூறுவது உண்மையென நாங்கள் ஒப்புக் கொள்வோம்'' என்றார்கள் அவர்கள்.

எனவே மேடம் க்யூரியும் அவருடைய கணவரும் எவ்வித வசதியுமில்லாத ஓர் அறையில் நான்காண்டுகளாகப் பாடு பட்டார்கள். நான்கு ஆண்டுகளாகப் பாடுபட்டு எட்டு டன் உலோகங்களை உருக்கினார்கள். அவ்வாறு அவர்கள் உருக்கி உண்டு பண்ணிய ரேடியம் எவ்வளவு என்று எண்ணுகிறீர்கள்? ஒரு சிறு பட்டாணிக் கடலையில் பாதி அளவுதான். ஆனால் அவர்-மேடம் க்யூரி- தாம் கண்டுபிடித்த இந்தக் கண்டு பிடிப்பைத் தமக்கே உரிமையாக்கிக் கொண்டாரா அல்லது அதற்கு எந்த ராயல்டியையும் விரும்பினாரா? இல்லை.

"அதன் மூலம் ஊதியம் பெறுவதென்பது என்னால் இயலாத செயலாகும். அவ்விதம் செய்வது விஞ்ஞான மனோ நிலைக்கே மாற்றமானதாகும். மேலும் ரேடியம், நோய்களைக் குணப்படுத்தப் பயன்படப் போகிறது. எனவே அதனைச் சாதகமாகக் கொண்டு நான் பயன் பெற எண்ணுவது என்னால் இயலாத செயலாகும்" என்று அவர் கூறிவிட்டார். இவ்வாறு நம்மில் எத்தனை பேர் செய்வார்கள்?

இவ்வாறு அங்குக் கல்வி பயில்வோரில் பலர் சாதனை நோக்கமே, சமுதாய நோக்கமே குறிக்கோளாகக் கொண்டு கல்வி பயில்கிறார்கள். செயலாற்றுகின்றார்கள். மருத்துவத் துறையிலுள்ளோர் மட்டும் அவ்விதம் செய்யவில்லை. மற்றத் துறைகளில் உள்ளோரும் அவ்விதமே செய்கிறார்கள்.

எல்பின் ஸ்டாக்மேன் என்ற விஞ்ஞானி தாவரங்களைப் பிடிக்கும் ஆயிரக் கணக்கான நோய்களுக்கு மருந்து கண்டு பிடித்துள்ளார். அவருடைய ஆராய்ச்சியின் காரணமாக இன்றையத் தினம் அமெரிக்கா வளம் கொழிக்கும் நாடாக விளங்கி உலகமெங்கணும் தானியங்களைத் தானமாக வாரிவழங்கிக் கொண்டுள்ளது. ஓராண்டில் மட்டும் அமெரிக்காவில் இருபது கோடி புஷல் கோதுமை தானியங் களை அழித்து வந்த கொள்ளை நோய்களை அவர் தம்முடைய ஆராய்ச்சியின் மூலம் அழித்தொழித்து விட்டார்.

மழையின்றி மக்களுக்கும் பயிர்களுக்கும் ஏற்படும் தீமைகளைக் கண்டு பெரிதும் வருந்திய இர்விங் லாங்க்முய்ர் என்ற விஞ்ஞானி எல்லாரும் கால நிலைமை பற்றிப் பேசுகின்றார்களே ஒழிய ஒருவரும் அதற்காக யாதொன்றும் செய்கிறார்களில்லையே என்று மற்றவர்களைக் குறை கூறினார். இவ்வாறு குறை கூறிய அவர் தாமும் முழங்காலைக் கட்டிக் கொண்டு வெறுமனே இருக்கவில்லை. செயற்கையாக மழையை உண்டுபண்ணுவதற்கான மாபெரும் முயற்சியில் ஈடுபட்டுவிட்டார். அம் முயற்சி, பல்லாண்டு ஆராய்ச் சிக்குப்பின் வெற்றியும் வழங்கியது. 1949-ஆம் ஆண்டில்

அவர் 13.40 டாலர் செலவில் ஸில்வர் அயோடைடைக் கொண்டு 32-ஆயிரம் கோடி காலன் மழையை விண்ணி லிருந்து மண்மீது பொழியுமாறு செய்து விட்டார்.

பேரரசி எலிசபெத் இந்தியாவுக்கு வந்தபொழுது "நானும், என்னுடைய கணவரும் சில மணி நேரங்களில் இந்தியாவுக்கு வந்துவிட்டோம். என்னுடைய பாட்டனார் ஏறத் தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இங்கு வர ஒரு மாதத்திற்கு மேல் பயணம் செய்ய வேண்டியதாயிருந்தது. எங்களின் குழந்தை கள் பெரியவர்களாகி இங்கு வரும் பொழுது எவ்வளவு விரைவாக வருவார்களோ?" என்று கூறினார்.

இவ்வாறு அவர் கூறியதற்கு மூலகாரணமாய் அமைந்தவர் தியோடர் வான் கார்மேன் என்ற விஞ்ஞானிதான். இன்றைய தினம் ஜெட் விமானம் மணிக்கு ஆயிரக் கணக்கான மைல் வேகத்தில் பறக்கிறதென்றால், கிரகங்களை நோக்கி ராக்கெட் செலுத்தப்படுகிறதென்றால் அதற்குக் காரணம் அந்த விஞ்ஞானியின் உலையா முயற்சிதான்.

இன்று மக்கள் நைலான் துணிகளை ஆவலுடன் அணி வதைப் பார்க்கிறோம். செயற்கை ரப்பர் செய்யப்பட்டுப் பல்வேறு வேலைகளுக்குப் பயன்படுவதையும் காண கிறோம். இவற்றையெல்லாம் உலகிற்குச் செய்தளித்தவர் யார்? கராத்தர்ஸ் என்ற விஞ்ஞானிதான்.

இன்று உலகில் செய்யப்படும் பெரும் பெரும் ஆய்வுக ளெல்லாம் ஈன்ஸ்டினின் ரிலேட்டிவிடி தத்துவத்தின் அடிப்படைமீதே செய்யப்படுகின்றன. அவர் தாம் தம்முடைய ஆய்வைப் பொருளீட்டும் நோக்கத்துடன் செய்தாரா என்றால் இல்லை. 1902-ஆம் ஆண்டில் அவர் புதுக் கண்டுபிடிப்பு களின் உரிமைப் பதிவு செய்யும் அலுவலகத்தில் பரிசோதகர் பதவி வகித்து வரும் பொழுதே அவர் ரிலேட்டிவிடி தத்துவம் பற்றிய ஆய்வை நடத்தி வந்தார்.

1905-ஆம் ஆண்டில் அவர் இருபத்தைந்து வயது இளைஞராயிருக்கும் பொழுது தம்முடைய தத்துவத்தை வெளியில் எடுத்துரைத்தார். ஆனால் அவர் அதனை அச்சிட்டு வெளியிட்டது 1906-ஆம் ஆண்டில்தான். அப்பொழுது அவர் கூறினார்: ''என்னுடைய தத்துவம் சரியான தென நிரூபிக்கப் படுமானால் ஜெர்மனியானது என்னை ஒரு ஜெர்மன் மாமகன் என்று அழைக்கும், பிரான்ஸானது என்னை உலகப் பிரஜை என்று பாராட்டும். ஆனால் அது தவறானது என நிரூபிக்கப் பட்டு விடுமானால் பிரெஞ்சு மக்கள் என்னை அவன் ஒரு ஜெர்மனியன்தானே என்று கூறுவார்கள், ஜெர்மனியர்களோ என்னை ஒரு யூதன் என்று அழைப்பார்கள்.

ஈன்ஸ்டீன் ரிலேட்டிவிடி தத்துவத்தைக் கண்டுபிடித்த தோடு மன நிறைவு பெறவில்லை. அவர் கண்டுபிடித்த மற்றொரு தத்துவமான 'போட்டோ எலக்ட்ரிக் சட்டமே' டெலிவிஷனைக் கண்டுபிடிப்பதற்கும் திரைப் படத்தில் ஒலிப் பதிவு பற்றிய பற்பல முன்னேற்றங்கள் காணவும் வழி கோலியுள்ளது. இதற்காகவே அவருக்கு 1922ஆம் ஆண்டில் பௌதீக ஆராய்ச்சிக்கான நோபல் பரிசு கொடுக்கப்பட்டது. ஆனால் அப்பரிசுத் தொகையான ஏழாயிரம் பவுன்களையாவது அவர் தமக்கென வைத்துக் கொண்டாரா எனில், இல்லை. அதனை அப்படியே அறம் செய்து விட்டார்.

அவர் இறுதிவரை ஆய்வு நிகழ்த்துவதிலேயே தம்முடைய நேரத்தைக் கழித்து வந்தார். இயற்கை முழுவதும் ஒரேவித ஒழுங்கு. ஒரேவிதச் சட்டத்தின் மீது நிகழ்வதைக் கண்டார். ஓர் அணுவுக்கு எந்தச் சட்டமோ அந்தச் சட்டமே ஒரு கிரகத்தையும் தழுவி நிற்பதை அவர் கண்டறிந்தார். பல ஆண்டுகளாகப் பாடுபட்டு 1950-ஆம் ஆண்டில் அவர் கண்டுபிடித்த இந்தத் தத்துவத்திற்கு 'யூனிபைட்பீல்ட் தியரி' என்று பெயரிட்டார். இந்தத் தத்துவம் பிரபஞ்சத்தின் திறவுகோல் போன்று விளங்கும் என்று அவர் கருதினார்.

அவர் இவ்வாறு பெரும் பாடுபட்டுப் பல ஆண்டுகளாக உழைத்து வந்தது எவ்விதப் பண வருவாயையும் குறிக்கோளாகக் கொண்டதல்ல. அவர் சாதாரணமாக, பணத்திற்குக் கொடுக்க வேண்டிய மதிப்பைக் கூட அதற்குக் கொடுக்கவில்லை. ஒரு தடவை அவர் ஒரு நூலில் அடையாளம் வைப்பதற்குக் காகிதம் கிடைக்காமல் ராக்பெல்லர் அவருக்கு அன்பளிக்காக அனுப்பி வைத்திருந்த 1500 டாலர் செக் ஒன்றையே அதற்குப் பயன்படுத்தினார். பின்னர் அந்தச் செக் வைக்கப்பட்ட நூலே காணாமற் போய்விட்ட பொழுது அதற்காக அவர் வருந்தவும் இல்லை.

விஞ்ஞானத் துறையில் மட்டுமல்ல மற்றத் துறைகளிலுள்ளோரும் மக்களின் நலன் கருதியே செயலாற்றினால் எவ்வளவோ நன்மையாயிருக்கும். ஆப்ரஹாம் லிங்கன் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டதே இன்னலுக்கு இலக்கான ஏழை எளியவர்களுக்கு உதவி செய்வதற்காகவே. அவ்விதமே அவரும் உதவி செய்து தம்முடைய தொழிலைப் புனிதமுடையதாக ஆக்கினார். அவரே போன்று தம் தொழிலைப் புனித முடையதாகச் செய்த மற்றொரு பெரியார் காந்தியடிகளாவர்.

ஆனால் அவர்களேபோன்று எத்தனை வழக்கறிஞர்கள் அத் தொழிலைப் புனிதமுடையதாக, தொண்டுசெய்வதற்கான சிறந்த வழியாகக் கருதுகிறார்கள்! சிறிய வழக்கறிஞர்கள் தாம், அதனைத் தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கான ஒரு சாதனமாகக் கருதிய போதினும் பெரிய வழக்கறிஞர்களாவது அதனைப் பிறருக்கு, ஏழை எளியவர்களுக்கு உதவி செய்யும் ஒரு புனிதத் தொண்டாகக் கருதுகின்றார்களா என்றால், இல்லை. சிறிய வழக்கறிஞர்கள் கேட்பது சிறிய கூலியாக இருக்கும் பொழுது பெரிய வழக்கறிஞர்கள் கேட்பது பெரிய கூலியாக இருக்கிறது. அவர்களை ஏழை எளியவர்கள் எவ்வாறு அணுகு வது? அவர்கள் எல்லாம் மனித இதயத்துடன் விளங்கி

ஏழை எளியவர்களுக்கு உதவி செய்ய முன்வரின் அரசாங்கம் ஏழை எளியவர்களுக்கு இலவசச் சட்ட உதவி செய்ய முன் வர வேண்டிய தேவையே இல்லாது போய்விடுமல்லவா?

ஆசிரியத் தொழில் எவ்வளவோ புனிதமானது. அதைப் பற்றி ஸிஸரோ குறிப்பிடும் பொழுது, ''நம்முடைய இளைஞர் களுக்குக் கல்வி பயிற்றுவதைவிடப் பெரிய அன்பளிப்பாக, நல்ல அன்பளிப்பாக, நாம் நம்முடைய குடியரசுக்கு வேறு எதனைத்தான் அளிக்க இயலும்?'' என்று கேட்கிறார்.

ஆசிரியத் தொழிலைப் பற்றி பிளேட்டோ குறிப்பிடும் பொழுது, 'ஒளிச் சுடரை வைத்துள்ளவர்கள் அதனை மற்றவர் களுக்கு அனுப்பிக் கொண்டே இருப்பதாகும்'' என்று எடுத் துரைக்கிறார்.

ஆனால் இத்தகைய புனிதத் தொண்டுக்கு ஆள் கிடைப்பதோ பெரும் பஞ்சமாக உள்ளது. காரணம், வருவாய் அதிகமாய் வரக் கூடிய மற்றத் தொழில்களை மக்கள் விரட்டிக் கொண்டு சென்று விடுவதுதான்.

''நாமே முன்னுக்கு வருவதைவிடப் பிறர் முன்னுக்கு வருவதற்கான ஒரு சாதனமாக நாம் அமைவது அதை விட எத்தனையோ மடங்கு மேலானது'' என்று சீன அறிஞன் ஒருவன் கூறிச் சென்றான்.

இந்தச் சிறு மொழியிலுள்ள பெரும் பொருளை நம்மில் எத்தனை பேர் உணர்கிறார்கள்? சில ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டிலே பிறந்த ஒரு மாமகன் அதனை உணர்ந்து செயலாற் றினார். அவர் யார் என்று அறிய நீங்கள் பெரிதும் ஆவலு றலாம். அவர் தாம் கோபால கிருஷ்ண கோகலே. இந்தியா வின் தலைசிறந்த தேச பக்தராக விளங்கிய அவர் பூனாவி லுள்ள பெர்கூஸன் கல்லூரியில் மாதம் ஒன்றுக்கு 75 ரூபாய் சம்பளத்திலேயே பணியாற்றினார் என்பதை நீங்கள் உணர வேண்டும். அவர் விரும்பி இருந்தால் எவ்வளவோ பெரும்

பொருளீட்டி இருக்கலாம். ஆனால் அவர் பொருளீட்டு வதைவிடத் தொண்டாற்றுவதையே பெரிதெனக் கொண்டார்.

ஆனால் நம் மக்களிடம் பார்த்தோமானால் எதையெடுத் தாலும் பணம், பணம் என்று எண்ணும் மனோ நிலையே இருந்து வருகிறது. டென்ஸிங்கும் ஹில்லாரியும் எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறி அதனை வெற்றி கொண்ட செய்தி வெளிவந்த நாளன்று நான் ஒருவரிடம் அச்செய்தியை எடுத்துரைத்த பொழுது, ''அப்படியா! அவர்களுக்கு அங்கு ஏதேனும் கிடைத்ததா?'' என்று என்னிடம் அடுத்த கேள்வியை விடுத்தார் அவர். இவ்வாறு பொருளீட்டுவதைத்தவிர்த்து சாதனை பற்றிய எண்ணமோ, சமுதாய நோக்கமோ இல்லாது வாழ்வது பெரிதும் இழிவுடையது என்று நான் கூறுகிறேன்.

சாதனை பற்றிய நோக்கம் மட்டுமல்லாது சமுதாய நலத்தோடு கூடிய சாதனைகளைச் செய்யக் கூடிய ஆர்வம் உங்களுடைய உள்ளத்தை ஆட்கொள்ள வேண்டுமென்று நான் பெரிதும் ஆசைப்படுகிறேன். அவ்வித ஆர்வத்துடன் நீங்கள் கல்வியில் கவனம் செலுத்திப் படிப்பீர்களானால் உங்களுடைய வாழ்வு பொன் மலர் நாற்றமுடைத்தது போன்று விளங்கி உலகிற்கு இறைவனால் அளிக்கப்பட்ட அருட் பெரும் கொடைபோலப் பொலிவுறும் என்பதில் ஐயமில்லை.

❀ ❀ ❀

4. கல்வியில் கருத்து

தலைவர் அவர்களே! இளைஞர்களே!!

பல்கலைக் கழகங்களை 'அல்மா மேட்டர்' என்று உரோமன் மொழியில் குறிப்பிடுவர். அதன் பொருள் தாராளத் தன்மையுடைய அல்லது பாலூட்டி வளர்க்கக் கூடிய அன்னை என்பதாகும். அவை இளைஞர்களுக்குக் கல்வியை மட்டுமல்ல ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றையும் ஊட்டும் காரணத்தால் அவற்றை இவ்வளவு சிறப்பான அடைமொழி யிட்டு அழைத்தனர் உரோமானியர்.

ஆனால் அப்பல்கலைக் கழகங்களோ சிலரைப் பொறுத்த வரையில் தாராளத் தன்மையுடைய அல்லது பாலூட்டி வளர்க்கக் கூடிய அன்னையாக இருப்பதற்குப் பதிலாக மில்ட்டன் கூறுவதுபோல கன்னெஞ்சம் படைத்த மாற்றாந்தாயாகத் தான் இருக்கின்றன. அவை அவ்வாறு சிலர் பற்றியவரையில் மாறிவிடுவதற்குக் காரணம் இளைஞர்களின் கட்டுக்கடங்காத போக்கேயன்றி வேறில்லை.

கல்வி கற்றுத் தங்களுடைய அறிவைப் பெருக்கிக் கொள்வதற்காகவும், தங்களுடைய குடும்பத்தைக் காப்பாற்று வதற்காகவும், பிறருக்கு உதவி செய்யக்கூடிய திறனும் தகுதியும் பெற்றவர்களாவதற்காகவும், இன்னும் எத்தனையோ அரும் பெரும் செயல்களை ஆற்றுவதற்காகவும் தங்களின் பெற்றோர்களால் பள்ளிக்கு அனுப்பி வைக்கப்படும் அவர்கள் சிறிதேனும் பொறுப்புணர்ச்சியோ, கடமையுணர்ச்சியோ

இல்லாது செயலாற்றுவது கண்டு நான் பெரிதும் வருந்துகிறேன்.

பாக்கிஸ்தானின் தலைமை அமைச்சராக இருந்த லியாகத் அலிகான் கூறினார், ''கையில் துப்பாக்கியுடன் காவல் காத்துக் கொண்டிருக்கும் காவலாளன் தூங்கி விழுந்து கொண்டி ருப்பதும், பள்ளிக்குப் பெற்றோர்களால் அனுப்பி வைக்கப் பட்ட பையன் கல்வியில் கவனம் செலுத்தாது பொடுபோக்காக இருப்பதும் ஒரேவிதக் குற்றம்தான். இருவரும் தங்களின் கடமையைச் செய்யத் தவறிவிட்டார்கள். அதற்கான தண்ட னையை அவர்கள் அனுபவித்துத் தான் தீர வேண்டும்'' என்று.

கடமையில் தவறிய காவலன் வேலையிலிருந்து நீக்கப்படுகிறான். கடமையில் தவறிய இளைஞனையும் பள்ளியானது தேர்வில் தோல்வியை அளிப்பதன் மூலம் தன்னுடைய எல்லையை விட்டுவிலக்கி விடுகிறது. அதனால் அவர்கள் வாழ்வில் பெரும் தோல்வி அடைகிறார்கள்.

ஆனால் இது தங்களின் தலைமீது தாங்களே மண்ணை வாரிக் கொட்டிக் கொள்வதற்கு நிகராகும் என்பதை மாணவர் களில் சிலர் உணர்வதே இல்லை. அவர்களுக்கு அவர் களுடைய பாடத்தைவிடத் திரைப்படமும் திரைப்படத்தில் நடிக்கும் நடிகர், நடிகைகளைப் பற்றிய விவரமும், உடையும் சிகரெட்டும் தாம் மேலானவையாகத் தெரிகின்றன. புதுத் திரைப்படங்கள் வெளிவர வேண்டியதுதான். அவற்றைப் பார்க்காது அவர்கள் இருப்பத்தில்லை.

இவ்வாறு நான் கூறும் பொழுது அவர்கள் திரைப் படங்களுக்கே செல்லக் கூடாது என்று கூறுவதாக எண்ண வேண்டாம்! திரைப்பட மன்றங்களில் நல்ல படங்கள், அறிவு வளர்ச்சிக்கான படங்கள் காட்டப்படின் பாடங்களிலிருந்து சிறிது ஓய்வு பெறுவதற்காகவும், மகிழ்ச்சி பெறுவதற்காகவும் அவற்றைப் போய்ப் பார்த்து வரலாம்தான். ஆனால் அதற்காக

ஆபாசப் படங்களையெல்லாம் பார்த்து அவர்கள் தங்களின் அறிவையும் ஒழுக்கத்தையும் மாசுபடுத்திக் கொள்ளக் கூடாது என்றுதான் நான் கூறுகின்றேன்.

நமக்கு வருத்தம் தருவதெல்லாம் நம் நாட்டின் வருங்கால மக்களாக விளங்க வேண்டிய இன்றைய இளைஞர்கள் ஆபாசத் திரைப் படங்களுக்குச் செல்வதிலும் அவற்றில் நடிக்கும் நடிகர் நடிகைகளின் நடிப்புத் திறன் பற்றி விமர்சனம் செய்வதிலும் தங்களின் நேரத்தை வீணாக்குவதோடல்லாது அதன் மூலம் தங்களுடைய வாழ்வையும் பாழக்கிக் கொள்கிறார்களே என்பது தான்.

இவ்வாறு விமர்சனம் செய்வதிலேதான் அவர்களுக்கு என்ன இலாபம் என்று எனக்கு விளங்கவில்லை. அறிவின் ஒரு பகுதி அறிய வேண்டாததை அறியாதிருப்பதும் ஒரு வேளை எதிர்பாராத வகையில் அறிந்து கொண்டாலும் அதனை மறந்து விடுவதுமாகும் என்பதை அவர்கள் உணர்கிறார்களில்லை.

ஆபாசத் திரைப்படங்களுக்குச் செல்வதோடு மட்டுமல்ல ஆபாசப் பத்திரிகைகளையும் புத்தகங்களையும படிப்பதிலும் அவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். அவை எவ்வளவுக் கெவ்வளவு ஆபாசமாக உள்ளனவோ அவ்வளவுக்கவ்வளவு அவற்றைப் படிப்பதில் அவர்களுக்குள்ள ஆர்வமும் அதிகப்படுகிறது. ஒருவருக்கொருவர் இரவல் கொடுத்து அவற்றை மறைவாக வைத்து அவர்கள் படிக்கிறார்கள். இவையெல்லாம் அவர்கள் தங்களுக்கே தாங்கள் தீமை இழைத்துக் கொள்ளக்கூடிய தவறான செயல்களாகும். அதற்காக நான் அவர்கள் பள்ளியில் பயிலும் பொழுது பாடப் புத்தகங்களைத் தவிர்த்து வேறு எந்தப் புத்தகத்தையும் படிக்கக் கூடாது என்று கூறவில்லை.

பாடப் புத்தகங்களைப் படித்த நேரம் போக உள்ள மற்ற நேரங்களில் அறிவு வழங்கக் கூடிய நல்ல புத்தகங்களையும்

அவர்கள் படிக்கத்தான் வேண்டும் என்று நான் கூறுகிறேன். ''வீணான புத்தகங்களைப் படிப்பது சிரமமான சோம்பேறித் தனம்'' என்று ஓர் அறிஞன் கூறினான். ஆனால் நல்ல புத்தகங்களைப் படிப்பதோ அறிவு வழங்கக் கூடிய ஓர் இன்பப் பொழுது போக்கு என்று நான் கூற ஆசைப்படுகிறேன்.

இவ்வாறுதான் அறிவுள்ள பெருமக்களெல்லாம் தங்க ளுடைய அபார வேலைகளினூடே தங்களுக்கே தாங்கள் ஓய்வு வழங்கிக் கொள்வதற்காகவும் அறிவு பெருவதற்காகவும் நல்ல நூல்களைப் படிக்கும் பழக்கத்தைப் பெற்றிருந்தனர்.

புகழ் பெற்ற பார்னாலியா போருக்கு முந்திய நாள் இரவு புரூட்டஸ் தன்னுடைய கூடாரத்தில் அமர்ந்து நூலொன்றைப் படித்துக் கொண்டிருந்ததோடு மட்டுமல்ல அதிலிருந்து குறிப்பும் எழுதிக் கொண்டிருந்தான் என்று நாம் அறிகிறோம். மூத்த பிளினி பிரயாணம் செய்யும் பொழுது கூட ஒன்றுக்கு மேற்பட்ட நூல்களைத் தம்முடன் எடுத்துச் செல்வார் என்றும் தம்முடைய அலுவல்களிலிருந்து ஓய்வு பெறத் தமக்கு வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் அவற்றைப் படிப்பார் என்றும் நமக்கு அவருடைய வரலாறு எடுத்துரைக்கிறது.

இத்தாலியக் கவிஞராகிய பெட்ரார்க்கைப் பற்றி நான் முன்னர் படித்த ஒரு சுவையான நிகழ்ச்சி இப்பொழுது என் நினைவுக்கு வருகிறது. படிக்காமலோ, எழுதாமலோ அல்லது இரண்டும் செய்யாமலோ எந்த நாளேனும் கழியின் அது பெட்ரார்க்குக்கு இன்ப நாளாகவே தோன்றுவதில்லயாம். அவர் படிப்பதிலும் எழுதுவதிலும் தம்முடைய நேரத்தை அதிகமாகச் செலவழிப்பதைக் கண்ட நண்பர் ஒருவர் அதனால் அவருடைய உடல் நலன் பாதிக்கப்படுமோ என்று அஞ்சி அவரிடம் அவருடைய நூல் நிலையத்தின் திறவு கோலைத் தருமாறு கூறினார். எதற்காக அவர் அதனைக் கேட்கிறார் என்பதை அறியாது அதனை அவரிடம் கொடுத்து விட்டார் பெட்ரார்க்.

ஆனால் அவருடைய நண்பரோ அந்த நூல் நிலையத்தை இழுத்துப் பூட்டி விட்டு, பத்து நாட்கள் வரை அதனைத் தாம் திறக்கப் போவதில்லை என்றும், அவர் அந்தப் பத்து நாட்கள்வரை யாதொரு நூலையும் படியாது ஓய்வு கொள்ள வேண்டும் என்றும் கண்டிப்பான கட்டளையிட்டார். பெட்ரார்க் எவ்வளவு கெஞ்சிக் கேட்டும் அவர் அந்தத் திறவுகோலை அவரிடம் கொடுக்கவில்லை. என்ன செய்வதென அறியாது, மிகுந்த மன வேதனையுடன் நண்பரின் அன்புக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார் பெட்ரார்க்.

படியாதிருந்த முதல் நாளே பெட்ரார்க்குக்கு ஒரு நாள் கழிவது ஓர் ஆண்டு கழிவது போன்றிருந்தது. ஆனால் இரண்டாவது நாளிலோ அவருக்குக் காலையிலிருந்து இரவுவரை சொல்லொணாத் தலைவலி ஏற்பட்டது. மூன்றாம் நாள் காலையிலோ அவருக்குக் கடுமையான சுரம் ஏற்பட்டு விட்டது. இதைக் கண்டு பெரிதும் பதறிப்போன அவருடைய நண்பர் அவருடைய நூல் நிலையத்தின் திறவு கோலை அவரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டார். அதனைக் கையிலே பெற்றதும் முகத்திலே ஒருவித மலர்ச்சி ஏற்பட்டது பெட்ரார்க்கிக்கு. படுத்த படுக்கையாய்க் கிடந்த அவர் உடனே தம்முடைய நூல் நிலையத்தைத் திறந்து அதற்குள் நுழைந்து தாம் விரும்பிய நூலை எடுத்துப் படித்தார். உடனே அவருடைய சுரமெல்லாம் எங்கோ ஓடி மறைந்து விட்டது.

இவ்வாறு அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பிருந்த மக்கள் நூல்களைப் படிப்பதில் அதிகம் ஆர்வம் காட்டினார்கள் என்று அறிகிறோம். அக்காலத்தில் நூல்கள் எல்லாம் கையால்தான் எழுதப்பட்டு வந்தன. எனவே நூல்கள் கிடைப்பது பெரிதும் அரிதாக இருந்தது. 'ஸிஸரோவின் சண்டமாருதம்' என்னும் நூல் பிரான்ஸ் எங்கணும் தேடியும் கிடைக்காததன் காரணமாகப் பிரெஞ்சு நாட்டு அரசர் தம்முடைய தூதுவரை உரோமாபுரிக்கு அனுப்பி அதில் ஒரு பிரதியைப் பெற்று வருமாறு செய்தார்.

கெம்ப்ளோர்ஸ் என்ற மடத்தின் அதிபராகிய ஆல்பர்ட் என்பவர் மிகவும் சிரமப்பட்டுப் பெரும் பொருள் செலவிட்டு நூல் நிலையம் ஒன்றை உண்டுபண்ணி இருந்தார். அதில் அவர் எவ்வளவோ சிரமப்பட்டுச் சேர்த்தவையெல்லாம் நூற்று ஐம்பது நூல்கள்தாம். ஆனால் இந்நூல் நிலையமோ அக்காலத்தில் வியத்தகு ஒன்றாக விளங்கியது.

1494ஆம் ஆண்டில் வின்செஸ்டரைச் சேர்ந்த பெரிய பாதிரியார் ஒருவர் பற்பல விஷயங்கள் பற்றிய பதினேழு நூல்களைக் கொண்ட ஒரு நூல் நிலையத்தை ஏற்படுத்தி இருந்தார். அவர் மற்றொரு மடத்திலிருந்து பைபிளின் பிரதி ஒன்றை இரவலாகப் பெற்றபொழுது அதற்கு எந்தவிதப் பாதகமும் ஏற்படாமல் திருப்பிக் கொடுத்து விடுவதாக ஓர் உறுதிமொழிப் பத்திரம் எழுதிக் கொடுத்து விட்டுத்தான் அதனைப் பெற இயன்றது.

எவரேனும் ஒருவர் ஒரு மடத்திற்கோ, ஒரு மாதா கோயிலுக்கோ ஒரு நூலை அன்பளிப்புச் செய்தால் அதன் காரணமாக தமக்கு ஈருலகங்களிலும் நற்பேறு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் தான் செய்தார். அவ்விதம் அன்பளிப்புச் செய்யும் பொழுது தெய்வ சந்நிதியில் சென்று பயபக்தியுடன் தான் அதனை அவர் அன்பளிப்புச் செய்தார். ராச்செஸ்டரிலுள்ள ஒரு மடமானது எந்த நூலையேனும் திருடவோ, ஒளித்து வைத்துக் கொள்ளவோ செய்தவர் மீது ஆண்டு தோறும் தன்னுடைய சாபத்தைப் பிரகடனப்படுத்தி வந்தது. ஒரு நூலை வாங்குவதோ, விற்பதோ தகுந்த சாட்களின்றிச் செய்யப்படுவதே இல்லை. சிறப்பு மிகு பெரியவர்கள்தாம் அதற்குச் சாட்சிகளாக அமைவர்.

1300-ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆக்ஸ்போர்டிலுள்ள நூல் நிலையத்தில் இருந்ததெல்லாம் விரல்விட்டு எண்ணக் கூடிய சில நூல்கள்தாம். அவை கூடப் பிறர் கவர்ந்து

செல்லாவண்ணம் பெட்டியில் பூட்டி வைக்கப்படவோ, சங்கிலியில் கோத்துக் கட்டி வைக்கப்படவோ செய்யப் பட்டன. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரெஞ்சு நாட்டின் அரசாங்க நூல் நிலையத்தில் நான்கே நான்கு பழம் பெரும் நூல்களும் சில துதி நூல்களும் தான் இடம் பெற்றிருந் தன. அரை டஜன் நூல்களை ஒருவன் பெற்றிருப்பதே அக்காலத்தில் பெரும் அதிர்ஷ்டமாகக் கருதப்பட்டு வந்தது.

இவ்வாறு நூல்கள் மிகவும் அரிதாக இருந்ததன் காரணமாக, கல்வியில் ஆர்வமுள்ள சிலர் அந்நூல்களைப் படிப்பதற்காக நாடெங்கணும் அலைந்து திரிந்தார்கள். தத்துவ ஞானம் பற்றி அறிந்து கொள்வதற்காக பைதாகரஸும் லைக்கர்கஸஸும் எகிப்து, ஈரான், இந்தியா ஆகிய நாடுகளுக் கெல்லாம் வந்தனர். அறிவைத் தேடுவதற்காக ஸோலோனும், பிளேட்டோவும் எகிப்துக்குச் சென்று வந்தனர். ஹேரடோடஸ் ஸும், ஸ்ட்ராபோவும் வரலாற்றுச் சான்றுகள் சேகரிப்பதற் காகவும், பூகோள நூல் எழுதுவதற்காகவும் நெடுந்தொலைப் பிரயாணம் செய்தனர்.

அந்தக் காலத்தில் அவர்கள் எவ்வளவு சிரமத்தை மேற் கொண்டு நூல்களைத் தேடிக் கண்டுபிடித்துப் படித்து வந்தனர் என்பதைப் பாருங்கள்! அவர்கள் அக்காலத்திலேயே இவ்வாறு செய்தபொழுது அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப் பட்டுக் கோடி கோடியாய் நூல்கள் அச்சடித்துக் குவிக்கப்படும் இப்பொழுது அவற்றில் நல்லவற்றைத் தேர்ந்தெடுத்து ஓய்வு நேரங்களில் படியுங்கள் என்று நான் கூறாதிருப்பின் அது பெரும் தவறு என்று நான் கருதுகிறேன்.

ஆனால் இங்கு நான் ஓர் எச்சரிக்கையும் செய்ய விரும்புகிறேன். நல்ல நூல்களைத்தாமே படிக்கின்றோம் என்று கருதிக் கொண்டு பாடப் புத்தகங்களைப் படிப்பதில் நீங்கள் ஒரு போதும் அசட்டையாக இருந்து விடக் கூடாது என்றும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது இளைஞர்களைப் பீடித்திருக்கும் மற்றொரு நோய் புகை பிடிப்பதாகும். புகை பிடிப்பதை அவர்கள் நாகரிகத்தின் சின்னமெனக் கருதுகிறார்கள். அதனால் அவர்களின் பணம் எவ்வளவு வீணாகிறது. பணத்தைச் செலவிட்டு நோயை விலைக்கு வாங்கிக் கொண்டதாக முடிகிறது என்பதை அவர்கள் உணர்வதே இல்லை. நிகலஸ் மொனார்டஸ் என்ற ஜெர்மானியர் ஒருவர் புகையிலையின் நன்மை பற்றி ஒரு பெரு நூலே எழுதியுள்ள போதினும் இப்பொழுது மருத்துவர்கள் புற்று நோய்க்கு ஒரு காரணம் புகை பிடித்தலாகும் என்று கண்டுபிடித்துள்ளனர். ஆனால் இந்தக் கண்டுபிடிப்புக்கூட இளைஞர்களின் கண்களைத் திறந்துவிடவில்லை.

புகை பிடிப்பது நாகரிகமாகி ஆங்கில நாடெங்கணும் அப்பழக்கம் பரவி எவராலும் அது தடுத்து நிறுத்தப் பெறாது தலை விரித்தாடியபொழுது ஆங்கில நாட்டு மன்னர் முதலாம் ஜேம்ஸே 'புகையிலைக்கு எதிர்ப்பு' என்ற பெயருடன் ஒரு கட்டுரை எழுதலானார்.

அக்கட்டுரையின் இறுதியில், ''அப்பழக்கம் கண்களுக்கு அருவருப்பாகவும், மூக்குக்கு வெறுப்பளிப்பதாகவும், மூளைக்குத் தீமை பயப்பதாகவும், சுவாசப் பைக்கு அபாயம் விளைவிப்பதாகவும் இருக்கிறது. அதிலிருந்து வரும் கரும் புகையோ ஆழம் தெரியாத படுகுழியலிருந்து வெளிவரும் கொடுமையான புகைக்கு மிகவும் நெருங்கியது போன்று உள்ளது'' என்று எழுதினார். ஆனால் அது எவ்வளவுதான் அரசர்களாலும், அறிஞர் பெருமக்களாலும், மருத்துவர்களாலும் கண்டிக்கப்பட்ட போதிலும் அது மக்களை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருப்பதுதான் எனக்குப் பெரும் வியப்பை அளிக்கிறது.

மாணவர்களை 'பேஷன்' என்ற பேயும் பிடித்துப் படாத பாடுபடுத்தி வருவதைக் கண்டு நான் பெரிதும் வருந்துகிறேன். அலெக்ஸாண்டர் இயற்கையிலேயே கோணல்

கழுத்துடன் படைக்கபட்டிருந்ததையறியாது அவருடைய அமைச்சர்களும் படைத்தளபதிகளும் தங்களுடைய கழுத்தைச் சற்றுச் சாய்த்துக் கோணலாக வைத்துக் கொண்டது போல இன்று மாணவர்கள் தாங்கள் காணும் நாகரிக 'கனவான்களை'க் காப்பி அடிப்பதில் முனைந்து நிற்கிறார்கள். நாகரிக உடையணிந்து அழகாக இருக்க வேண்டுமென் பதற்காக அவர்கள் படும்பாடோ சொல்லுந் தரத்ததாயில்லை.

''அலங்காரமான ஆடை அணிந்து ஒருவன் செல்வதற்காக முட்டாள்களையும் பெண்களையும் தவிர்த்து அவனை வேறு எவரும் மதிப்பதில்லை'' என்று ஓர் அறிஞன் கூறிச் சென்ற தும், ''அழகிய உடைகளையும் புதிய பேஷன்களையும் விரும்புவதும் அவற்றால் தாம் உயர்ந்து விட்டதாகக் கருதிக் கொள்வதும் சிறு பிள்ளைத் தனமான முட்டாள் தனம்'' என்று மற்றோர் அறிஞன் எடுத்துக் கூறியதும் நீங்கள் ஆபாசமாக உடையணிந்து கொள்ள வேண்டுமென்று பொருள்படாது.

நல்ல உடைகளை, உழைக்கக் கூடிய உடைகளை உடுத்திக் கொள்ளுங்கள்! பேஷன், பேஷன் என்று கூறிக் கொண்டு பேஷனுக்கு அதிகமாக முன்னும் சென்றுவிடாதீர் கள், பேஷனுக்கு அதிகமாகப் பின்னும் சென்று கர்நாடகமாக ஆகி விடாதீர்கள் என்றுதான் நான் கூறுகிறேன்.

ஒரு பெண் அமெரிக்க அதிபரின் மனைவியாக இருந்த போதினும் அவளும் சில வரையறைகளுக்கு உட்பட்டுத்தான் நடக்க வேண்டும் என்று அமெரிக்க மக்கள் விதித்துள்ளார்கள். அதில் ஒரு விதி யாதெனில், அவள் அப்பொழுது வந்துள்ள புதிய பேஷன்படி உடை அலங்காரம் செய்து கொள்ளக் கூடாது என்பதுதான். அதற்குக் காரணம் அவள் போலி நாகரிகத்தில் மூழ்கித் தன்னை மட்டுமல்லாது தன்னுடைய கணவரையும் தன்னுடைய நாட்டையும் உலகத்தின் கண்களுக்கு மதிப் பிழந்ததாக ஆக்கிக் கொள்ளக் கூடாதென்பதேயன்றி வேறில்லை.

ஏனெனில் ஓர் ஆணோ, பெண்ணோ அவர்கள் இளவயதினராயிருந்தபோதினும் நடுத்தர வயதினர்போன்று உடையணியும் பொழுது மதிக்கப் பெறுவதையும் ஓர் ஆணோ பெண்ணோ அவர்கள் முதுமையை எய்திய போதினும் இளம் வயதினர் போன்று உடையணியும் பொழுது இழிவாகக் கருதப்படுவதையும் நாம் காண்கிறோம். அவ்விதமானால் உண்மையான மதிப்பு எதில் இருக்கிறது என்பதை நீங்களே சிந்தித்துப் பார்க்குமாறு உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

இன்று இளைஞர்கள் பள்ளியில் பயின்று கொண்டிருக்கும் பொழுதே அரசியலில் ஈடுபட்டு விடுகிறார்கள். நம் நாடு அடிமைத் தளையில் கட்டுண்டு கிடந்த நேரத்தில் அரசியல் தலைவர்களின் ஆணையின்படி சிலர் பள்ளிப் படிப்பைத் துறந்து அரசியல் வேள்வியில் குதித்தார்கள்தாம். சிலர் அரசியலில் ஈடுபட்டதற்காகப் பல்கலைக் கழகத்தினரால் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் தாம்.

சட்டப் படிப்புப் படிப்பதற்காக லண்டன் சென்ற வ.வே.சு. ஐயர் அரசியலில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டப்பட்டு வெளியேற்றப்பட்டு இந்தியாவுக்குத் தரை வழியாகத் திரும்ப வேண்டியதாயிற்று. இதைப் பற்றி அவர் வேடிக்கையாகக் குறிப்பிடும் பொழுது, ''லா' படிக்கச் சென்ற என்னை-'அவுட்-லா-நாடு கடத்தப் பட்டவனாக' ஆக்கிவிட்டார்கள்'' என்று கூறனார்.

ஆனால் விடுதலை பெற்ற இந்தியாவில் மாணவர்கள் அரசியலில் அதிகம் ஈடுபடவேண்டிய அவசியம் இல்லை. படிப்பு முடிந்த பின் நீங்கள் விரும்பினால் அதில் நன்றாக ஈடுபடுங்கள்! அப்பொழுது நீங்கள் அரைகுறைப் படிப்புடன் ஈடுபட்டிருந்தால் எவ்வித மதிப்புக் கிடைக்குமோ அதைவிட எத்தனையோ மடங்கு அதிகமான மதிப்பு உங்களுக்குக் கிடைக்கும். உங்களுடைய வார்த்தைகளும் கனம் பெறும்.

ஆனால் அதற்காக நீங்கள் செய்தித்தாள்களைப் படிக்கக் கூடாதென்றோ முக்கியமான பெரும் அரசியல் தலைவர்கள் பேசினால் அவர்கள் பேச்சைப் போய்க் கேட்கக் கூடா தென்றோ நான் கூறவில்லை. படியுங்கள், கேளுங்கள் அள வோடு என்று தான் நான் கூற ஆசைப்படுகிறேன், அவ்விதம் அளவோடு நீங்கள் இவ்விரண்டையும் செய்யாதிருந்தால் நீங்கள் கிணற்றுத் தவளை போன்று ஆகிவிடுவீர்கள். அளவு கடந்து நீங்கள் இவ்விரண்டையும் செய்தால் நீங்கள் உங்களின் கல்விக்கு உலை வைத்துக் கொண்டவர்களாவீர்கள் என்றும் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

நீங்கள் செய்தித் தாள்களைப் படித்து உலகம் எவ்வாறு போய்க் கொண்டிருக்கிறது. அரசியல் வாதிகள் என்ன கூறுகிறார்கள் என்பதை நன்கு விளங்கி வைத்துக் கொள்ளுங் கள்! அரைகுறையாகப் படித்துக் கொண்டு உங்களிடையே வீண் சர்ச்சை செய்து உங்களின் மதிப்புள்ள நேரத்தை வீணாக்க வேண்டாம்! ஓய்வு கிடைக்கும் பொழுது உங்களு டைய பள்ளி மன்றங்களிலோ, போலிப் பாராளு மன்றங் களிலோ பெரும் பெரும் அரசியல் பிரச்சினைகள் பற்றி வாக்குவாதம் நிகழ்த்துங்கள்! அவ்விதம் செய்வது உங்களு டையஅறிவைத் துலக்குவதோடு உங்களையும் வருங்காலப் பெருவாழ்விற்கு ஆயத்தப் படுத்திவிடும் என்பதில் ஐய மில்லை.

ஆகையினால் மாணவர்களாகிய நீங்கள் அரசியலிலே நேரடியாக ஈடுபடக் கூடாதென்றும் தொலைவிலிருந்தே அதனை நோக்குபவர்களாக இருக்க வேண்டுமென்றும் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அவ்விதமே தான் இன்றைய தினம் உலகில் பெரும் பெரும் அரசியல்வாதிக ளாகவும் அரசியல் தலைவர்களாகவும் இருப்போரெல்லாம் செய்துள்ளார்கள்.

பிரிட்டிஷ் முதலமைச்சர் மேக்மில்லனும் அவ்விதமே செய்துள்ளார். அமெரிக்க அதிபர் கென்னடியும் அவ்விதமே செய்துள்ளார். நம் நாட்டுப் பிரதமராயிருந்த ஜவஹர்லால் நெஹ்ருவும் அவ்விதமே செய்துள்ளார். அவர் படித்துப் பெற்ற பட்டத்தை விடத் தகுதி, பதவி ஆகியவற்றில் உயர்ந்தவராக ஆகிவிட்ட போதினும் அவர் ஒரு எம்.ஏ.பார்-அட்லா என்பதையும் எம்.ஏ. வகுப்பில் அறிவியல் பாடம் எடுத்துப் படித்தவர் என்பதையும் நீங்கள் மறந்துவிட வேண்டாம்! அவர்களுடைய வாழ்வெல்லாம் உங்களுக்குச் சிறந்த வழி காட்டும் ஒளி விளக்குகளாக விளங்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

இப்பொழுது புதிய கல்வித் திட்டப்படி 'பள்ளிக்கு வெளியிலுள்ள அலுவல்கள்' என்ற பெயருடன் மாணவர்கள் மருத்துவ நிலையங்களுக்குச் சென்று நோயாளர்களை விசாரித்தல், சமூக வேலைகள் செய்தல், சாலைகள் ஏற்படுத்துதல் முதலான பலவித பொது நல வேலைகளில் ஈடுபடுமாறு உற்சாகப்படுத்துகிறார்கள். அவ்விதம் ஈடுபடும் மாணவர்களுக்குச் சில தனிச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தின் மூலம் இளைஞர்கள் பள்ளியில் பயிலும் பொழுதே பிற்காலத்தில் பொது நலப் பணியில் ஈடுபடுவதற்கான மனோநிலையும் பயிற்சியும் ஏற்படுவதாக அரசு கருதுகிறது.

மல்லன் ஒருவன் எவ்வாறு மற்போர்க்களத்தில் குதிப்பதற்குமுன் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்வானோ அவ்வாறே நீங்களும் வாழ்க்கைப் போரிலே ஈடுபட்டு வாகை சூட அறிவு என்னும் கேடயத்தால் உங்களை அரண் செய்து கொள்ளுங்கள்! கல்வியில் செலுத்த வேண்டிய உங்களுடைய அறிவையும் ஆற்றலையும் அனாவசிய வேலைகளில் செலுத்தி வீணாக்க வேண்டாம்! அவற்றைச் சேமித்துப் பெருக்குங்கள்! பின்னர் வாய்ப்புக் கிடைக்கும் பொழுது அவற்றை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்தலாம்.

சில மாணவர்கள் விளையாட்டிலேயே அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். எப்பொழுது பார்த்தாலும் அவர்களுக்கு விளையாட்டு பற்றிய எண்ணமாகவே உள்ளது. விளையாடு வதிலேயே தங்களின் காலைப் பொழுதையும் மாலைப் பொழுதையும் களிப்புடன் கழிக்கிறார்கள். பின்னர் தேர்வு வந்த பொழுது கேள்வித் தாளைக் கையிலே பெற்றுப் பேந்தப் பேந்த விழித்து விட்டுத் தோல்வியைச் சுமந்து கொண்டு வீடு திரும்புகிறார்கள். இவ்வாறு அவர்கள் நடந்து கொள்வதைக் கண்டு நான் பெரிதும் வருந்துகிறேன்.

கல்வி பயில வந்த அவர்கள் கல்விக்கு முதல் முக்கியத் துவம் கொடுப்பதற்கு மாறாக விளையாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துத் தோல்வியை அரவணைத்துக் கொள்வது எவ்வளவு அறிவீனம் என்று நான் கூறத் தேவை இல்லை.

உரோம நாட்டின் பேரரசராக விளங்கிய நீரோ நாட்டை ஒழுங்கான முறையில் ஆள்வதற்குப் பதிலாக, ''என்னை எவரேனும் புல்லாங்குழல் வாசிப்பதில் வெற்றிகொள்ள இயலுமா? இயலும் என்று எண்ணுபவர்கள் என்னுடன் போட்டி யிட முன் வரலாம்'' என்று அறைகூவல் விடுத்துக் கொண்டு நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் அலைந்து திரிந்தாராம்.

மாஸிடோனியாவின் மன்னர் இரோப்பஸ் தம்முடைய பெரும்பாலான நேரத்தை விளக்குகள் செய்வதில் செல விட்டுக் கொண்டிருந்தாராம். பாத்தியாவின் மன்னர் ஹெர் காஷியஸ் சுண்டெலிகளைப் பிடிப்பதில்நிபுணராம். அவரு டைய நாட்டில் அவரேபோன்று சுண்டெலிகளைப் பிடிப்பதில் தீரர் ஒருவரும் இல்லையாம். அவர் தம்முடைய பெரும் பாலான நேரத்தைச் சுண்டெலிகளை எவ்வாறு கண்ணி வைத்துப் பிடிப்பது என்பதிலேதான் செலவழித்துக் கொண்டிருந்தாராம்.

இவ்வாறு, அரச பாரத்தைத் தாங்கிச் செங்கோல் செலுத்த வேண்டிய அரசர்கள் புல்லாங்குழல் ஊதுபவராகவும் விளக்குச் செய்யும் நிபுணராகவும், சுண்டெலி பிடிக்கும் தீரராகவும் இருந்தால் உலகம் அவர்களை எவ்விதம் மதிக்குமோ அவ்விதமே கல்வி பயிலச் சென்ற மாணவன் விளையாட்டில் கவனம் செலுத்துவதையும் உலகம் மதிக்கும்.

ஆனால் அவர்கள் விளையாட்டில் சிறு சிறு வெற்றிகள் பெற்றதைப் பற்றிப் பெருமையாக எண்ணிக் கொள்ளலாம். எனினும் படிக்கச் சென்ற அவர்கள் படிப்பிலும் அவ்விதம் வெற்றி பெற்றிருந்தாலல்லவா நன்றாயிருக்கும்.

இந்தக் கட்டத்தில் நான் ஒன்று கூற விரும்புகிறேன். உங்களுக்கு ஒரு விளையாட்டில் தனித்திறமை இருக்கு மானால் அதில் தீவிரமாக ஈடுபட்டு உங்களின் திறனை வளர்த்து நன்றாகப் புகழ் பெறுங்கள்!

❖ ❖ ❖

5. ஒழுக்கப் பயிற்சி

தலைவர் அவர்களே! இளைஞர்களே!!

''இளைஞர்களின் ஒழுக்கத்தை அபிவிருத்தி செய்வது கல்வியின் முழு நோக்கமாக இல்லாத போதினும் முக்கிய நோக்கமாகும்'' என்று ஓர் அறிஞன் கூறினான். அவனைப் பின்பற்றினாற் போன்றே மற்றோர் அறிஞனும், ''ஒரு குழந்தை யைக் கனவானாகவோ சீமாட்டியாகவோ செய்வதற்காக அதற்குக் கல்வி பயிற்றாதே! அதனை ஒரு மனிதனாகவோ, பெண்ணாகவோ செய்வதற்காகவே கல்வி பயிற்று!'' என்று கூறிச் சென்றான்.

இவ்வாறு அந்த அறிஞன் கூறிச் சென்ற இறவாவரம் பெற்ற பொன்மொழியிலுள்ள ஆழ்ந்த கருத்தை நீங்கள் சிந்தித்துப் பார்ப்பதைவிடப் பன்மடங்கு அதிகமாக இங்கே வரிசையாக அமர்ந்திருக்கும் ஆசிரியப் பெருமக்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏனெனில் உங்களுக்குக் கல்வியை மட்டுமல்ல, ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றையும் கற்றுத் தரவேண்டிய மாபெரும் பொறுப்பு அவர்களைச் சார்ந்ததாக இருக்கிறது.

அலெக்ஸாண்டர் பரந்த ஆழ்ந்த அறிவைப் பெறுவதற்கு அவனுக்கு அரிஸ்டாட்டில் உறுதுணையாக இருந்த போதினும் அவனுக்கு வேணவாவையும் குறிக்கோளையும் ஏற்படுத்தி யது லிஸிமாக்கஸ் என்ற ஆசிரியராவார். அவரே அலெக்ஸாண் டரை நோக்கி, ''நீ வீராதி வீரன் அச்சிலஸ்போன்று ஆக

வேண்டும்'' என்று கூறியதோடல்லாமல் அவனை அச்சிலஸ் என்றும் அழைத்தார். இவ்வாறு அவர் செய்ததே அலெக்ஸாண்டரை மாபெரும் வீராதி வீரனாக ஆக்கியது.

இவ்வாறு அரிஸ்டாட்டில் மட்டுமின்றி லிஸிமாக்கஸும் அலெக்ஸாண்டரின் விதியைத் தீர்மானித்தது போல ஆசிரியர்களாகிய நீங்களும் உங்களிடம் கல்வி பயிலும் மாணவர்களின் விதியைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கிறீர்கள். ஆசிரியர்களாகிய நீங்கள் உங்களுடைய வேலையில் சிலபொழுது களைப்புக் கொள்ளலாம். ஏனெனில் ஒரு கிரேக்கப் பழமொழி கூறுகிறபடி ஒரே விஷயத்தைப் பற்றிய ஒரேவித செய்தியை ஒரேவித மக்களுக்குச் சொல்லக் கூடிய ஒரே மனிதராக ஆசிரியர்களாகிய நீங்கள் இருந்தபோதினும் நீங்கள் இளைஞர்களுக்குக் கல்வி, ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றைக் கற்றுத் தருவதில் இன்பம் காண வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

''படிப்பது என்பது இன்பம் பயப்பதுதான். ஆனால் படிப்பதில் பெறும் இன்பத்தை, பிறருக்குப் படித்ததைக் கற்றுக் கொடுப்பதில் பெறக் கூடிய இன்பத்தோடு ஒப்பிட்டுக் கூற இயலாது'' என்று பேராசிரியர் ஒருவர் கூறிய பொன்மொழி உங்களுக்குச் சிறந்த வழி காட்டும் வசனமாக விளங்கும் என்று நம்புகிறேன்.

நீங்களோ ஒரு பெரும் புனிதத் தொண்டைச் செய்கிறீர்கள். அகத்திலே அறிவு விளக்கேற்றி மாணவர்களின் இளம் உள்ளத்திலே அறிவுச் சுடர் கொளுத்தும் ஆசிரியப் பெருந்தகைகளாகிய உங்களை நான் மனமார வாழத்துகிறேன். அப்பெருந் தொண்டைச் செய்வதற்காக நீங்கள் பெறக்கூடிய ஊதியமோ சிறிது. நீங்கள் கைம்மாறு கருதாது ஆற்றும் உதவிக்கு வானகமும் வையகமும் ஆற்றல் அரிது என்று கூறினும் பொருந்தும்.

எனவேதான் அரிஸ்டாட்டிலும் கூறிச் சென்றார், 'குழந்தை களுக்குக் கல்வி போதிப்பவர்கள் அவர்களை ஈன்றெடுத்த தாய் தந்தையரைவிட அதிகமாகக் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் ஆவார்கள். ஏனெனில் அவர்களின் தாய் தந்தையர்கள் அவர்களுக்கு உயிரைத் தான் வழங்குகின்றனர்; ஆசிரியர்களோ அவர்களுக்கு நன்றாக வாழும் கலையை வழங்கியுள்ளார்கள்'' என்று.

இளைஞர்களுக்கு நன்றாக வாழும் கலையைப் போதிக் கும் அசிரியர்களாகிய நீங்கள் முதலில் நன்றாக வாழும் இயல்பினராக இருக்க வேண்டும். அவ்விதம் நீங்கள் இருந்தால்தான் உங்களைப் பின்பற்றிஉங்களிடம் கல்வி பயிலும் மாணவர்களும் அவர்களேயறியாமல் நல்ல பண்பாடு களைப் பெறுவர். எனவே தான் அறிவிற் சிறந்த பெண்மணி ஒருவரும், 'நீங்கள் உங்கள் குந்தைகள் எவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அவர்களாக உங்களு டைய பேச்சிலும் வாழ்விலும் இருங்கள்!'' என்று கூறிச் சென்றார்.

ஆகையினால் ஆசிரியர்களாகிய நீங்கள் உங்களிடம் கல்வி பயிலும் மாணவர்கள் பின்பற்ற விரும்பும் உயரிய ஒழுக்கங்களைப் பெற்றிருப்பதோடல்லாது அவற்றை வாயப்புக் கிடைக்குந் தோறும் பாடங்களினூடே மாணவர் களுக்குச் சொல்லியும் கொடுங்கள்! ஏனெனில் அமெரிக்க அதிபராக இருந்த தியோடர் ரூஸ்வெல்ட் கூறியதுபோல, ''இளைஞர்களை மிகவும் உயர்தரமான பிரஜையாகச் செய்வதற்கு அவர்களுக்கு அறிவுரைகள் வழங்குவது மிகவும் இன்றியமையாததாகும்.''

எனவேதான் ஓர் அறிஞனும் ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, ''அவர்கள் சமுதாய அமைப்பில் மிகவும் கௌரவமான இடத்தில் அமர்த்தப் பெற வேண்டியவர்கள். ஏனெனில் அவர்கள் தாம் சட்டம் செய்வோர்களின் தோழர்கள்,

நாட்டில் குற்றங்கள் நிகழாவண்ணம் தடுக்கும் சாதனங்கள். நாட்டின் இரத்த நாளங்களில் இரத்தத்தை ஓடுமாடு செய்து மீண்டும் அதனை நாட்டின் இதயத்திற்குத் தூய்மையாகத் திருப்பி அனுப்பக் கூடியவர்கள்'' என்று கூறினான்.

ஆனால் பாடங்களைப் போதிப்பதாயினும் சரி, ஒழுக்கங் களைப் போதிப்பதாயினும் சரி நீங்கள் சில முறைகளைப் பின்பற்ற வேண்டும். ஆசிரியர்களைப் பற்றி ஓர் அறிஞன் விளக்கம் கூறும் பொழுது, ''கடினமான விஷயங்களை இலகுவாகச் செய்யக் கூடியவனே ஆசிரியனாவான்'' என்று எடுத்துரைத்தான். அதேபோன்று நீங்கள் எவ்வளவுதான் உயர்ந்த செய்திகளை மாணவர்களுக்குப் போதிப்பதாயிருந்த போதினும் சரி, அதனையும் நீங்கள் இலகுவான இனிமையான முறையில் எடுத்துரைத்தால்தான் அவர்கள் அவற்றை வெறுக்காது ஏற்றுக் கொள்வார்கள்.

எனவேதான் அறிஞர்க்கறிஞரான பிளேட்டோவும், ''பையன்களுக்கு வன்முறையாலும் கடுமையினாலும் கல்வி போதிக்காதீர்கள்! அவர்களுடைய உள்ளத்திற்கு உகந்த விஷயங்களில் அவர்களின் கவனத்தைத் திருப்பிவிடுங்கள்!'' என்கிறார். அவ்விதம் செய்து அவர்களிடம் படிக்க வேண்டுமென்று ஆவலைத் தூண்டிவிடாது நீங்கள் அவர்கள் விரும்பாத செய்திகளை அவர்களின் மூளையில் கொண்டு போய்த்திணிப்பது பழுக்கக் காய்ச்சாத இரும்பைத் திரும்பத் திரும்ப ஓங்கி அடிப்பதற்கு நிகராகுமேயன்றி வேறில்லை.

இளம் மாணவர்களை ஒடுக்கமான கழுத்துள்ள ஜாடிக்கு நிகராகக் கூறலாம். நீங்கள் அதிகமாக அறிவுத் தண்ணீரை ஊற்றியபோதினும் சரி அல்லது குறைவாக ஊற்றியபோதினும் சரி அதில் உள்ளே புகுவது என்னவோ ஒரே சமயத்தில் சொற்பம்தான். ஆதலின் பிரெஞ்சு அறிஞன் மாண்டெய்ன் கூறுவதுபோல, ''சிறிதளவு நீங்கள் மாணவர்களிடம் படிக்க

வேண்டுமென்ற ஆவலை உண்டுபண்ணாது அவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது அவர்களைப் புத்தகம் சுமக்கும் கழுதைகளாக ஆக்குவதற்கான வழியேயன்றி வேறில்லை.''

அவ்விதம் மட்டும் அவன் கூறி நிறுத்தவில்லை. ஓர் ஆசிரியர் எவ்வாறு மாணவர்களுக்குப் பாடங்களைப் போதிப்பது என்பது பற்றி அவன் மேலும் கூறும் பொழுது, ''ஒரு குழாயில் தண்ணீரை ஊற்றுவது போன்று ஓர் ஆசிரியர் மாணவர்களின் காதுகளில் பாடங்களைத் தொடர்ச்சியாகப் பொழிந்து தள்ளிக் கொண்டிருக்கக் கூடாது. அதற்குமாறாக, அவர்களைச் சிந்திக்குமாறு தூண்டிவிட வேண்டும். சில வேலைகளில் விளக்கக் கதவைத் திறந்து விட வேண்டும். விஷயங்களை பாகுபடுத்தி அவர்களே விஷயங்களின் தாரதம்மியங்களை அறியுமாறு செய்ய வேண்டும். மறு மொழியில் அவர்களே அதனைத் திறந்து கொள்ளுமாறு விட்டுவிட வேண்டும். மாணவர்களின் தகுதிக்குத் தகுந்த வண்ணம் அவர் தம்முடைய வரைமுறைகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.'' என்று எடுத்துரைக்கிறான். இவற்றை நீங்கள் நன்கு சிந்தித்துச் செயலாற்ற வேண்டுமென்று நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன்.

உங்களிடம் பயிலும் மாணவர்கள் எவ்வாறு தேர்வில் தோல்வியுறுவதற்கு நீங்கள் ஓரளவு பொறுப்பாளியாக இருக்கிறீர்களோ அவ்வாறேதான் அவர்கள் ஒழுக்கம், பண்பாடு ஆகியவை குறைந்தவர்களாக இருப்பின் அதற்கும் ஓரளவு நீங்கள் பொறுப்பாளிகளாவீர்கள் என்ற கசப்பான உண்மையை நான் உங்களிடம் எடுத்துரைத்துத் தான் ஆக வேண்டும்.

மாணவன் ஒருவன் மற்றொரு மாணவனின் கையைப் பிடித்துத்திருகி ஒடித்து விட்டதைக் கண்ட தலைமை ஆசிரியர், கையை ஒடித்த மாணவனைத் தனியாகத் தம் முடைய அறைக்கு அழைத்துச் சென்று, ''நீ எத்தனை

ஆண்டுகளாக இப்பள்ளியில் பயில்கிறாய்?'' என்று வினவினார். அவன் ''ஐந்தாண்டுகளாய்'' என்று பதில் கூறியதும் தலைமை ஆசிரியர் அவனை வேறொன்றும் செய்யவில்லை. ''கையை நீட்டு!'' என்றும் கூறவில்லை.

''ஐந்தாண்டுகளாக நீ இப்பள்ளியில் பயின்றும் ஒழுக்கம் பெறவில்லையாயின் அதற்கான பொறுப்பு என்னையே சாரும். எனவே இதோ மூலையில் சாத்தப்பட்டிருக்கும் பிரம்பை எடுத்து உன்னால் இயன்ற மட்டும் என் கையில் ஓங்கி அடி!'' என்று கூறினார். அவ்வளவுதான். அந்த மாணவனின் உள்ளம் உருகிவிட்டது. ஆசிரியரின் கால்களில் விழுந்து, ''இனிமேல் நான் தவறு செய்ய மாட்டேன். என்னை மன்னியுங்கள்!'' என்று கூறித் தேம்பித் தேம்பி அழுதான். அக்கணத்திலிருந்து அவனுடைய வாழ்விலே ஒரு புதுத் திருப்பம் ஏற்பட்டு விட்டது. இந்த உண்மை வரலாறும் உங்களுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக விளங்குமென்று நம்புகிறேன்.

கிரேக்கத் தத்துவ ஞானியாகிய அரிஸ்டிபஸ்ஸிடம் ''இளைஞர்களுக்கு எத்தகைய கல்வி அளிக்கப் பெற வேண்டும்?'' என்று ஒருவர் வினவியபொழுது, ''அவர்கள் மனிதப் பருவத்தை எய்தியபொழுது அவர்களுக்கு எந்தக் கல்வி பயன் படுமோ அந்தக் கல்வியை அளியுங்கள்!'' என்று அவர் கூறினார்.

இப்பொழுது நம் பாடத் திட்டத்தில் வாழ்க்கைக்குப் பயன்படாத பல பாடங்கள் சேர்க்கபடப்டிருந்தபோதினும் ஆசிரியர்களாகிய நீங்கள் அவற்றை மாணவர்களுக்குப் போதிக்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலையில் இருந்த போதினும் அவர்களுக்கு வாழ்க்கையில் பயன்படக் கூடிய, வாழ் வாங்கு வாழ வழி முறைகளைக் காட்டக் கூடிய கல்வியையும் போதியுங்கள்!

துணிவு, தன்னம்பிக்கை, வேணவா, குறிக்கோள், முயற்சி ஆகியவை பற்றிய நற்சான்றுகளைப் பெரியார்களின்

வரலாறுகளிலிருந்து எடுத்துரைத்து அவர்களும் அப்பெரியார் கள் போன்று ஆகிப் பெரும் செயல் புரிய வேண்டும், பெரும் தொண்டு ஆற்ற வேண்டும் என்று கூறி அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளியுங்கள்! இவ்வாறு நீங்கள் செய்வது அவர்களுக்கு வாழ்வாங்கு வாழ வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

இப்பொழுது நம் இளைஞர்களைப் பார்த்தோமானால் பட்டம் பெறுவதற்காகவும் அப்பட்டத்தைக் காட்டிப் பதவி பெறுவதற்காகவும் படிப்பவர்களாகவே இருக்கிறார்கள். பதவி கிடைத்ததும் அவர்கள் தங்கள் வாழ்க்கையின் பயனையே எய்தி விட்டதாக எண்ணி வாளா இருந்து விடுகிறார்கள். பதவி கிடைக்காத பொழுதோ அவர்கள் எவ்வாறு வாழ்வது என்பதை அறியாது பரிதவிக்கிறார்கள். அவர்கள் இவ்வாறு பரிதவிப் பதற்குக் காரணம், அவர்களுக்கு வாழ்க்கைத் தத்துவங்கள் பற்றிய போதிய பயிற்சியும் தாங்கள் எவ்வாறு வாழ்வது என்பது பற்றி ஏற்கனவே எவ்விதக் குறிக்கோளும் இல்லாததேயாகும்.

சட்டப் படிப்புப் படித்த பலர் வழக்கறிஞர் தொழிலை மேற்கொள்ளாது வங்கிகளில் கணக்காளர் வேலைக்கு விண்ணப்பம் செய்து கொண்டிருப்பதைக் கண்டு எனக்கு வேடிக்கையாகவுள்ளது. ''நீங்கள் ஏன் சட்டப் படிப்புப் படித்துவிட்டு வேலைக்கு விண்ணப்பம் செய்கிறீர்கள்? இதற்கும் அப்படிப்புக்கும் என்ன தொடர்பு?'' என்று நாம் கேட்டோமானால், ''சட்டப் படிப்புப் படித்தேன் தான். எனினும் அத்தொழிலில் புக எனக்கு அச்சமாக உள்ளது. முன்னரே நான் சட்டத் துறையில் புகும் நோக்கத்துடன் அக்கல்வியைப் பயிலவில்லை. படித்துப் பட்டம் பெற்று வைப்போமே. வேலைக்கு விண்ணப்பம் செய்யும் பொழுது அது நமக்கு அதிகப்படியான தகுதியைத் தானே வழங்கும் என்று கருதி அதனைப் படித்தேன்'' என்று கூறுவார்கள்.

நம் மக்கள் பதவி பெறுவதற்காகப் படித்துப் பட்டம் பெறும் காரணத்தால் அவர்கள் கனவில் கூடத் தங்களின்

பெயருக்குப் பின் பட்டத்தைப் போடுவதை மறப்பதில்லை. ஆங்கில எழுத்துக்கள் இருபத்து ஆறையும் பட்டங்களாகப் போட்டுக் கொள்ள நேர்ந்தாலும் அவர்கள் அவற்றைத் தங்களின் பெயருக்குப் பின் போட்டுக்கொள்வதில் அணுவத்தனையும் அலுப்புக் கொள்வதில்லை.

அவர்கள் ஒரு வேளை தங்களின் பெயரை மறந்த போதினும் தங்களின் பட்டத்தை ஒருபோதும் மறப்பதில்லை. அவர்களுக்கு நாம் மடல் தீட்ட நேரின் அவர்களின் பட்டத்தை நாம் மறந்து விட்டுப் பெயரை மட்டும் எழுதினால் அவர் களுக்கு அவர்களே அறியாமல் நம்மீது ஒருவித வெறுப் புணர்ச்சி ஏற்படுகிறது. அவர்கள் பட்டத்தைவிடக் குறைவான பட்டத்தை நாம் அறியாத் தனமாக அவர்களின் பெயருக்குப் பின் பொறித்து விட்டாலோ அவர்களுக்கு நம்மீது அளவற்ற சினமும் ஏற்பட்டுவிடுகிறது.

யானைக்கு நெற்றிப் பட்டம் கட்டுவது போன்று நம் நாட்டில்தான் பட்டதாரிகள் தங்களின் பெயருக்குப்பின் தங்களின் பட்டத்தைப் போட்டுக் கொண்டு திரிகிறார்களே ஒழிய வேறு எந்நாட்டிலும் இவ்வித வழக்கமில்லை. தேவைப் படும் பொழுது தங்களின்பெயருக்குப்பின் பொறிப்பார்களே தவிர தேவையற்ற பொழுது அவர்கள் ஒரு போதும் செய்வதே இல்லை. வாழ்விலே பெரும் சாதனை செய்வதைத் தான் அவர்கள் பெரிதாகக் கருதுகிறார்களேயொழிய பட்டத்தை யல்ல. எனவே அவர்களுடைய பெயரோடு நாம் அவர்களு டைய பட்டத்தையும் பார்க்க இயலுவதில்லை.

சான்றாக, ஈன்ஸ்டீன் என்ன பட்டம் பெற்றாரென்றோ பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்ன பட்டம் பெற்றாரென்றோ ரூஸ்வெல்ட் என்ன பட்டம் பெற்றாரென்றோ நம் அறியோம். அதற்காக அவர்கள் பட்டம் பெறவில்லை என்று நாம் கூற இயலாது. பட்டம் பெற்றார்கள் தாம். எனினும் பட்டத்தை அவர்கள் காட்டிக் கொள்ளவில்லை. தாங்கள் பள்ளியில்

பெற்ற பட்டத்தைவிட எத்தனையோ மடங்கு அதிகமாகத் தங்களுடைய தகுதியை அவர்கள் உயர்த்திக் கொண்டனர். அதன் காரணமாக அவர்கள் பெற்ற பட்டம் அவர்களின் தகுதியின் முன் அணுவத்தனையாகிவிட்டது. இத்தகு மன நிலை மாணவர்களாகிய உங்களுக்கு ஏற்பட வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.

நீங்கள் பள்ளியிலிருந்துவெளிவரும் பொழுது எம்.ஏ. பட்டம் பெற்று வெளிவந்தபோதினும் நீங்கள் அத்துடன் ஒரு 'என்' என்ற எழுத்தையும் சேர்த்து ஒரு மனிதனாக வெளிவந்தா லொழிய நான் உங்களை மதிக்கப்போவதில்லை. அப்பொழுது நீங்கள் மனிதப் பருவத்தை எய்தியிருப்பீர்கள் தாம்.

ஆனால் நான் மனிதன் என்று கூறும் பொழுது வயதால் மட்டும் மனிதத் தன்மை எய்துவதைக் குறிப்பிடவில்லை. ஒழுக்கம், பண்பாடு ஆகியவற்றிலும் நீங்கள் மனிதத் தன்மை யுள்ள மனிதராக விளங்க வேண்டும், அதற்கு இப்பொழு திருந்தே உங்களைப் பண்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறுகிறேன். அதற்கு முதல் கட்டம் நீங்கள் உங்களின் பெற்றோர்களுக்கு நன்மகனாக விளங்குவதுதான். ஏனெனில் பெற்றோர்களுக்கு நன்மகனாக விளங்குபவன் எல்லோருக்கும் நன்மகனாக விளங்குவான் என்பதில் ஐயமில்லை.

பெற்றோர்களைப் பற்றி ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியர் குறிப்பிடும் பொழுது, ''பெற்றோர்களின் குரல் கடவுளின் குரலாகும். ஏனெனில் அவர்கள் அவர்களுடைய குழந்தை களுக்குக் கடவுளுடைய பிரதிநிதியாக உள்ளனர்'' என்று கூறுகிறார்.

ஆகையினால் நீங்கள் உங்களுடைய பெற்றோர்களின் மனம் நோகாவண்ணம் அவர்களின் அறிவுரைப்படி ஒழுகுவதோடல்லாது நீங்கள் பெரியவர்களாகும் பொழுது அவர்களுக்கு உங்களாலான உதவிகள் அனைத்தையும் செய்ய

வேண்டுமென்று உங்களை வேண்டிக் கொள்கிறேன். அவர்கள் தாம் உங்களுக்காக வேண்டி எவ்வளவு சிரமத்தை மேற் கொண்டுள்ளார்கள். எவ்வளவு தியாகம் செய்துள்ளார்கள், தம் முதுமையின் போது நீங்கள் உதவி செய்வீர்களென்று எவ்வளவு கனவு கண்டு கொண்டுள்ளார்கள். அதற்கு மாறாக, நீங்கள் நடப்பீர்களானால் அந்தச் செய்ந்நன்றி கொன்ற பாவத்தை நீங்கள் எவ்வகையாலும் போக்கவே முடியாது. அவர்களுடைய சாபம் உங்களுடைய வாழ்வையே அறுத்துவிடும்.

ஆனால் சிலர் தங்களின் தாய் தந்தையருக்கு மாறு செய்தும் அவர்களின் முதுமையில் அவர்களைக் கவனியாமலும் இருக்கிறார்கள். அவர்கள் எப்பொழுது இறந்தொழிவார்கள் என்பதே அவர்களுடைய நித்திய ஜபமாக இருக்கிறது. அவர்களைப் பற்றி நான் என்னவென்று கூறுவது?

இமாம் ஸஅதி குலிஸ்தானில் சுவையான நிகழ்ச்சி ஒன்றைக் கூறுகிறார். அவர் மக்காவுக்கு ஹஜ்ஜுச் செய்யச் சென்ற நேரத்தில் அங்கு ஓர் இளவலைப் பார்த்து, ''தம்பீ! உனக்கு எந்த ஊர்?'' என்று வினவினார். அதற்கு அவன், தான் பிறந்த ஊரைக் கூறினான். அது கேட்டு ஸஅதி, ''அப்படியா! அந்த ஊருக்கு நான் வந்துள்ளேனே, நீ யார் மகன்?'' என்று வினவினார். அதற்கு அவன் தன்னுடைய தந்தையின் பெயரைக் கூறினான். அது கேட்டுப் பெரிதும் மகிழ்ந்த ஸஅதி, ''அப்படியா! உன்னுடைய தந்தை எனக்கு நண்பராயிற்றே. அவர் முன்பொருதடவை ஹஜ்ஜுச் செய்ய வந்தபொழுது நானும் அப்பொழுது இங்கு வந்திருந்தேன். அப்பொழுது இறைஞ்சுதல் ஏற்றுக் கொள்ளப்படும் இடத்தில் நின்று தமக்கு ஓர் ஆண் குழந்தை தந்தருளுமாறு இறைஞ்சினார். அதன் மூலம் பெறப் பட்ட குழந்தையா நீ? நல்லது. உன்னைப் பார்த்ததில் எனக்குப் பெரும் மகிழ்ச்சி. நீ ஊருக்குத்திரும்பியதும் என்னுடைய ஸலாத்தை உன்னுடைய தந்தைக்குத்

தெரியப்படுத்து!'' என்று கூறி அவனிடமிருந்து விடை பெற்றார்.

அவர் அவனிடமிருந்து விடை பெற்றுச் சில அடிகள் தாம் எடுத்து வைத்திருப்பார். அதற்குள் அவன் அவரைக் கைதட்டிக் கூப்பிட்டு, ''நீங்கள் இறைஞ்சுதல் ஏற்றுக் கொள்ளப்படும் இடம் என்று கூறினீர்களே, அது எங்கே இருக்கிறது?'' என்று வினவினான். அதற்கு அவர், ''ஏன்?'' என்று கேட்டார். ''என்னுடைய தந்தையை விரைவில் தன்பால் அழைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் அவ்விடத்தில் நின்று இறைவனிடம் இறைஞ்ச விரும்புகிறேன்'' என்று பதில் கூறினான் அவன். அவ்விதமகனாக நீங்கள் ஒருபோதும் இருக்கக் கூடாது.

பெற்றோர்களுக்கு அடுத்தபடியாக நீங்கள் உங்களுடைய ஆசிரியர்களுக்குப் பணிந்து நடக்க வேண்டும். எவ்வாறு துரோணரிடம் ஏகலைவன் குருபக்தியுடன் நிகழ்ந்தான் என்பதையும் அவர் அவனுடைய வலக்கைப் பெருவிரலைக் காணிக்கையாக வேண்டியபோதினும் கொடுத்தான் என்பதையும் நீங்கள் மறந்துவிட வேண்டாம்!

நம் நாட்டில் குடியேறியுள்ள உலகப் பெரும் விஞ்ஞானி ஹால்டேன் கல்கத்தாவில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தி முடித்ததும் அங்குத் தமக்கு வங்கமொழி பயிற்றுவித்துவரும் ஆசிரியரும் வந்திருப்பதைக் கண்டு அவரை ஆங்கிருந்த மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்திவிட்டுக் கீழே குனிந்து அவருடைய பாதங்களை வணங்கப் போன செய்தியையும் நீங்கள் சில நாட்களுக்கு முன் செய்தித் தாள்களில் பார்த்திருக் கலாம். எழுபது வயது நிரம்பப் பெற்ற அவர் நாற்பது வயதுள்ள அவருடைய வங்காளி ஆசிரியருக்குச் செய்த மரியாதையை இந்தியா முழுவதும் வியப்புக் கண்கொண்டு பார்த்தது.

ஆனால் இக்கால மாணவர்களில் சிலர் ஆசிரியர்கள் இடும் ஆணைகளுக்குக் கீழ்ப்படியாதும் அவர்களை ஏளனமாய்

இழித்துரைப்பதன் மூலம் தாங்கள் பெரிய மனிதர்களாக ஆகிவிட்டதாகவும் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களின் உருவத்தைப் பார்த்து, அவர்களை அவர்களின் முதுகுக்குப் பின் நகைக்கவும் அவர்களுக்குக் கேலிப் பெயர் வைக்கவும் செய்கிறார்கள். இவை மிகவும் கண்டிக்கத் தக்கவையாகும்.

ஒருவரின் உருவத்தைப் பார்த்து அவரை மதிப்பிடுவதென்பது தவறாகும். ஆசிரியர்கள் அனைவரும் அழகாகவும் எடுப்பாகவும் இருப்பார்களென்று நாம் எதிர்பார்க்க இயலுமா? அழகாகவும் எடுப்பாகவும் உள்ளவர்களெல்லாம் அறிவாளிகள், மற்றவர்களெல்லாம் அறிவற்றவர்கள் என்று நாம் எண்ண இயலுமா?

ஏதன்ஸில் நடந்த ஒலிம்பிக் விளையாட்டைப் பார்க்க வந்த அயல் நாட்டினர் சிலர் அறிஞர்க் கறிஞர் பிளேட்டோவையும் பார்த்துவிட்டுச் செல்ல விரும்பினர். விளையாட்டு வெளியில் அவரை அவர்கள் பார்த்தபொழுது, அவர் தாம் பிளேட்டோ என்று ஒருவர் அவர்களிடம் கூறியபோதினும் அவருடைய தோற்றத்தையும் எளிய இயல்பையும் பார்த்து அவர்கள் அவர்தாம் பிளேட்டோ என்று நம்பவில்லையாம். அவருடைய ஊழியராக இருப்பார் என்று தங்களுக்குள்ளே பேசிக் கொண்டார்களாம். இது பிளேட்டோவின் செவியிலும் விழுந்ததாம்.

ஆனால் அவர்கள் பிளேட்டோவின் 'அகடமிக்கு' பிளேட்டோவைக் காணச் சென்றபொழுது அங்கு பிளேட்டோ தலைமை இடத்தில அமர்ந்து நூலொன்றைப் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவர்கள் அதிர்ந்து போயினராம்.

இவ்வாறே எவ்வித அழகும் எடுப்பும் அற்றவராக அவருடைய ஆசிரியர் சாக்ரடீஸும் இருந்தார். அவர்கள் அழகற்றவர்களாக இருந்தனர் என்பதற்காக அவர்களை அறிவற்றவர்கள் என்று கருதி உலகம் நகையாடியதா என்ன?

ஆகையினால் உங்கள் ஆசிரியர்கள் எவ்விதம் இருந்த போதிலும் சரி, அவர்களுக்கு மதிப்பளியுங்கள்! அவர்களின் அன்புக்கும் ஆசிக்கும் அருகதையானவர்களாக உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள்!

உங்களுடைய பள்ளித் தோழர்களிடமும் நீங்கள் அன்போடு நடந்துகொள்ளுங்கள்! ஒருவருக்குத் தெரியாததை மற்றொருவர் எடுத்துரைத்து ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசை செய்து கொள்ளுங்கள்! இவ்விதம் செய்வது உங்களிருவருக்குமே நல்லது என்று நான் கூற விரும்புகிறேன், சில மாணவர்கள் பிற மாணவர்களின் புத்தகங்களை எடுத்து ஒளித்து வைத்து விடுவார்கள். பிற மாணவர்கள் எதாவது சந்தேகம் கேட்டால் கூற மாட்டார்கள். இது அவர்களுடைய குறுகிய அறிவையே காட்டுகிறது.

படிப்பில் ஓரளவு பொறாமை உணர்வு இருக்க வேண்டியதுதான். அவ்விதம் இருந்தால்தான் மாணவர்கள் ஒருவரை முந்த ஒருவர் உரோஷத்துடன் படிப்பார்கள். ஆனால் அவ்வுணர்வு அளவுக்கு மீறிச் சென்றுவிடக் கூடாது என்று நான் உங்களைக்கேட்டுக் கொள்கிறேன்.

நீங்கள் ஒருவரோடொருவர் அளவுக்கதிகமான கேலி, நகையாடல் இன்றி அளவோடு பழகுங்கள்! ஒவ்வொருவரும் சிறுசிறு குறைகளைப் பெற்றிருக்கிறோம். நம்முடைய இயல்புகளில் சில விநோதமாகக் கூட இருக்கும். ஆனால் அவற்றை எடுத்துக் காட்டிக் கேலி செய்வதென்பது ஒரு போதும் அறிவுடைமையாகாது. ஒரு நகைச் சொல்லுக்காக வேண்டி ஒரு நண்பனை இழப்பதென்பது எவ்விதம் அறிவுடைமையாகும்?

மரியாதை கொடுத்து மரியாதை பெறுவதென்பது பண்புகளிலெல்லாம் மேலான பண்பாகும். அதேபோன்று நமக்கு ஒருவர் செய்யும் மரியாதையை நாம் அவருக்குத் திருப்பி அளிப்பதும் ஆகும். பள்ளியில் பயிலும் மாணவர்களில் சிலர்

பொருளாதாரத்தில் உயர்ந்தவர்களாகவும் இருக்கலாம். தாழ்ந்தவர்களாகவும் இருக்கலாம். அதற்காகப் பொருளாதாரத் தில் உயர்ந்தவர் பொருளாதாரத்தில் உயர்ந்த மற்றவர்களை மட்டும் மதிப்பதும், பொருளாதாரத்தில் தாழ்ந்தவர்களை இழிவாக நோக்குவதும் சரியல்ல. நாம் எவ்வளவுதான் உயர்ந்த பதவியில் இருந்தபோதினும் மனிதனுக்கு மனிதன் செய்யக் கூடிய மரியாதையைச் செய்வதுதான் மாண்பாகும்.

14-ஆவது கிளிமென்ட் போப்பரசராக முடி சூட்டப்பட்ட பொழுது அவ்விழாவில் கலந்து கொண்ட பிற நாட்டுத் தூதுவர்களுக்கு அவர் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். அப்பொழுது அவர்கள் அவருக்குத் தலை குனிந்து வணக்கம் செலுத்திய பொழுது அவரும் அவ்விதமே அவர்களுக்குப் பதில் வணக்கம் செலுத்தினார்.

அச்சமயத்தில் விழா நடத்தும் அதிகாரி அவரை நெருங்கி காதோடு காதாக, "நீங்கள் பதில் வணக்கம் செலுத்தக் கூடாது. அது மரபுக்கு மாற்றமாகும்" எனறு கூறினார். அது கேட்ட 14-வது கிளிமென்ட், "என்னை மன்னியுங்கள்! நற்பண்புகளை மறந்துவிடும் வண்ணம் நான் நீண்ட நாட்களாகப் போப்பாக இல்லை" என்று மறுமொழி பகர்ந்தார். இந்த நிகழ்ச்சி உங்களுக்குச் சிறந்த அறிவுரையாக விளங்குமென்று நான் நம்புகிறேன்.

மாணவர்களில் சிலர் பிறருடைய முதுகுக்குப் பின் அவர்களை இழித்துரைக்கும் வழக்கமுடையவர்களாக இருக் கிறார்கள். ஒருவரைப் பற்றிக் கூறும் பத்துப் புகழ் மொழி களைவிட அவரைப் பற்றிக் கூறும் ஓர் இழிமொழி அவருடைய மனத்தில் ஆழமாகப் பதிந்து அவருக்கு நீங்கா வருத்தத்தை அளித்துக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பள்ளியில் பயில வந்த நாட்டுப்புற மாணவன் ஒருவன் எப்பொழுது பார்த்தாலும் எல்லாருக்கும் கடைசியாக வகுப்பறையை விட்டு அகல்வதைக் கண்ட ஓர் ஆசிரியர்

அவனைப் பார்த்து, "ஏன் அப்பா! ஒவ்வொரு நாளும் இவ்வாறு எல்லோருக்கும் இறுதியாகச் சென்று கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டபொழுது, "ஒரு பையன் வெளியே சென்றதும் அவனைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் கூறுகிறார்கள். எனவே பிறருக்கு என்னைப் பற்றி ஏதேனும் அவதூறு கூற வாய்ப்பு வழங்கக் கூடாது என்பதற்காகவே எல்லாருக்கும் இறுதியாக நான் வகுப்பறையை விட்டுச் சென்று கொண்டுள்ளேன்" என்று கூறினானாம் அவன்.

தன்னைப் பற்றிக் குறை கூறக் கூடாதென்று அந்த மாணவன் மட்டும் எண்ணவில்லை, உலகில் பிறந்த ஒவ்வொரு வரும் தான் எண்ணுகிறார்கள். ஒரே அறையில் வாழ்ந்து வந்த இரண்டு மாணவர்கள் தங்களுக்கிடையே ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அது என்ன? ஒவ்வொரு வரும் தாங்கள் மற்றவரிடம் காணும் குறைகளை ஒவ்வோர் இரவும் ஒருவர் மற்றவரிடம் எடுத்துரைத்து வரவேண்டும். இவ்வாறு அவர்கள் சில இரவுகள்தாம் செய்தார்கள். பின்னர் என்ன? ஒருவர் மற்ற வரை விட்டுச்சொல்லிக் கொள்ளாமல் பிரிந்து தனித் தனி அறைகளில் தங்கலானார்கள். அவர்கள் தாங்கள் பிரிந்ததன் காரணத்தை எவரிடமும் எடுத்துரைக்கவில்லை.

மனித இயல்பு இவ்வாறு இருக்கிறது. அதற்குப் பெரிய மனிதர்கள் கூட விதி விலக்கில்லை. சுபாஷ்போஸ் தமக்கு விரோதமான கருத்துக்களைக் கொண்டிருந்ததன் காரணமாக ராஷ்டிரபதி தேர்தலில் சுபாஷ் போஸுக்கு எதிராகப் பட்டாபி சீத்தாராமையாவை காந்தியடிகள் ஆதரிக்கவில்லையா? எனினும் சுபாஷ்போஸ் வெற்றி பெற்றபொழுது அதனை விரும்பாத காந்தியடிகள், "பட்டாபியின் தோல்வி என்னுடைய தோல்வி" என்று வெளிப்படையாக அறிக்கை வெளியிட வில்லையா?

ஸாக்ரடீஸின் விரோதியாகிய ஆரிஸ்டாபனிஸ் ஸாக்ரடீஸுக்கு விரோதமாகச் செய்த பொய்ப்பிரச்சாரம் கொஞ்சமல்ல.

அவன் அவரை எங்குப் பார்க்கினும் தூற்றியே திரிந்தான. 'ஆன்மாவுக்கு இறப்பு இல்லை' என்னும் சாக்ரடீஸின் கொள்கையைக் கிண்டல் பண்ணி ஒரு நாடகமே எழுதி அதனை நடிக்கச் செய்தான். சாக்ரடீஸும் அந்த நாடகத்தைப் பார்க்கச் சென்றார்தாம். எனினும் தம் வெறுப்பை அவர் அணுவத்தனையுயம் காட்டிக் கொள்ளவில்லை. காய்தல், உவத்தல் இன்றி அதனைப் பார்த்துக் கொண்டிருப்பவராகவே அவர் காணப்பட்டார்.

ஆனால் பின்னர் அவர் நஞ்சினை அருந்துமுன் தம் முடைய நண்பர்களிடம் ஆன்மாவின் அழிவற்ற தன்மையைப் பற்றி உரையாடிக் கொண்டிருக்கும் பொழுது, ''இந்த நேரத்தில் இந்த விஷயம் பற்றி நான் உங்களுடன் உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு வேடிக்கை செய்யும் அறிவு மேதையும் என்னைக் குறை கூறமாட்டார் என்று நம்புகிறேன்'' என்று கூறிய பொழுது அவர் தம்முடைய எதிரியாகிய அரிஸ்டா பனிஸையே மனத்திற்கொண்டு பேசினார் என்பதில் ஐயமில்லை.

அடுத்தபடியாக மாணவர்கள் ஒருவரைப் பற்றி மற்றொரு வர் ஆசிரியர்களிடம் சென்று கோள் சொல்லித்திரியக் கூடாது. அதன் காரணமாக, பல விபரீதப் பலன்களெல்லாம் ஏற்பட ஏதுவாகும். மேலும் தங்களிடையே நிகழும் சிறு சிறு சச்சரவுகளையெல்லாம் அப்பொழுதைக்கப் பொழுது மறந்துவிட்டுச் செல்ல வேண்டுமேயன்றித் தலைமை ஆசிரியரிடம் எடுத்துக் கொண்டு ஓடக் கூடாது.

அமெரிக்காவின் அயல் நாட்டு அமைச்சராக இருந்து பேரும் புகழும் பெற்ற ஜார்ஜ் மார்ஷல் பள்ளியில் பயின்று கொண்டிருக்கும் பொழுது அவரை ஒரு மாணவன் வேண்டு மென்றல்ல; எதிர்பாராத முறையில் கடுமையாகத் தாக்கிப் பெரும் காயத்தை உண்டுபண்ணிவிட்டான். யார் அவ்விதம் செய்தது என்று எத்தனையோ பேர் அவரைத் தூண்டித் துருவி

விசாரித்த போதினும் ஜார்ஜ் மார்ஷல் தமக்குக் காயத்தை உண்டுபண்ணிய அந்த மாணவனைக் காட்டிக் கொடுக்கவே இல்லை. அதுகண்டு ஆசிரியர்கள் முதல் மாணவர்கள் வரை அவரை வியந்து பாராட்டினார்கள்.

அவ்வித மனோ நிலையை-அந்த மனோ நிலைக்கு ஜார்ஜ் மார்ஷல் மனோ நிலை என்று கூறினாலும் பொருந்தும் என்று நான் எண்ணுகிறேன்-நீங்களும் பெற வேண்டும்.

இவ்வாறு நீங்கள் பல நற்பண்புகளைப் பெற்று நன்மக்களாக விளங்குவதோடு நல்ல பழக்கங்களையும் உண்டு பண்ணிக் கொள்ள வேண்டும். ஏனெனில் பழக்க வழக்கங்கள் மனிதனின் இயற்கைக்கு அடுத்தபடியான இடத்தைப் பெறுகின்றன. தொடக்கத்தில சிறு நூலிழைபோன்று இருக்கக் கூடிய பழக்க வழக்கங்கள் பின்னர் அவர்களைப் பிணைக்கக் கூடிய இரும்புச் சங்கிலிபோல் ஆகிவிடுகின்றன. அதனை விட்டொழிப்பதென்பது பின்னர்இயலாத செயலாகி விடுகிறது.

பாஸ்டில் சிறையில் வைக்கப்பட்டிருந்த ஒருவன் பல ஆண்டுகள் கழித்து விடுதலை செய்யப்பட்ட பொழுது தன்னால் வெளியிலுள்ள சூழ்நிலையோடு ஒத்துப் போக இயலாதென்றும் எனவே தான் பலகாலம் அடை பட்டுக் கிடந்த சிறையிலேயே தன்னை வைத்திருக்குமாறும் மன்றாடிக் கேட்டுக் கொண்டானாம்.

ஆகையால் நீங்கள் இப்பொழுதிருந்தே நல்ல பண்பாடு களையும் பழக்க வழக்கங்களையும் மேற்கொள்ளுங்கள்! அது தொடக்கத்தில் உங்களுக்குச் சிறிது சிரமமாக இருந்த போதினும் பின்னர் உங்களை வாழ்வில் உயர்விக்கும் ஏணிப் படிகள் போன்று உதவும் என்பதில் ஐயமில்லை.

❋ ❋ ❋

6. தேர்வும் தயாரிப்பும்

தலைவர் அவர்களே! இளைஞர்களே!!

''கல்வியின் வேர் கசப்பாகத்தான் இருக்கும். ஆனால் அதனுடைய பழமோ இனிமையானது'' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அரிஸ்டாட்டில் கூறிச் சென்றார். அவர் அன்று கூறிச் சென்ற அப்பொய்யா மொழி இன்றும் பொய்யா மொழியாகவே இருந்து வருகிறது.

தொடக்கத்தில் சிறுவர்கள் தங்களுடைய தமயன்மார்கள் பள்ளிக்குச் செல்லும் பொழுது, ''நானும் போகிறேன் பள்ளிக்கு'' என்று கூறிச் சிணுங்கவும் அடம் பிடிக்கவும் தான் செய்வார்கள். அப்பொழுது நாம் அவர்களைப் பள்ளிக்கு அனுப்பி வைத்தால் மகிழ்ச்சியுடன் சென்று பெருமிதத்துடன் வீடு திரும்பவும் செய்வார்கள்.

ஆனால் அவர்களுக்கு வயது வந்தபொழுது அவர்களைப் பள்ளியில் வைப்பின், பள்ளியில் சொல்லித் தரப்படும் பாடங்களை நினைவு வைத்துப் பாடம் சொல்ல வேண்டிய சிரமமான பொறுப்பு அவர்களின் தலைமீது சுமத்தப்படுவதன் காரணமாக அவர்கள் பள்ளிப் படிப்பையே வேம்பென வெறுக்கத் தொடங்கி விடுகிறார்கள். அப்பொழுது அவர்களுக்கு மிட்டாய், தின்பண்டம் முதலியவை வழங்கி, அவர்களுக்கு எவ்வளவோ இத மொழிகள் எடுத்துரைத்து அவர்களைப் பள்ளிக்கு அனுப்பி வைப்பதற்குள் பெற்றோர்களுக்குப் போதும் போதும் என்றாகி விடுகிறது.

அப்படி அவர்களை அனுப்பி வைப்பினும் அவர்கள் சிணுங்கிக் கொண்டு வேண்டா வெறுப்பாகத் தங்களுடைய கால்களை இழுத்துக் கொண்டு பள்ளி செல்கிறார்கள்.

இதனையே ஆங்கில மகாகவி ஷேக்ஸ்பியரும், ''குணங்கிக் கொண்டிருக்கிற பள்ளிச் சிறுவன் தன்னுடைய புத்தகப் பையோடும் ஒளிரும் காலை முகத்தோடும் பள்ளிக்கு வேண்டா வெறுப்பாக நத்தைபோல் ஊர்ந்து செல்கிறான்'' எனறு அழகாக எடுத்துரைக்கிறார். இவ்வாறு அவன் நத்தைபோன்று ஊர்ந்து செல்வதற்குக் காரணம் அவனுடைய சுதந்திரம் முடக்கப்பட்டு, படிக்க வேண்டிய பொறுப்பு அவன்மீது சுமத்தப்பட்டதுதான். ஆனால் அந்தப் பொறுப் பைத் தட்டிக் கழித்து அவன் ஊர் சுற்றித் திரிந்தால் அவனால் அறிவைப் பெற இயலாததோடு அறிவு நிரம்பிய முழு வாழ்வையும் பெற இயலாது போய்விடுகிறது.

அறிவைப் பெறுவதற்குச் சிரமப்பட்டு படிப்பதைத் தவிர வேறு வழியில்லை. பணத்தாலும் பலத்தாலும் அதனை ஒரு போதும் பெற இயலாது. க்ஷேத்திரக் கணிதத்தை யூக்ளிட்டிடம் படித்துக் கொண்டிருந்த முதலாம் தாலமி அது சிரமமாக இருப்பதைக் கண்டதும் இதனைப் புரிந்து கொள்ள இலகுவான வழி இல்லையா என்று வினவியபொழுது, ''க்ஷேத்திரக் கணிதத்திற்குச் செல்ல, இலகுவான இராஜ பாட்டை வேறொன்றுமில்லை'' என்று கூறினார் யூக்ளிட். அவர் கூறிய இந்த மறு மொழி க்ஷேத்திரக் கணிதத்திற்கு மட்டுமல்ல, மற்ற எல்லாப் பாடங்களுக்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

விளையாடுவதில் வெறுப்புக் காட்டாத மாணவர்கள் படிப்பதில்தான் தங்கள் வெறுப்பைக் காட்டுகிறார்கள். மனித இயல்பு பொதுவாக இவ்வாறே இருக்கிறது. எனவேதான் ஆங்கில அறிஞன் ஜான்ஸனும், ''அறிவை இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று இருந்தபோதினும் பெரும்

பாலான மக்கள் அதை இலகுவாகப் பெறுவதிலுள்ள சிறு சிரமத்தைக் கூட ஏற்றுக் கொள்ள முன்வருவதில்லை'' என்று எடுத்துரைக்கிறான்.

நோய் தீரவேண்டுமானால் கசப்பு மருந்தையும் கண்ணை மூடிக் கொண்டு அருந்தித்தான் தீர வேண்டும் என்பதுபோல நீங்கள் தேர்வில் தேர்ச்சி பெற்றுப் பெருவாழ்வு வாழ வேண்டுமானால் உங்களுக்கு விருப்பமில்லாத பாடத்தையும் விருப்பத்துடன் படித்துத்தான் தீர வேண்டும். எனக்குத் தெரிந்த ஒருவர் மருந்து அருந்துவதென்றால் அது எவ்வளவு கசப்பு மருந்தாயிருந்த போதினும் சரி, முகத்தைச் சுளிக்கவோ முணு முணுக்கவோ செய்வதில்லை. மகிழ்ச்சியுடன் அதனை அருந்தி விடுவார். அவர் இவ்வாறு செய்ததற்குக் காரணம், செய்து தான் தீர வேண்டியதை முகத்தைச் சுளித்துக் கொண்டும் முணுமுணுத்துக் கொண்டும் செய்வதைவிட மகிழ்ச்சியுடன் செய்து விடுவோமே என்பதுதான்.

ஸ்பெயின் நாட்டின் அரசியாக இருந்த இஸபெல்லா பிரசவ வேதனைக்கு ஆட்பட்டபொழுது எல்லா விளக்கு களையும் அணைத்து விடுமாறு கூறினாளாம். ''ஏன்?'' என வினவப்பட்ட பொழுது, ''நான் வேதனை தாங்க முடியாமல் முகத்தைச் சுளிக்கும் பொழுது எவரும் என்னைப் பார்த்து இழிவாக எண்ணிக் கொள்ளக் கூடாது. அதற்காகத்தான் அவ்விதம் செய்யச் சொல்கிறேன்'' என்றாளாம் அவள். அவளைச் சுற்றி இருந்த தாதிப் பெண்கள், ''அரசியே! வேதனை அதிகப்படும் பொழுது ஒலி எழுப்பிக் கத்துங்கள்! அதனால் வேதனை குறையும்'' என்றனராம். அது கேட்டு இஸபெல்லா, ''வாயைப் பொத்திக் கொண்டு வெறுமனே இருங்கள்! நான் ஓர் அரசி, பல பேர் அறிய அழுவதா? நான் செத்தாலும் சாவேனேயன்றி வாய் விட்டு அழமாட்டேன்'' என்று பதில் கூறினாளாம்.

அரசி இஸபெல்லாவின் மனோநிலையைப் பாருங்கள்! எவ்வளவு வேதனை ஏற்பட்ட போதினும் அதனைப்

பொறுத்துக் கொள்வதன் மூலம் அவ்வேதனையை மிகைக்க வேண்டும், அதுவே தனக்கு அழகு என்று அவள் கருதினாள். அவ்வித மனோ நிலையே உங்களுக்கும் ஏற்பட வேண்டும்.

சில பாடங்கள் உங்களுக்குத் தலை வேதனை அளிக்கக் கூடியவையாக இருக்கலாம். அதற்காகப் படிப்பை விட்டே வெருண்டோடுவதோ, அந்தப் பாடத்தையே படிக்காமல் இருப்பதோ சரியல்ல. ஏனெனில் உங்களுக்குக் கடினமாக, வெறுப்பாக உள்ள பாடங்களிலும் குறைந்த அளவு மதிப்பெண்களாவது பெற்றால் தானே நீங்கள தேர்வில் வெற்றி பெற இயலும். இல்லையெனில் நீங்கள் மற்றப் பாடங்களில் எவ்வளவுதான் நல்ல மதிப்பெண்கள் எடுத்திருந்தும் பயனில்லாமல் அல்லவா போய்விடும்.

நான் சில மாணவர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் தங்களுக்கு எளிதாகவும் இனிமையாகவும் உள்ள பாடங்களை அதிகமாப் படிப்பார்கள். தங்களுக்கு கடினமாகவும் கசப்பாக வும் உள்ள பாடங்களை மாற்றந்தாய் மனோ நிலையுடன் படிப்பார்கள். இது தவறிலும் தவறாகும்.

எவ்வாறு ஒரு தளபதி தன்னுடைய கோட்டையை அரண் செய்யும் பொழுது அதில் வலுவற்ற பகுதிகளில் அதிகமான கவனம் செலுத்தி அதனை வன்மையுறச் செய்ய வேண்டுமோ அதேபோன்றுதான் ஒரு மாணவனும் தன்னைத் தேர்வுக்குத் தகுதிப் படுத்திக் கொள்ளுமுன் தனக்குக் கடினமாக உள்ள பாடங்களில் அதிகக் கவனம் செலுத்தி அதில் தேர்வதற்கான குறைந்த அளவு மதிப்பெண்களையாவது பெற முயல வேண்டும்.

பொதுவாக, மனிதர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். கணிதம், அறிவியல் ஆகியவற்றில் ஆர்வமுள்ளவர்கள், இலக்கியத்தில் ஆர்வம் குறைந்தவர்களாக இருக்கின்றனர். இலக்கியத்தில் ஆர்வம் உள்ளவர்கள், கணிதம், அறிவியல் ஆகியவற்றில் ஆர்வம் குறைந்தவர்களாக இருக்கிறார்கள். இரண்டிலும் ஆர்வமுள்ளவர்களும் இலலாமல் இல்லை.

ஆதலின் ஒருவனுக்குக் கணக்கு என்றாலே பிணக்காக இருக்குமானால் அவன் அதற்காகக் கவலைப்பட வேண்டிய தில்லை. அவனுக்கு இலக்கியத்தில் அதிகமான ஆர்வமும் அறிவும் இருக்கும் என்று நான் கூறுகிறேன். ஆனால் கணக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக ஒருவன் அதனுடன் பிணங்கிக் கொண்டு இருக்கக் கூடாது.

உங்களுக்கு விருப்பமில்லாத, உங்களுக்குக் கடினமாக வுள்ள பாடங்களையும் உங்களுக்குப் போதிக்கப்படுவதன் நோக்கம், உங்களுக்குச் சிரமமான செயல்களையும் நீங்கள் மகிழ்ச்சியுடன் செய்வதற்குப் பழக்கப்படுவதற்காகத்தான். இந்தப் பழக்கம் உங்களுடைய வருங்கால வாழ்வில் பெரும் உதவியாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

ஒரு மாநிலத்தின் தலைவர் ஒவ்வொரு நாள் காலையிலும் புகைவண்டி புறப்பட்டதும் தம்முடைய குதிரையை அதனுடன் போட்டியிட்டுச் செலுத்திக் கொண்டு செல்வதைப் பார்த்து, ''இதுவென்ன வேடிக்கை?'' என்று சிலர் பேசிக் கொள்ளத் தான் செய்தார்கள். ஆனால் அவரோ அதனை வேடிக்கையாகச் செய்யவில்லை. தம்முடைய குதிரையை வசப்படுத்தி அதனை வெகு துரிதமான அலுவல்களைச் செய்வதற்குப் பழக்கப்படுத்துவதற்காகவே அவர் அவ்விதம் செய்தார். முதலில் குதிரை மருளவும் இடக்குப் பண்ணவும் தான் செய்தது. பின்னர் புகை வண்டியுடன் போட்டியிட்டுச் செல்வதில் அது ஒரு விதத் தனிமகிழ்வு கொள்ளத் தொடங்கி விட்டது.

இவ்விதம் நீங்கள் உங்களுக்கு விருப்பமில்லாத பாடங்களுடன் பிணங்கிக் கொள்ளாது, அத்துடன் இணக்க மாகப் போக முயலுங்கள்! இணக்கமாகப் போவதற்கு ஒரே வழி அவற்றுடன் நீங்கள் நெருங்கிப் பழகுவதுதான்.

நீங்கள் இலக்கியத்தில் எவ்வளவுதான் பெரிய மேதையாக இருந்தபோதினும் ஒரு சிறு கணக்குக் கூட உங்களுக்குத்

தெரியாதிருந்தால் உங்களைப் பார்த்துச் சிறுவர்கள்கூட நகையாட மாட்டார்களா? அதேபோன்று நீங்கள் எவ்வளவு தான் கணித மேதையாகவோ, அறிவியல் அறிஞராகவோ இருந்த போதினும் ஒரு சிறு கட்டுரை எழுதவோ. ஒரு சிறு சொற்பொழிவு நிகழ்த்தவோ உங்களால் இயலாது போய்விடின் அது உங்களுக்கு இழிவல்லவா?

ஆதலின் உங்களுக்கு விருப்பமான பாடங்களில் நீங்கள் எவ்வளவுதான் வன்மையானவர்களாக இருந்தபோதினும் உங்களுக்கு விருப்பமில்லாத பாடங்களில் குறைந்த அளவாவது தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். அப்படி இல்லாதிருப்பது வலக்கை இரும்புக்கை போன்றும் இடக்கை சூம்பிய கையாகவும் இருப்பதற்கு நிகராகுமேயன்றி வேறில்லை.

மாணவர்களில் சிலர் பள்ளி செல்வதிலும் அலட்சியமாக இருக்கிறார்கள். சிலர் பள்ளி சென்ற போதினும் ஆசிரியர் கற்றுக் கொடுக்கும் பாடங்களைச் சரிவரக் கவனியாது அடிக்கடி வெளியே செல்வதிலும் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருப்பதிலும் மனத்தை எங்கோ செல்ல விட்டுவிட்டு உடலை மட்டும் அங்கு வைத்துக் கொண்டு இருப்பதில் தங்களின் நேரத்தைக் கழிக்கிறார்கள்.

அவர்களின் எண்ணம், ''ஆசிரியர் கூறுவதை என்ன கவனிப்பது? நம்மிடத்தில்தான் புத்தகம் இருக்கிறதே. விளக்க நூலும் வாங்கி வைத்துள்ளோமே. அவற்றை வைத்துக் கொண்டு நாம் பின்னர் படித்துக் கொள்ளலாம்'' என்பதாகவே இருக்கிறது. அவர்களின் இவ்வித மனோநிலையைக் கண்டு அவர்களைப் பற்றி என்ன கூறுவது என்று எனக்கு விளங்க வில்லை.

கைதேர்ந்த சமையற்காரன் ஒருவன் அறுசுவை உண்டி நமக்காக அரும் பாடுபட்டுச் சமைத்து நமக்கு ஊட்டி விட

முன்வந்திருக்கும் பொழுது, ''நான் இப்பொழுது உண்ண மாட்டேன். பின்னர் நானே சமைத்து உண்டு கொள்வேன்'' என்று சமையற் கலையில் கற்றுக் குட்டியாக உள்ள ஒருவன் கூறுவானேயானால் அது அறிவுடையாகுமா?

ஆனால் இவ்விதமே மாணவர்களில் சிலர் செய்கிறார்கள். ''இப்பொழுது என்ன படிக்க வேண்டியுள்ளது. இன்னும் தேர்வுக்கு எவ்வளவோ நாட்கள் இருக்கின்றன. அதற்குள் நாம் ஏன் இவ்வளவு சிரமத்தை மேற் கொள்ள வேண்டும்'' என்பதும் அவர்களின் எண்ணமாக இருக்கிறது. ஆனால் அவர்கள் தேர்வு நெருங்கியதும் எலலாப் பாடங்களையும் படிக்க நேரமில்லாது தவியாய்த் தவிக்கிறார்கள். இழந்த நேரத்தைத்திரும்பப் பெறுவது என்பதுதான் உலகில் எவராலும் இயலாத செயலாயிற்றே.

ஆங்கில நாட்டுப் பேரரசியாக இருந்த முதலாம் எலிசபெத் இறந்து கொண்டிருந்த நேரத்தில், ''இன்னும் ஓர் அங்குல நேரத்தை எனக்கு எவரேனும் தந்தால் பத்து இலட்சம் பவுன்கள் தருகிறேன்.'' என்று ஈனக் குரலில் கூறியும் ஒருவரும் அவருக்குஅதனைக் கொடுக்க முன்வரவில்லையே. ஆகையினால் படிக்க வந்த மாணவன் படிக்க வேண்டிய நேரத்தைப் படிப்பில் செல வழியாது வீணே கழித்தால் பின்னர் வருந்த நேரிடும் என்பதில் ஐயமில்லை.

எனவே நீங்கள் ஆண்டுத் தொடக்கதிலிருந்தே நேரத்தை வீணாக்காது தேர்வுக்குத் தயாராகும் முறையில் நன்கு படியுங்கள்! வகுப்பில் ஆசிரியர் சொல்லிக் கொடுக்கும் பாடங்களை நன்கு கவனிப்பதோடு மட்டுமல்ல, குறிப்பும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். இவ்விதம் செய்வதனால் ஆசிரியர் கூறும் பாடங்களும் விளக்கங்களும் உங்களுடைய மனத்தில் நன்கு பதிய ஏதுவாகின்றன.

ஆசிரியர் கூறுவது உங்களுக்கு அரைகுறையாக விளங்கிய போதினும் அவற்றையும் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள்! பின்னர் இல்லம் சென்றபின் அமைதியாக இருந்து பாடங்களை யும் அவற்றிற்கு ஆசிரியர் கொடுத்த விளக்கங்களையும் வைத்துக் கொண்டு படிப்பீர்களேயானால் பள்ளியில் நீங்கள் அரைகுறையாக விளங்கிக் கொண்டுவந்த செய்திகளும் நன்கு விளங்கக் காண்பீர்கள்.

சில கடினமான பகுதிகளை எவ்வாறு இலகுவாகத் தேர்வின்போது எழுதுவது என்பது பற்றி ஆசிரியர் கூறும் பொழுதும், சில வினாக்களுக்கு விடை எழுதுவதில் எங்கு தவறு நேரலாம், எவ்வாறு அவற்றை சரியான முறையில் எழுதுவது என்று அவர்கள் எடுத்துரைக்கும் பொழுதும் அவற்றை நன்கு கவனித்துக் குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். தேர்வு எழுதும் பொழுது அவற்றை நன்கு நினைவில் கொண்டு விடை காண வேண்டும்.

சில ஆசிரியர்கள் பெரிய பட்டதாரிகளாக இருந்த போதினும் கற்றுத் தரும் வித்தையை நன்கு கற்றவர்களாக இருக்க மாட்டார்கள். நான் கல்லூரியில் பயின்று கொண்டி ருந்த பொழுது எங்களுக்கு ஆங்கிலப் பேராசிரியராக இருந்த ஒருவர்-அவருடைய பெயரை நான் இங்கு குறிப்பிட விரும்ப வில்லை-எங்களுக்கு ஷேக்ஸ்பியர் நாடகத்தை நடத்தும் பொழுது வெறுமனே, பாடத்தைப் படித்துக் கொண்டே செல்வார். இடையிடையே புன்முறுவல் பூத்து அதனை இரசித்துக் கொண்டே செல்வார். ஆனால் எங்களுக்கோ அதனை விளக்க இயலாது திண்டாடுவார். நாங்களும்விளங்க இயலாது திண்டாடுவோம். இவ்வளவுக்கும் அவர் இலண்டன் நகர் சென்று கல்வி பயின்றவர்; ஷேக்ஸ்பியர் காவியங்கள் பற்றிய நிபுணர் என்று கருதப்பட்டவர். இத்தகைய ஆசிரியர்களும் இருக்கத் தான் செய்கின்றார்கள். எனினும் என் செய்வது? கூடியவரையிலும் அவர்கள் கூறுவதைக்

கவனித்துக் குறிப்பெழுதிக் கொள்வதே சாலச் சிறந்ததாகும். ஏனெனில் தேர்வு எழுதித் தீர வேண்டியவர்கள் நீங்களேயன்றி அவர்களல்லர்.

சில ஆசிரியர்கள் திறமை குறைந்தவர்களாகவும் இருக்கின்றார்கள். என் செய்வது? கூடியவரையிலும் அவர்கள் கூறுவதையும் நன்கு கவனித்துக் குறிப்பெழுதிக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஒன்றுமில்லாததற்கு ஏதாவது கிடைப்பின் அது நல்லதுதானே.

இவ்வாறு சில மாணவர்கள் செய்வதே இல்லை. அதன் காரணமாக அவர்கள் இவ்விதப் பலனை இழக்கிறார்கள். மன ஒருமையுடன் பாடத்தில கவனம் செலுத்துவதையும் இழக்கிறார்கள்; குறிப்பு எழுதிக் கொள்வதையும் இழந்து விடுகிறார்கள்.

அவர்கள் எண்ணம், "நாம் ஏன் குறிப்பெழுதிக் கொள்ள வேண்டும். எவராவது எழுதி வைத்திருப்பார்கள். அவற்றைத் தேர்வின் பொழுது வாங்கிப் படித்தால் போதும்" என்பதாகவே இருக்கிறது. பிறருடைய உழைப்பில் வாழ விரும்பும் இவர்களைப் பார்த்து நான் பெரிதும் வருந்துகிறேன். உழைக்க அஞ்சும் அவர்கள் எவ்வாறு வாழ்வில் பெரும் வெற்றியடைவார்கள் என்று எனக்கே வியப்பாக இருக்கிறது.

இவர்களைப் பற்றி ஓர் ஆசிரியர் குறிப்பிடும் பொழுது, "இவர்களுக்குத் தங்களுடைய குறிப்பேடுகளைக் கொடுக்கும் அச்செய்கை ஓர் அன்பு உதவி என்று கருதப்பட்ட போதினும் அந்த அன்பு உதவி ஒரு விரோதிக்கு, தன்னை வாணாள் முழுவதும் பழி வாங்கும் நோக்கத்துடன் விடாது துரத்தி வந்த விரோதிகளுக்குத் தான் செய்யப்பட வேண்டும். ஒரு விரோதியின் கற்பனையில் நிகழும் மாபெரும் கொடுமை அதுதான். உன்னால் உன்னுடைய காலின் மீது நிற்க இயலவில்லையானால் உன்னிடமிருந்து விரைவில் திரும்பப் பெறக்கூடிய தண்டத்தை வாங்கிப் பயன்படுத்தாதே!

ஏனெனில் அவை உன்னை விரைவில் தனியாக நடக்கும் ஆற்றலில்லாதவனாக ஆக்கிவிடும்" என்று எடுத்துரைக்கிறார்.

அது மட்டும் செய்வதோடு நிற்பதில்லை. அது உங்களைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடும். குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக் கொண்ட கதையாக உங்களுடைய நிலை ஆகிவிடும்.

ஆகையினால் நீங்களே சிரமத்தைப் பாராது குறிப் பெழுதிக் கொள்ளுங்கள்! நான் பள்ளியில் பயிலும் பொழுது கை நோவ நோவக் குறிப்பெழுதிக் கொண்டது இன்னும் நீங்காது என் உள்ளத்தில் பதிந்துள்ளது. அவ்விதம் குறிப்பெழுதிக் கொண்டதோடு நீங்கள் மன நிறைவு பெற்றுவிடாதீர்கள்! ஏனெனில் தேர்வு எழுதித் தேர்ச்சியுற வேண்டியவர்கள் நீங்களேயன்றி அக்குறிப்பேடுகளல்ல. ஆகையால் அவற்றை அவ்வப்போது பாடங்களுடன் வைத்துப் படித்து நன்கு விளங்கிக் கொள்ளுங்கள்!

நான் 'அவ்வப்போது' என்று கூறும் பொழுது காரணம் இல்லாமல் கூறவில்லை. அவ்வப்போது படிக்காது பின்னர் படித்துக் கொள்ளலாம் என்று விட்டு விட்டாலோ, பின்னர் நீங்கள் படிக்கும் பொழுது நீங்கள் குறிப்பெழுதியது உங்க ளுக்கே விளங்காமற் போனாலும் போய்விடும்.

பள்ளியில் வைத்துக் கட்டுரை எழுதுவதையும் ஆசிரியர் கள் தரும் வீட்டு வேலைகளையும் ஒழுங்காகச் செய்து அவர்களிடம் கொடுத்துத் திருத்திப் பெற்றுக் கொள்ளுங்கள்! அவற்றை ஒய்வு நேரங்களில் படியுங்கள்.

இவ்வாறு நீங்கள் ஆண்டுத் தொடக்கத்திலிருந்து பாடங்களை ஒழுங்காக, ஆனால் அதிகச் சிரமம் எடுத்துக் கொள்ளாது சிறிது சிறிதாகப் பயின்று வருவது மிகவும் நல்லது. ஆனால் சில மாணவர்களோ இவ்வாறு செய்யாததோடு மட்டுமல்ல காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகளுக்குக் கூட ஒழுங்காகப் படிப்பதில்லை. அத்தேர்வுகளுக்குப் படித்த

பகுதிகளை இறுதித் தேர்வில் நன்றாக எழுத இயலும் என்னும் உண்மையையும் அவற்றில் நல்ல மதிப்பெண்களைப் பெற்றால் அவை ஆண்டுத் தேர்வில் எவ்விதச் சிரமமுமின்றி வெற்றி பெறுவதற்கு உறுதுணையாக இருக்கும் என்ற உண்மையையும் அவர்கள் உணர்வதே இல்லை.

பாடங்களைப் படிப்பதிலும் சில முறைகள் இருக்கின்றன. பாடங்களைப் படிப்பதை அந்நிய நாட்டின் மீது படை யெடுத்து வெற்றி கொள்வதற்கு நிகராகக் கூறலாம். ஒரு படை வெற்றி கொண்ட பகுதிகளை வலுப்படுத்திக் கொண்டு மேற்கொண்டு முன்னேறினால்தான் அதனால் வெற்றிக்கு மேல்வெற்றியைப் பெற இயலும். அவ்விதம் செய்யாது இங்கு ஒரு கோட்டையை வெற்றி கொள்ளாமலோ அங்கு ஒரு குறுநில மன்னனைத் தோற்கடிக்காமலோ சென்று கொண்டிருந்தால் விரைவில் அவர்களெல்லாம் கிளர்ந்தெழுந்து அப்படையை நாலா பக்கங்களிலிருந்தும் சூழ்ந்து முறியடித்து விடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்த உண்மையைச் சிலர் நன்கு உணர்ந்து பாடங்கள் ஒவ்வொன்றையும் நிதானமாக ஆழ்ந்து படித்து விளங்கிக் கொண்டே செல்கிறார்கள். அவர்கள் படித்த பாடங்களில் எத்தகைய கேள்விகள் கேட்கப் படினும் அவற்றிற்கு எவ்விதத் தயக்கமுமின்றி உடனே விடை பகர்கிறார்கள்.

மற்றும் சிலர் பாடங்களை ஒன்றின் பின் ஒன்றாகப் படித்துக்கொண்டே செல்வார்கள். எல்லாப் பாடங்களையும் படித்து முடித்தபின் மறுபடியும் அப்பாடங்களைத் திரும்பப் படிப்பார்கள். திருப்புவதன் மூலம் அப்பாடங்களில் எத்தகைய கேள்விகள் கேட்கப்படினும் அவற்றிற்குச் சரியான விடை எழுதும் தகுதியைப் பெற்றுவிடுகிறார்கள். இதனைப் பலதடவை உழுது பயிரிடும் முறைக்கு உவமானமாகக் கூறலாம்.

இந்த இரண்டு முறைகளில் நீங்கள் எந்த முறையையேனும் பின்பற்றலாம். உங்களுடைய இயல்பைப்பொறுத்து இவற்றில் எதையேனும் நீங்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்! இரண்டும் உங்களுக்கு நற்பலன்களையே வழங்கும். அனால் மூன்றாவது முறையாகிய பாடங்களை மனமொன்றிப் படிக்காது பக்கங்களை மட்டும் புரட்டிக் கொண்டு செல்வதை நீங்கள் மேற்கொள்ள வேண்டாம். அவ்விதம் செய்வது ஓட்டை விழுந்த குடத்தில் தண்ணீரை ஊற்றிக் கொண்டிருப்பதற்கு நிகராகுமேயன்று வேறில்லை.

படித்தவற்றைத் திரும்பத் திரும்பப் படியுங்கள். இன்றைக்குக் கற்றுத் தந்த பாடங்களை இன்றைக்கே படிப்பதோடல்லாது முந்திய நாள் பாடத்தையும் திரும்பப் படியுங்கள். மாத இறுதியில் அந்த மாதத்தில் நடத்தப் பெற்ற பாடங்களையும் திரும்பப் படியுங்கள். இதைத் தவிர விடுமுறையின் போது எல்லாப் பாடங்களையும் திரும்பப் படியுங்கள்.

இவ்வாறு நான் கூறும் பொழுது, ''அடேயப்பா! இவர் என்ன இவ்வளவு வேலைகளைச்செய்யுமாறு கூறுகிறார். இவற்றை எல்லாம் செய்வதற்கு நேரமேது?'' என்று நீங்கள் வினவலாம். ஆனால் நீங்கள் நேரத்தை ஒழுங்காக வகுத்து வைத்துக் கொண்டீர்களானால் உங்களுக்குப் படிப்பதற்கு ஏராளமான நேரம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

எப்பொழுது படிக்க வேண்டும் என்பதைப் பற்றி ஒரு கவிஞர் குறிப்பிடும் பொழுது, ''இரவு தன்னுடைய வெள்ளி விளக்கை விண்ணிலே ஏற்றும் நேரம் இருக்கிறதே-அதுவே படிக்க வேண்டிய நேரமாகும்'' என்று கூறுகிறார்.

டெமாஸ்தனிஸின் சொற்பொழிவைக் கேட்ட பிதியாஸ் என்பவர் அந்தச் சொற்செல்வர் தம் வீட்டிலிருந்த பாதாள அறையின் கதவுகளை அடைத்துக்கொண்டு விளக்கேற்றிய பின் தம்முடைய சொற்பொழிவைத் தயார் செய்வதை

மனத்திற் கொண்டு, ''இதிலே நான் விளக்கின் மணத்தை நுகர்கிறேன்'' என்று கூறிய பொழுது அந்தச் சொற்போர் மன்னர் பளிச் சென்று பதில் கூறினார், ''ஆம் நண்பரே! ஆனால் உம்முடைய விளக்கும் என்னுடைய விளக்கும் ஒரே விதமான உழைப்பைக் காண்பதில்லை'' என்று. இதிலிருந்து டெமாஸ்தனிஸ் இரவில் விளக்கேற்றியபின் கடினமாக உழைத்துப் படித்தார் என்று அறிய வருகிறோம்.

ஆகையினால் நீங்கள் பொழுது பட்டதும் படிக்கும் பழகத்தை மேற்கொள்ளுங்கள். இரவு 8மணிக்கு உணவருந்திய பின் சற்று நேரம் உலவிவிட்டு இரவு 10-மணி வரையிலும் படியுங்கள். விடியலில் 5-மணிக்கு எழுந்திருந்து காலை 7-மணி வரையிலும் படியுங்கள். விடியலில் உடலும் உள்ளமும் நன்கு தெளிவாக இருக்கும். அப்பொழுது படிக்கும் பாடங்கள் நன்கு உங்களின் உள்ளத்தில் பதியும்.

முற்காலத்தில் வைகறையின் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் வழக்கத்தை மக்கள் பெற்றிருந்தனர். ஆனால் நாகரிகம் பெருகப் பெருகக் கதிரவன் கீழ்த்திசையைக் கிழித்துக் கொண்டு வெளிப்படுவதைக் காணும் பேற்றினை மக்கள் பெறாது படுக்கையில் கிடந்து புரண்டு கொண்டிருக்கும் வழக்கத்தைப் பெற்றிருக்கின்றனர்.

நாகரிகத்தின் உச்சியில் இருப்பதாகக் கருதப்படும் பாரிஸ் மாநகரத்தில்கூட 14-ஆம் நூற்றாண்டில் கடைகளெல்லாம் காலை நான்கு மணிக்கே திறக்கப்படும் வழக்கம் இருந்தது. அப்பொழுது பிரெஞ்சு மன்னர் காலை எட்டு மணிக்கு உணவு அருந்தும் வழக்கத்தைப் பெற்றிருந்தார்.

இவ்வாறு காலையில் எழுந்து அலுவலாற்றத் தொடங்குவதன் காரணமாக எவ்வளவோ வேலைகளைச் செய்ய இயலுகிறது. பப்பான் என்னும் பிரெஞ்சு அறிவியல் அறிஞர் தம்மை வைகறையில் தம்முடைய ஊழியன் ஜோஸப் எழுப்பி

விட்டால் ஒரு கிரௌன் நாணயம் அவனுக்கு அன்பளிப்புச் செய்வதாக வாக்களித்திருந்தார்.

ஆனால் அவன் அவரை வைகறையில் எழுப்பினாலோ அவன் மீது அவர் வசைமாரி பொழிவார். இவ்வாறு இரண்டு மூன்று நாட்கள் நிகழ்ந்தன. அதன்பின் அவர் அவனிடம் கூறினார். ''நான் உன்னை எவ்வளவுதான் வைதாலும் என்னை எழுப்பாது விடாதே'' என்று. அவ்வாறே செய்து வந்தான் ஜோஸப். ஜோஸப்பின் மீது வசைமாரி பொழிந்து கொண்டே எழுந்திடுவார் பப்பான். எனினும் எழுந்த ஒரு மணி நேரத்திற்குப்பின் அவனுக்குத் தாம் வாக்களித்த வண்ணம் ஒரு கிரௌன் நாணயம் அன்பளிப்புச் செய்வார். அவர் தாம் எழுதிய ஒரு டஜன் நூல்களுக்குத் தாம் தம் ஊழியன் ஜோஸபுக்கே கடன் பட்டிருப்பதாகக் கூறுகிறார்.

இவ்வாறு நான் வைகறையில் துயிலெழுந்து படிப்பதை வன்மையாக எடுந்துரைக்கும் பொழுது விரைவில் படுக்கைக் குச் செல்லும் வழக்கத்தை மேற்கொள்ளுமாறும் கூறாமலிருப் பதற்கில்லை. நள்ளிரவுக்கு முன்னுள்ள ஒரு மணி நேரத் தூக்கம் அதற்குப் பின்னுள்ள இரண்டு மணி நேரத் தூக்கத்துக்கு நிகராகும். ஆகையினால் எக்காரணத்தை முன்னிட்டும் இரவு 10-மணிக்கு மேல் உங்களுடைய அறையில் விளக்கெரிய வேண்டாம். இவ்வாறு நீங்கள் இரவு 10-மணிக்குப் படுக்கைக்குச் சென்று காலை 5-மணிக்குப் படுக்கையிலிருந்து எழுந்திருப்பீர்களேயானால் ஏழு மணி நேரம் தூங்கியவர்களாவீர்கள். இந்த அளவு தூக்கம் உங்களுக்குப் போதுமானதாகும்.

சிலர் ஒரே பாடத்தைப் பல மணி நேரம்வரை ஓயாது படித்துக் கொண்டிருப்பர். பின்னர் அவர்கள் களைப்புற்றுப் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை தூக்கி எறிந்துவிட்டு அதே அளவு நேரத்தை ஓய்வு கொள்வதாகக் கூறிக் கொண்டு

வீணே கழிப்பார்கள். இது தவறான ஓய்வு கொள்ளுதலாகும். மூளைக்கு ஓய்வு அளிப்பது ஒன்றுமே செய்யாது வெறுமனே இருப்பது மட்டுமல்ல, வேறு விதமான வேலைகளை அதற்குக் கொடுப்பதுமாகும் என்னும் உண்மையை நீங்கள் மறந்து விடக் கூடாது.

இதனையே அமெரிக்க மகாகவி லாங்க்பெல்லோவும், "மெதுவாக எரிந்து கொண்டிருக்கும் தீயை, விறகுகளை மாற்றி வைப்பது எவ்வாறு கொழுந்துவிட்டு எரியச் செய்யுமோ அதே போன்று படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மாற்றுவதும் மந்தமடைந்துள்ள அறிவைச் சுறுசுறுப்படையச் செய்யும்" என்று கூறிச் சென்றார். இந்த உண்மையை நீங்கள்மனத்திற் கொண்டு படிக்கும் பாடங்களை மாற்றி மாற்றிப் படிப்பீர்க ளானால் நீங்கள் களைப்படையாது அதிக நேரம் படித்துத் தேர்விலும் அதிகமான மதிப்பெண்களைப் பெற இயலும்.

ஆனால் அதற்காக நீங்கள் ஓயாது படித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் கூறவில்லை. "படிப்பில் அதிக நேரத்தைச் செலவிடுவது சோம்பலை உண்டுபண்ணும்" என்று அறிவிற் சிறந்த பேகன் கூறுகிறான். சோம்பலாக இருக்கக் கூடாதென்று எண்ணி அதிகமாகப் படித்துச் சோம்பலை உண்டுபண்ணிக் கொள்ளக் கூடாது.

சிலர் ஓயாது படித்துப் பைத்தியம் பிடித்தவர்களாக ஆகி விடுவதையும் பார்த்துள்ளேன். இதனயே பைபிளின் புதிய ஏற்பாடும், "அதிகமான படிப்பு உன்னைப் பைத்தியக்காரனாக ஆக்கிவிடுகிறது" என்று கூறுகிறது. இதனையே அமெரிக்க அறிஞர் பெஞ்சமின் ப்ராங்ளினும், "அறிய வேண்டியதை அதிகமாகப் படித்ததனால் சிலர் பைத்தியக்காரர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆனால் அறிய வேண்டிய நல்லவற்றைப் படித்ததனால் யார் பைத்தியக்காரர்களாகி இருக்கிறார்கள்?" என்று கேட்கிறார்.

எனவே எல்லாவற்றிலும் நடுநிலைமை வேண்டும். தேர்வு எழுதுவதென்பது சிரமமான செயல்தான். தேர்வு எழுதுவதைப் பற்றி ஓர் அறிஞன் குறிப்பிடும் பொழுது, "தேர்வுகள் நன்றாகப் படித்துத் தயாரானவர்களுக்குக் கூடச் சிரமமானதாகத்தான் இருக்கிறது. ஏனெனில் மிகப் பெரும் அறிவாளிகள் கூட விடை கூற இயலாத கேள்விகளைப் பெரிய முட்டாள்கள் கேட்டு விடலாம்'' என்று கூறுகிறான்.

ஆனால் மாணவர்களின் தகுதியை மதிப்பிடுவதற்கு அவர்களுக்குத் தேர்வு வைப்பதைவிட வேறு வழியில்லை. கிரேக்க அறிஞன் பிளேட்டோவினால் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தொடக்கப்பட்ட இந்தத் தேர்வு முறை இன்றும் மாற்றியமைக்க முடியாத முறையாகவே இருக்கிறது.

எனவே தேர்வில் தேறி அதன் மூலம் வாழ்க்கையிலும் வெற்றி காண விரும்பும் மாணவர்களாகிய நீங்கள் இறுதித் தேர்வுக்கு ஒழுங்கான முறையில் தயாராக வேண்டும். ஏனெனில் இதுதான் உங்களுடைய விதியைத் தீர்மானிக்கக் கூடிய தேர்வாகும்.

இறுதித் தேர்வு நெருங்க நெருங்கச் சிலர் வகுப்புகளுக்குக் கூடச் செல்லாமல்மிகவும் கவனமாகப் படிக்கத் தொடங்குவர். மற்ற நாட்களில் எல்லாம் விளையாட்டிலும் வீண் பொழுது போக்கிலும் கழிக்கும் ஒரு சிலர் தேர்வுக்கு ஒரு மாதத்திற்கு முன் அதிக அக்கறையுடன் படித்துச் சிறந்த மதிப்பெண்கள் பெறுவதைக் கண்டு இவர்களும் இவ்வாறு செய்கிறார்கள். இது பெரும் பேதைமையாகும்.

ஒரு சில மாணவர்கள் அவ்விதம் படித்துத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெறுகிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்கள் கூரிய அறிவும் சிறந்த நினைவாற்றலும் பெற்றிருப்பதேயாகும். உண்மை இவ்விதமிருக்க நடுத்தர அறிவு படைத்த மாணவர்களும் அவர்களேபோன்று செய்ய

முயலுவது தமக்கே தாம் தீமை விளைவித்துக் கொள்வதாக முடியுமேயன்றி வேறில்லை.

தேர்வுக்குச் சில நாட்களுக்கு முன்பிருந்து ஆசிரியர்கள் முக்கியமான கேள்விகளையும் அவற்றிற்கு எவ்வாறு விடை எழுதுவது என்பது பற்றியும் மாணவர்களுக்கு எடுத்துரைப் பார்கள். அப்பொழுது பள்ளிக்கு வராது வீட்டிலேயே அமர்ந்து படித்துக் கொண்டிருக்கும் மாணவன் அந்த நலனை இழக்க நேரிடும்.

ஆனால் இங்கு நான் ஓர் எச்சரிக்கை செய்ய விரும்பு கிறேன். ஆசிரியர்கள் முக்கியமான கேள்விகளைக் குறித்துத் தந்துள்ளார்கள், அவையே தேர்விலும் கேட்கப்படும் என்று எண்ணி அவற்றை மட்டும் நீங்கள் படித்துவிட்டு வாளா இருக்கக் கூடாது. அவர்கள் கூறியது ஒரு ஹேஸ்யமேயன்றி வேறில்லை. அவை வந்தாலும் வரலாம், வராமலும் இருக்கலாம். எனவே அவற்றை மட்டும் படித்துவிட்டு அவையல்லாத வேறு சில கேள்விகள் கேட்கப்படின் கையைப் பிசைந்துகொண்டு தேர்வு மன்றத்திலிருந்து ஏமாற்றத்துடனும் தோல்வியுடனும் எழுந்திருக்கக் கூடாது.

ஆகையினால் மாணவர்களாகிய நீங்கள் ஆசிரியர்கள் முக்கியமான கேள்விகள் என்று கூறியவற்றைச் சிறிது அதிகமாகப் படித்து வைத்துக் கொண்டு மற்றவற்றையும் தேர்வில் அவை பற்றிக் கேட்கப்படின் நல்ல முறையில் விடை எழுதும் வகையில் படித்து வைத்துக் கொள்ளுங்கள். பொதுவாகக் கூறுமிடத்து எல்லாவற்றையும் நன்றாகப் படித்து வைத்துக் கொள்ளுங்கள்.

முன் சென்ற நான்கைந்து ஆண்டுகளின் கேள்வித் தாள்களைச் சேகரித்து அவற்றில் கேட்கப்பட்டிருக்கும் கேள்விகளுக்கு ஆசிரியர்களின் உதவியுடன் விடைகள் தயாரித்து வைத்து அவற்றையும் தேர்வுக்குமுன் நன்கு படித்து

வைத்துக் கொண்டீர்களேயானால் அது உங்களுக்குத் தேர்வு எழுதப் பெரிதும் உதவியாயிருக்கும்.

தேர்வுக்குச் சில நாட்கள் வரை, தனித்துப் படித்து வரும் நீங்கள் தேர்வுக்குச் சில நாட்களுக்குமுன் உங்களோடு ஒத்த அறிவுள்ள ஓரிருவருடன் - அதிகமான பேர்களுடன் அல்ல- சேர்ந்து படித்தால் நல்ல பலன் ஏற்படும். ஆனால் தேர்வு நேரங்களில் தனித்தேதான் படிக்க வேண்டும். பிறருடன் சேர்ந்து படிப்பதாகக் கூறிக் கொண்டு நேரத்தை வீணாக்கி விடக் கூடாது.

உங்களுக்கு ஆண்டு முழுவதும் ஒன்றிரண்டு பகுதிகள் சரியாக விளங்காமல் இருக்கலாம். அவற்றில் தேர்வின் போது கேள்விகள் கேட்கப்பட்டால் என் செய்வது என்று கருதிக் கொண்டு தேர்வு நெருங்கும் நேரத்தில் அவற்றில் போய் உங்களின் மூளையை உடைத்துக் கொள்ளக் கூடாது. அவற்றை விட்டுவிட்டு அமைதியாக மற்றப் பாடங்களைப் படியுங்கள்! அவ்விதம் செய்வதே அறிவுடைமையாகும்.

ஆனால் சில மாணவர்களோ அவ்விதம் செய்யாது தேர்வு நெருங்கும் நேரத்தில் தங்களுக்கு ஆண்டு முழுவதும் விளங்காத அப்பகுதியில் கேள்விகள் கேட்கப்பட்டால் என் செய்வது என்று கருதிக்கொண்டு அவற்றில் போய்த் தங்களின் மூளையை உடைத்துக் கொள்கிறார்கள். அதன் காரணமாக அவர்களால் அதனையும் ஒழுங்காக விளங்கிக் கொள்ள இயலாததோடு மற்றப் பாடங்களையும் நன்கு படிக்க நேரம் இல்லாது போய்விடுகிறது. எனவே அவர்கள் தேர்வில் தோல்வியுறுகிறார்கள்.

சில மாணவர்களோ நாளைக்கு இன்ன பாடத்தில் தேர்வு நடக்கும் என்பதைத் திட்டவட்டமாக அறிந்து அதற்குத் தயார்செய்து வராது மற்றொரு பாடத்தைத் தவறாகப் படித்துக் கொண்டு வந்து பின்னர் என்ன செய்வதென அறியாது பேந்தப் பேந்த விழிக்கிறார்கள். இது தவறு. தேர்வு பற்றிய

அட்டவணையை நன்கு கவனித்து அதன்படி பாடங்களைப் படித்து வைத்துக் கொண்டு தேர்வு எழுதச் செல்ல வேண்டும்.

மற்றும் சிலரோ தேர்வுக்கு முந்திய இரவு, விடிய விடியப் படித்துவிட்டு-இவ்வாறு செய்வது எப்பொழுதும் தவறு, தூக்கம் வராதிருப்பதற்காக மருந்து அருந்துவதும் தவறு-பின்னர் தேர்வு மன்றத்தில் அமர்ந்ததும் தூக்க வெருட்சியினால் ஒழுங்காகத் தேர்வு எழுத இயலாத நிலையில் ஆகிவிடுகிறார்கள்.

வேறு சிலரோ தேர்வு பற்றி அளவற்ற அச்சம் கொள்வதன் காரணமாகத் தேர்வு நாளின் போது காய்ச்சல், வயிற்றோட்டம் ஆகிய நோய்களுக்கு ஆளாகி விடுகிறார்கள். அதன் காரணமாக, அவர்களால் தேர்வு எழுத இயலாது போய்விடுகிறது. தேர்வுக்காக அக்கறை செலுத்திப் படிக்க வேண்டுமேயல்லாது அதைக் கண்டு அஞ்சக் கூடாது. உங்களால் இயன்ற மட்டும் பாடுபட்டுப் படியுங்கள். அதற்கு மேல் உங்களால் அத்தேர்வில் தேற இயலவில்லையானால், அதனாலென்ன, தலையா போய் விடப் போகிறது? அடுத்த தேர்வு இருக்கவே இருக்கிறது. அதற்குள் படித்துத் தேறிக் கொள்ளலாம்.

பள்ளித் தேர்வில் தோல்வியுறுவதென்பது வாழ்க்கையிலும் தோல்வியுறுவதென்பதில்லையே. இராஜாஜி, பி.ஏ. வகுப்பில் தமிழ்ப் பாடத்தில் தேறாது தோல்வியடைந்து பின்னர் தேர்வு எழுதித் தேறியவர் தாமே. அறிஞர் அண்ணா பத்தாம் படிவத்தில் கணக்கின் காரணமாக இரண்டு முறை தோற்று மூன்றாவது முறை வெற்றி பெற்றவர் தாமே.

வின்ஸ்டன் சர்ச்சில் ஸேண்ட் ஹர்ஸ்டிலுள்ள இராணுவக் கல்லூரியில் சேர்வதற்கான பிரவேசத் தேர்வில் மூன்று தடவை தோற்று நான்காவது தடவைதானே வெற்றி பெற்றார். ஈன்ஸ்டீன் தம்முடைய பதினாறாவது வயதில் ஸூரிச்சிலுள்ள பாலிடெக்னிக்கில் புகுவதற்கான தேர்வில் தோல்வியுற்றார்.

கணித மேதை இராமானுஜம் எம்.ஏ. வகுப்பில் தோல்வியடைந்து ஆந்திர நாட்டுக்கு ஓடியவர்தாமே.

இந்திய அரசியலை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகித்த மாபெரும் வழக்கிறஞர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், எம்.எல். தேர்வில் தோல்வியுற்றவர்தாம். பின்னர் அவர் பெரும் வழக்கிறஞராக இருந்தபொழுது எம்.எல். விடைத்தாள்கள் அவரிடம் திருத்த வந்த சமயம், ''நான் எம்.எல். தேர்வில் தோல்வியுற்றவனாயிற்றே என்று அவர் சிரித்துக் கொண்டே கூறினாராம்.

இவ்வாறு பள்ளித் தேர்வில் தோற்ற பலர் பின்னர் தேர்வு எழுதித் தேறியோ, தேறாது இருந்தோ வாழக்கையில் வெற்றி பெற்றதற்கான சான்றுகள் உலக வரலாற்றில் எத்தனையோ உள்ளன. அவ்விதம் இருக்க நீங்கள் ஏன் தேர்வைக் கண்டு அஞ்ச வேண்டும்?

ஆகையினால் துணிவுடன் தேர்வு மன்றத்தில் நுழையுங்கள். கேள்வித் தாளைப் பெற்றதும் அமைதியாக இருந்து ஐந்து நிமிட நேரம் ஆழ்ந்து படியுங்கள். இங்கு 'ஆழ்ந்து' என்று நான் கூறுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. சிலர் மேலெழுந்தவாரியாகப் படித்துக் கேள்விகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாது கேள்வி ஒன்றாக இருக்க விடை வேறாக எழுதிவிடுகிறார்கள். நன்றாகப் படிக்கும் பையன் ஒருவன் இவ்வாறு தவறான விடை எழுதிப் பல தடவைகள் தேர்வில் தோற்றதை நான் அறிவேன்.

ஆகையினால் கேள்விகளை நன்கு ஆழ்ந்து படியுங்கள். கேள்விகள் கடினமாக இருந்தால் அதற்காக நீங்கள் மனம் சோர்ந்துவிட வேண்டாம். ''மற்றவர்களெல்லாம் நன்றாக எழுதுவார்களே, நமக்கு மட்டும் இவ்வாறு ஆகிவிட்டதே'' என்று எண்ணி நீங்கள் ஏங்கவும் வேண்டாம். கேள்விகள் உங்களுக்குக் கடினமாயிருப்பின் அது எல்லோருக்கும் அவ்விதமே இருக்கும் என்று உங்களின் மனத்தைத் திடப்

படுத்திக் கொண்டு கேள்விகளுக்கு விடை எழுதத் தொடங்குங்கள்.

முதலில் உங்களுக்குத் தெரியும் கேள்விகளுக்கான விடையை எழுதுங்கள். கேள்வியை ஒன்றிரண்டு முறை நன்கு படித்துவிட்டு அதற்கேற்ற பதிலை அழகாகவும் எழுதுங்கள். உங்களின் விடைகளைத் திருத்துவோரின் உள்ளத்தைக் கவரும் வகையில் நீங்கள் எழுதுவது இருக்கட்டும். எழுதுவது என்றால் எழுதும் முறை மட்டுமல்ல, எழுத்தும் என்று நான் கூற ஆசைப்படுகிறேன். அழகான சொற்றொடரால் முத்துக் கோத்தது போன்று நீங்கள் எழுதினால் அது திருத்துபவருக்குப் படித்துச் செல்வதற்கு இலகுவாகவும் இனிமையாகவும் இருக்கும். அதன் காரணமாக உங்களுக்கு நிறைய மதிப்பெண்கள் கிடைப்பதற்கு ஏதுவாகும்.

அதற்கு மாறாக நீங்கள் எதை எதையோ தெளிவற்ற முறையில் கிறுக்கித் தள்ளினால் திருத்துபவருக்கு அதனைப் படிப்பதற்கே பெரும் தலை வேதனை ஏற்பட்டுவிடும். அவரும் ஒரு மனிதர்தானே, அவருக்கு எத்தனையோ தொல்லைகள் இருக்குமல்லவா? அத்தொல்லைகளோடு இதுவும் ஒரு தொல்லையாக அவருக்கு ஆகிவிடுமாயின் உங்கள் பாடு உங்கள் விடைத் தாளின் கதி என்னவாகும் என்பதை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

இவ்வாறு நான் கூறுவதைக் கேட்டு எப்படி வடிவாக எழுதிக் கொண்டிருப்பது, எல்லாக் கேள்விகளையும் அவ்விதம் எழுத நேரமேது என்று நீங்கள் எண்ணலாம். இது நியாயமான எண்ணமேயாகும். முதல் சில பக்கங்களாவது நீங்கள் வடிவாக எழுதி, திருத்துபவரின் அன்பிற்கு உரியவராகிவிடுங்கள். அதன்பின் வேண்டுமானால் சிறிது அவசரமாக எழுதுங்கள். ஆனால் படிக்க இயலாவண்ணம் ஒருபோதும் கிறுக்கித் தள்ளிவிடாதீர்கள் எனறு நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சிலர் கேள்வியின் முதல் பகுதியை நன்கு எழுதி விட்டு பிற்பகுதியை அவசரமாக எழுத வேண்டுமே என்ற எண்ணத்தின் காரணமாகச் சுருக்கி விடுவார்கள். இது நல்லதல்ல. நேரத்தைக் கணக்குப் பண்ணிக் கொண்டு முற்பகுதியையும் சரி, பிற்பகுதியையும் சரி ஒரே ஒழுங்காக எழுத வேண்டும். இவ்வாறே மற்ற கேள்விகளையும் எழுத வேண்டும்.

கேள்விகளுக்குத் தக்கவண்ணம் நேரத்தைக் கணக்கிட்டு எழுதாது சிலர் நேரம் பற்றவில்லை என்று கூறி, சில கேள்விகளை எழுதாது விட்டு விடுகின்றனர். இது தவறாகும். ஒரு கேள்வியை விடை எழுதத் தெரியாது விடலாமேயொழிய நேரம் பற்றவில்லை என்று ஒரு போதும் விடக் கூடாது. ஆகையினால் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டு நேரத்தை ஒவ்வொரு கேள்விக்கும் நிதானமாக வகுத்து எழுதிக் கொண்டு வரவேண்டும். மணி அடிக்கப்படுவதற்குப் பத்து நிமிடத்திற்கு முன்பே எல்லாக் கேள்விகளுக்கும் பதில் எழுதி, எழுதியதைத் திருப்பிப் பார்க்க வேண்டும். இவ்விதம் செய்வதனால் விடைகள் மெருகு பெற்று முழுமை பெறும்.

தேர்வு எழுதும் பொழுது சிலர் பிறரிடம் விடையைப் பார்த்து எழுதவோ, கேட்டு எழுதவோ செய்கிறார்கள். இது மிகவும் கண்டிக்கத் தக்கதாகும். இத்தகையோருக்கு, தேர்வில் தோல்வியுறுவது ஓர் இழிவல்ல. இவ்வாறு பிறரிடமிருந்து 'காப்பி' அடித்துத் தேர்வதுதான் மிகவும் இழிவாகும் என்று கூற நான் ஆசைப்படுகிறேன். அவ்விதம் தேறுவதைவிடத் தேறாது இருந்து விடுவதே மேலானதாகும்.

அவ்விதமே காந்தியடிகளும் எண்ணினார். அவர் இளமையில் கல்வி அதிகாரியின் முன் தேர்வு எழுதும் பொழுது ஒரு கேள்விக்கான விடையை அவர் அறியாது விழித்த நேரத்தில் ஆசிரியர் அதனை மறைவாக அவருக்கு சொல்லிக் கொடுக்க முன் வந்த பொழுது அதனை ஏற்று அவர் எழுத

மறுத்து விட்டார். இது உங்களுக்கு ஒரு சிறந்த முன் மாதிரியாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

நாகரிகம் மிகுந்த அமெரிக்காவில காப்பி அடிப்பது பெரும்பாலோரின் வழக்கமாகிவிட்டது என்று கேள்விப் பட்டுள்ளேன். ஆனால் காந்தி பிறந்த நாட்டில் அது வேண்டாம் என்று உங்களை நான் வேண்டிக் கொள்கிறேன்.

ஆங்கில நாட்டில் தெரு ஓரங்களில் செய்தித் தாள்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் என்றும் செய்தித்தாள் வேண்டு வோர் அதற்கான விலையை அங்கு வைத்துவிட்டுச் செய்தித் தாளை எடுத்துச் செல்வார்கள் என்றும் கேள்விப்பட்டுள்ளேன்.

அதே போன்று மாணவர்கள் தேர்வு மன்றத்தில் நுழைந்து கேள்வித்தாளைத் தாங்களாகவே எடுத்து எவருடனும் யாதொன்றும் பேசாது தேர்வு எழுதி மணி அடித்ததும், எழுதிய தாளை மடித்து வைத்துச் செல்ல வேண்டும் என்றும் அத்தேர்வு மன்றத்தில் மாணவர்களேயன்றி வேறு எந்தக் கண்காணிப் பாளரும் இருக்கக் கூடாதென்றும் அத்தகைய நாள் வெகு விரைவில் வரவேண்டுமென்றும் நான் ஆசைப்படுகிறேன்.

நீங்கள் தேர்வு எழுதிவிட்டு வெளியே வந்ததும் எழுதி யதைப் பற்றி எவரிடமும் வீணாக உரையாட வேண்டாம். அவ்விதம் செயவதனால் ஒருவன் தவறான விடை எழுதியிருப் பின் வீணான மனச் சோர்வு ஏற்பட்டு அடுத்த தேர்வுக்குப் படிப்பதற்கான உற்சாகம் மழுங்கிவிடும்.

ஆதலின் தேர்வு எழுதி முடிந்ததும் நேரே வீட்டிற்கு வந்து சிற்றுண்டி அருந்திவிட்டுச் சற்று நேரம் அமைதியாகப் படுத்துறங்குங்கள்! அதன்பின் எழுந்து குளித்துவிட்டுச் சிறிது தொலை உலவி வாருங்கள். பிறகு அடுத்த நாள் தேர்வுக்கான பாடங்களைப் படியுங்கள்.

சில மாணவர்கள் தேர்வு எழுதி முடிந்து வந்ததும் விளையாடத் தொடங்கி விடுகின்றனர். இது நல்லதல்ல.

ஏனெனில் அதிகமான விளையாட்டின் காரணமாக அவர்கள் களைப்படைந்து இரவில் படிக்க இயலாது போய்விடுகிறது. அதனால் அவர்களுக்குப் பெரும் இழப்பு ஏற்படுகிறது. ஒருவன் எவ்வளவு தான் சிறந்த அறிவாளியாக இருந்த போதினும் தேர்வுக்கு முன்னுள்ள இரவில் படிப்பதுதான் மனத்தில் பதிந்திருக்கும். இதன் காரணமாகவே சில மாணவர்கள் தேர்வு நேரம் வரையில் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தேர்வு என்பது வாணிபம் செய்வதை ஒக்கும். ஒரு வணிகன், வாடிக்கைக்காரர்கள் கேட்கும் பொருள்களை விற்று ஆதாயத்துடன் வாணிபத்தை நடத்துவதுபோல நீங்களும் உங்களுடைய உள்ளத்திலே ஆண்டு முழுவதும் படித்துச் சேகரித்து வைத்திருக்கும் பொருள்களை ஆதாயத்துடன் விற்பனை செய்து வெற்றி பெற வேண்டுமானால் தேர்வுக்கு முன்னுள்ள நேரத்தில் அவற்றைத் திரும்பப் படித்து அவை பற்றிய உங்களுடைய நினைவைப் புதுப்பித்து வைத்துக் கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும்.

நான் இதுவரை கூறியவற்றை நீங்கள் நன்கு மனத்திற் கொண்டு இப்பொழுதிருந்தே தேர்வுக்குத்தயாராகுங்கள். தேர்வு எழுதியபின் நாம் நம்மால் இயன்றதைச் செய்தோம் என்ற மன நிறைவுடன் முடிவை இறைவனிடம் ஒப்படைத்து விட்டு அமைதியாக இருங்கள். இறைவன் உங்களுக்கு அருள் பாலிக்க போதுமானவன்.

7. உடல் நலன் பேணல்

தலைவர் அவர்களே! இளைஞர்களே!!

படிப்பாளிகளைப் பற்றி அமெரிக்க அறிஞர் எமர்ஸன் குறிப்பிடும் பொழுது, ''அவர்கள் தங்களையே தாங்கள் பலியிட்டுக் கொள்கிறார்கள். அவர்கள் மெலிந்தும் வெளுத்தும் காணப்படுகிறார்கள். அவர்களின் பாதங்கள் சில்லிட்டு இருக்கின்றன. மூளையோ கொதித்துக் கொண்டுள்ளது. அவர்களுடைய இரவுகள் தூக்கமின்மையில் கழிகின்றன:'' என்று கூறுகிறார்.

ஆம். இப்பொழுது என்முன் வீற்றிருக்கும் உங்களில் பலரைப் பார்க்கும் பொழுது அந்த அறிஞர் கூறிச் சென்ற வர்ணனைக்குச் சிறந்த சான்றாக நீங்கள் விளங்குவதையே காண்கிறேன். எஃகுக் கழுத்தும் பீடு நடையும் நிமிர்ந்த பார்வையும் உடையவர்களாக நீங்கள் இருப்பதற்கு மாறாகக் கூனிக் குறுகிக் குழவிழுந்த கண்களுடன்கேள்விக்குறிபோல் நீங்கள் தோற்றமளிப்பதைக் காண எனக்குப் பெரிதும் வருத்தமாக உள்ளது. இந்த இளம் வயதில் நீங்கள் இவ்வாறு இருப்பீர்களேயானால் உங்களின் நடுவயதிலும் முதுமை யிலும் நீங்கள் எவ்வாறு இருப்பீர்கள் என்பதை என்னால் எண்ணிக் கூடப் பார்க்க இயலவில்லை.

நீங்கள் எவ்வாறு படிப்பின் மீது கவனம் செலுத்து கிறீர்களோ அதேபோன்று நீங்கள்உங்களின் உடல் நலத்தின் மீதும் அக்கறை செலுத்துவது மிக மிக இன்றியமையாததாகும்.

அதனைப் பேணுவது உங்களின் நீங்காக் கடமைகளில் ஒன்று என்றும் கூற நான் ஆசைப்படுகிறேன். இதனையே ஆங்கில இலக்கிய மேதை ஜான்ஸனும், "உடல் நலனைப் பேணுவது மதக் கடமை போன்றதாகும். ஏனெனில் உடல் நலன்தான் எல்லாச் சமூகப் பண்பாடுகளின் அடிப்படையாகும்" என்று எடுத்துரைக்கிறார்.

அறிவும் உடல் நலனும் இறைவன் மனித இனத்துக்கு வழங்கிய இரண்டு அருட்பெரும் பேறுகளாகும். அவை மனிதனின் இரண்டு கண்கள் போன்றவையாகும். அவற்றில் ஒன்றிற்காக மற்றொன்றை இழப்பதென்பது நிரந்தரமாக ஒற்றைக் கண் பொட்டையாக இருப்பதற்கு நிகராகுமேயன்றி வேறில்லை.

ஆனால் மாணவர்களாகிய நீங்கள் 'படிக்கிறோம்' என்று கூறிக் கொண்டு உங்களுடைய உடல் நலத்தில் அக்கறை செலுத்தாதிருக்கிறீர்கள். இவ்வாறு நீங்கள் செய்வது பாரதியார் கூறிச் சென்றபடி கண்களை விற்றுச் சித்திரம் வாங்குவது போன்றதேயாகும் என்று நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

என்னுடைய தந்தையார் நான் பள்ளியில் பயின்று கொண்டிருக்கும் பொழுது, "நன்றாகப் படி! உடல் நலத்தையும் பேணிக் கொள்!!" என்று ஒவ்வொரு கடிதத்திலும் எழுதிய பொழுது எனக்கு அப்பொழுது வேடிக்கையாக இருந்தது. "ஒரேயடியாக உடல் நலனைப் பேணிக்கொள், உடல் நலனைப் பேணிக்கொள்" என்று எழுதுகிறார்களே என்று எண்ணினேன். ஆனால் அதன் இன்றியமையாத் தன்மையை நான் இப்பொழுதுதான் உணர்கிறேன்.

நீங்கள் வருங்காலத்தில் எவ்வளவுதான் பெரிய படிப்பாளியாகவும் அறிவாளியாகவும் ஆனபோதினும் சரி, உங்களுக்கு உடல் நலன் இல்லையாயின் நீங்கள் எவ்வாறு அந்த

அறிவையும் படிப்பையும் நல்ல முறையில் உங்களுக்கும் பிறருக்கும் நலன் வழங்கும் முறையில் பயன்படுத்த இயலும்? உடல் நலன் இல்லையேல் வாழ்க்கை ஒரு வாழ்க்கையாக இருக்குமா? அந்த வாழ்க்கைக்கு உயிர்தான் இருக்குமா? எனவேதான் ஓர் அறிஞனும், ''அதனை இறப்பின் பிரதிபிம்பம்'' என்று எடுத்துரைத்தான்.

கிரேக்க மகாகவி ஹோமரிடம், ''மனிதனின் மிகப் பெரும் பேறு எது?'' என்று வினவப்பட்ட பொழுது, ''மனிதத் தன்மை நிரம்பிய உடலில் வன்மையான மூளை அமைந்திருப்பதே யாகும்'' என்று எடுத்துரைத்தார் அவர். ஆம். பின்னையது முன்னயைதற்கு மாண்பு வழங்கியபோதினும் முன்னையதற் குப் பின்னையது இன்றியமையாதது என்பதில் ஐயமில்லை.

''நோயற்ற உடல் ஆன்மாவின் விருந்து மண்டபமாகும். நோயுற்ற உடல் அதனுடைய சிறைக் கூடமாகும்'' என்று அறிவிற் சிறந்த பேகன் எடுத்துரைத்தான். அவன் கூறியது முற்றிலும் உண்மையாகும். ஆனால் இதனைப் பெரும்பா லோர் உணர்கிறார்களில்லை. தாங்கள் உடல்நலத்துடன் இருக்கும் பொழுது அதனை எவ்விதப் பேணுதலுமின்றி வீணாக்கிவிடுகிறார்கள். அவர்களின் உடல் நலன் கெட்டு அவர்கள் தங்களுக்கு மட்டுமல்லாது மற்றவர்களுக்கும் பெரும் பாரமாக ஆனபின் தான் அவர்கள் உடல் நலத்தின் மதிப்பை உணர்கிறார்கள்.

இதனையே ஆங்கில எழுத்தாளர் கார்லைலும், ''உடல் நலமாக உள்ளவர்கள் தங்களின் உடல் நலத்தைப் பற்றி உணர்கிறார்களில்லை. நோயுற்றவர்கள்தாம் அதன் மதிப்பை உணர்கிறார்கள்'' என்று எடுத்துரைத்தார். அதன்பின் உணர்ந்துதான் என்ன, உணராது இருந்ததுதான் என்ன?

எவ்வாறு ஒரு முட்டை நொறுங்கி அதிலிருந்து மஞ்சள் கருவும் வெள்ளைக் கருவும் வெளிவந்துவிட்டால் அவற்றை

உள்ளே திணித்து முன்புபோல் அம்முட்டையை ஆக்குவது இயலாத செயலோ அதேபோன்றுதான் உடல் நலன் கெட்டு விட்டால் அதனைத் திரும்பவும் முன்பு போல் செய்வது இயலாத செயலாகும்.

ஆனால் அதற்காக உடல் நலத்தைப் பற்றியே ஓயாக் கவலை கொண்டு அதற்காக மருந்து முதலியவற்றை எப்பொழுது பார்த்தாலும் அருந்திக் கொண்டிருப்பதும் தவறு. இவ்வாறு செய்பவர்கள் துன்பம் தரும் நோய் நீக்கப் பெறுவதற்காகத் தங்களுக்கே தாங்கள் துன்பத்தை உண்டு பண்ணிக் கொள்கிறார்கள். கவிஞர் வர்ஜில் கூறுவதைப் போல, ''உடல் நலத்தைப் பேணுவதற்காக அவர்கள் கண்ட கண்ட மருந்தையெல்லாம் அருந்தி உடல் நலத்தையே கெடுத்துக் கொள்கிறார்கள்.

உடல் நலத்தின் மேன்மையைப் பற்றியும் அதனைப் பேணுவதில் நீங்கள் செலுத்த வேண்டிய அக்கறை பற்றியும் நான் உங்களிடம் வன்மையாக எடுத்துரைக்க ஆசைப்படு கிறேன். ஏனெனில் உடல் நலன் அவ்வளவு முக்கியமானது. செல்வர்கள் தங்களின் உடல் நலனுக்காகத் தங்களின் பொருள்கள் அனைத்தையும் செலவிடத் தயாராயிருக்கும் பொழுது ஒரு பரம ஏழை கூடப் பணத்திற்காகத் தன்னுடைய உடல் நலனைப் பலி கொடுக்கத் தயாராக இல்லாதிருப்பதி லிருந்து உடல் நலத்தின் மேன்மையை நீங்கள் நன்கு உணரலாம்.

எனவேதான் ஓர் அறிஞனும், ''பெறுதற்கரிய பேறுகளி லெல்லாம் உடல் நலன் மிகப் பெரும் பேறாகும். வெளுத்துப் போயுள்ள மிதியடி தயாரிக்கும் ஒரு தொழிலாளி நோயுற்ற மன்னனை விட மேலானவனாவான்'' என்று எடுத்துரைத்தான். இதனையே அமெரிக்க அறிஞர் எமர்ஸனும், ''எனக்கு உடல் நலனையும் ஒரு நாளையும் கொடு. நான் பேரரசர்களின்

ஆடம்பரங்களையெல்லாம் நசைப்புக்குரியதாக ஆக்கிவிடு கிறேன்.'' என்று அறை கூவல் விடுகிறார்.

உடல் நலனைப் பேணுவதற்கு முதல் வழி ஓய்வு கொள்வதாகும். ஆனால் மாணவர்களாகிய உங்களில் சிலர் ஓயாது படிக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருக்கிறார்களே யொழிய ஓய்வு கொள்ளும் வழக்கமே இல்லாதிருக் கிறார்கள். அறிவோடு கூடிய ஓய்வு ஒருவனுக்குத் தெம்பு வழங்குகிறதென்பதையும் அதனை வீண் என்று கருதுவது தவறு என்பதையும் அவர்கள் உணர்கிறார்களில்லை.

ரோமானியக் கவிஞன் ஓவிட் கூறுவது போல, ''ஓய்வும் வேலையும் மாறி மாறிச் செய்வது நீண்ட காலம் ஒருவனை வாழுமாறுசெய்கிறது'' என்னும் உண்மையையும் அவர்கள் அறிவதில்லை.

படிப்பதைப் பற்றி ஓர் அறிஞன் கூறும் பொழுது, ''படிப்பின் நடுவே சில நிறுத்தங்கள் உள்ளன. அவை பார்வைக்குச் சோம்பல் போலவும் தோன்றும். அது உணவு செரிப்பது போன்ற ஒரு நிலையாகும். அந்த ஓய்வு நேரத்தில் புது முயற்சியாற்றுவதற்கான தெம்பை உடல் அணுக்கள் பெறுகின்றன. தரிசாகக் கிடக்கும் நிலம் உழுது பயிரிடப் பெறுவதற்கான தன்மையைப் பெறுவதற்கு இதனை நிகராகக் கூறலாம்'' என்று குறிப்பிடுகிறான்.

ஆகையினால் மற்றோர் அறிஞர் கூறுவது போல, ''நிச்சயமாக, மனிதனுக்கு எப்பொழுதும் வேலை மயமாக இருக்க வேண்டும் என்பதில்லை. புனிதமான சோம்பல் என்று ஒன்று உண்டு. அதனை அபிவிருத்தி செய்வதே இப்பொழுது புறக்கணிக்கப் பெறுகிறது. அது அஞ்சத் தக்கதாகும்.''

எனவேதான் இந்தப் புனிதமான சோம்பல் உங்களுக்கு வேண்டும். அதனை நீங்கள் ஒருபோதும் புறக்கணிக்கக் கூடாது. வெற்றியும் அதுவும் உடன் பிறப்புப் போன்றவை

யாகும் என்று கூற நான் ஆசைப்படுகிறேன். ''எஃகினால் செய்யப்பட்ட இயந்திரங்களைக் கூட நீண்ட நேரம் தொடர்ச்சியாக ஓடவிடக் கூடாது. அவற்றிற்கும் சிறிது ஓய்வு கொடுத்துச் சூடு மாறிய பின் மீண்டும் செயல்படுத்த வேண்டும்'' என்று பொறி இயல் வல்லுனர்கள் கூறுகிறார்கள். அவ்விதமானால், தசையாலும், எலும்பாலும், இரத்தத்தாலும் உண்டு பண்ணப்பட்ட உடலாகிய இயந்திரத்தை நாம் எவ்வளவு மென்மையாகப் பயன்படுத்த வேண்டும் என்பதை நீங்களே சிந்தித்துக் கொள்ளுங்கள்.

ஆகையினால் படிப்பின் இடையிடையே சற்று ஓய்வு கொள்ளுங்கள். புத்தகப் பூச்சிபோன்று எப்பொழுது பார்த்தாலும் புத்தகங்களைக் கட்டி அழுது கொண்டிராதீர்கள். படிக்க வேண்டிய நேரத்தில் படியுங்கள். மற்ற வேளைகளில் உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடிய பொழுது போக்குகளில் ஈடுபடுங்கள். உங்களின் நண்பர்களுடன் பல்வேறு செய்திகள் பற்றி இனிமையாக உரையாடிக் கொண்டிருங்கள்.

கோடை காலத்தில் மரத்தின் நிழலிலே படுத்துப் பறவை களின் இன்னிசையை நுகர்ந்து கொண்டிருங்கள். அல்லது வானவெளியில் மேகங்கள் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருப் பதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருங்கள். அல்லது வானொலிப் பெட்டியைத் திறந்து இசையமுதம் பருகிக் கொண்டிருங்கள். அல்லது டேபிள் டென்னிஸ், காரம் போன்ற உள் அரங்கு விளையாட்டுக்களை விளையாடிக் கொண்டிருங்கள். இவை தீயைக் கொழுந்து விட்டெரியச் செய்யும் மென்காற்றுப் போன்றவையாகும். இவை உங்களுடைய அறிவுக்கும் உடலுக்கும் தெம்பு வழங்கும் என்பதில ஐயமில்லை.

''எப்பொழுதும் வளைக்கப்பட்டிருக்கும் வில் விரைவில் முறிந்துவிடும். எப்பொழுதும் வேலை செய்து கொண்டிருக்

கும் மனித உடல் விரைவில் உடைந்துவிடும்'' என்று ஸ்பானியக் கவிஞன் ஸெர்வாண்டிஸ் கூறிய இறவாவரம் பெற்ற பெருமொழியையும் நீங்கள் நன்கு உணர்ந்து நினைவு வைத்துக் கொள்ள வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஆனால் அதற்காக நீங்கள் ஒரேயடியாக ஓய்விலும் உல்லாசப் பொழுதுபோக்கிலும் உங்களுடைய நேரத்தை வீணாக்கிவிடக் கூடாது. ஓய்வும், உல்லாசப் பொழுது போக்கும் சோற்றுக்குக் கறிபோன்று இருக்க வேண்டுமே யன்றி அவையே சோறு போன்று அமைந்துவிடக் கூடா தென்று நான் உங்களுக்கு எச்சரிக்கை செய்ய ஆசைப்படு கிறேன்.

ஓய்வும், உல்லாசப் பொழுதுபோக்கும் உடலுக்கும் உளத்திற்கும் நன்மை பயப்பதற்கு இன்றியமையாதது போல உடலுக்குப் பயிற்சியளிப்பதும் இன்றியமையாததாகும். ''நீங்கள் உடற்பயிற்சியை மேற்கொள்ளின் எவ்வளவு வலிய தசைநார்களைப் பெற்றிருப்பதைக் காண்பீர்கள்'' என்று உரோமானியத் தத்துவப் பேரறிஞன் எபிக்டெடெஸ் வாயார்ந்து கூறினான்.

முற்காலத்திலெல்லாம் உடற்பயிற்சிக்குப் பெரிதும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்தது. உடல் உரனில்லாத வன் வாழ்க்கையிலே பின்னுக்குத் தள்ளப்பட்டான். தன்னை யேதான் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய தவிர்க்க முடியாத நிலையின் காரணமாகவும் வேற்று நாட்டரசன் படையெடுத்து வரின் ஒவ்வொரு குடிமகனும் போரணியில் சேர்ந்து வீரப் போராற்ற வேண்டிய சூழ்நிலையின் காரணமாகவும் அரசன் முதல் குடிமகன் வரையில் வாட்போர், விற்போர் ஆகியவற்றில் சிறந்த பயிற்சி பெற்று விரிந்த மார்பும் திரண்ட புயமும் உள்ளவர்களாக விளங்கினார்கள்.

அக்காலத்தில் புலவர்கள் தாம் உடல் உரம் அற்றவர்களாக இருந்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். அனால் இப்பொழுது பார்த்தோமானாலும் பெரும்பாலோர் உடல் உரம் அற்றவர்களாகவே இருக்கின்றனர். அதிலும் படித்த இனத்தார் அறிவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து உடல் நலனையே கெடுத்துக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இந்நிலை மாறியாக வேண்டும்.

அமெரிக்காவிலுள்ள இளைஞர்கள் ஆங்கில நாட்டுடைய வும், ரஷ்ய நாட்டுடையவும் இளைஞர்களைவிட உடல் உரம் குறைந்தவர்களாகயிருக்கிறார்கள். அதனால் அவர்களின் தாங்கும் ஆற்றல் குறைந்துவிட்டது. விளையாட்டுக்களிலும் மற்றவர்களைவிடச் சிறந்து விளங்கவில்லை என்பதற்காக அவ்வரசாங்கம் இளைஞர்களின் உடற்பயிற்சி பற்றிய வரையில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறது.

ஆகையினால் நீங்கள் இளைமையிலிருந்தே உங்களு டைய உடல் நலனில் கவனம் செலுத்தி வாருங்கள். வகுப்பு முடிந்ததும் விளையாட்டு வெளி சென்று உங்களுடைய பாடங்களைப் பற்றிய எண்ணங்களையெல்லாம் மறந்து விளையாடுங்கள். இவ்விதம் நீங்கள் விளையாடுவது உங்களுடைய உடலுக்கு மட்டு மல்ல, உளத்திற்கும் நன்மை பயக்கும், உங்களுடைய மூளையும் புதுத் தெம்பைப் பெறும்.

சிலபொழுது விளையாட விருப்பமில்லையானால் உங்களின் கருத்தொத்த நண்பர்களுடன் சென்று உலவி வாருங்கள். அவர்களுடன் உரையாடிச் செல்வது நீங்கள் சிரமமின்றிச் சற்று அதிகத் தொலை நடந்து செல்வதற்கு வழி கோலும்.

மைசூர் திவானாக இருந்த விஸ்வேஸ்வரையா தம்முடைய நூறாவது வயதிலும் உடல் உரம் பெற்றிருந்தாரென்றால் அதற்கு ஒரு காரணம், அவர் நாள் தவறாது உலவச் சென்று

பொருளடக்கம்

வந்ததுதான். அவர் நாளொன்றுக்கு ஒன்றரை மைல் தொலை உலவி வருவார்.

நூறு வயதுக் கிழவர் ஓர் இளைஞர் போன்று நாளொன்றுக்கு ஒன்றரை மைல் தொலை உலவி வருவாரென்றால் இளைஞர்களாகிய நீங்கள் கிழவர்கள் போன்று மூலையில் குந்திக் கொண்டு கிடப்பது எவ்வளவு அறிவீனம். அது பின்னர் உங்களுடைய உடல் நலனை எவ்வாறு கெடுத்து உங்களுடைய மூளையை எவ்வாறு வன்மை இழக்கச் செய்து உங்களை யாதொரு வேலைக்கும் பயனற்றவர்களாக ஆக்கி விடுகிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

முழு வாழ்வு வாழ்வதற்காக இறைவனால் படைக்கப்பட்ட மனிதனை அது எவ்வாறு அரைகுறை வாழ்வு வாழ்ந்து விட்டுச்செல்லுமாறு செய்கிறது என்பதையும் சிந்தித்துப் பாருங்கள். அவ்விதம் ஆகாது நீங்கள் உடல் நலமும், உள உரமும், அறிவுவன்மையும் பெற்று நீடு வாழ்ந்து நெடும் பணியாற்ற வேண்டுமென்று நான் ஆசைப்படுகிறேன்.

❖ ❖ ❖